Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 24+16 | விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :92 மாசி 17ஆம் நாள் சனிக்கிழமை 29 பெப்ரவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051

VS

81/10 110/2

VS

313/9(dec) 64/4

## சடலம் மீட்பு

வவுனியா, பெப். 29

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தோட்டக் கிணற்றிலிருந்து இளைஞனின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித் 11 ➤

## முதியவர் உயிரிழப்பு!

கிளிநொச்சி ,பெப்.29

சாராயமென நினைத்து தவறுதலாக கிருமிநாசினியை அருந்திய முதியவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றுள் 13 ➤

## சிறப்புச் சர்வதேச தீர்ப்பாயத்தை இலங்கையில் நிறுவுங்கள்!

### ஜெனிவாவில் கஜேந்திரகுமார் நேற்று மீண்டும் வலியுறுத்து

ஜெனிவா, பெப். 29

நீதியை நிலைநாட்ட மறுதலிக்கின்ற நாடொன்றில், குற்றவியல் நீதியை நடைமுறைப்படுத்துவதற்கான வல்லமைகள் இந்த மனித உரிமை பேரவைக்கு மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்கின்றது என்பதை ஏற்று, இப்போதாவது, இலங் 13 ➤

முச்சந்தி முரளி




## கச்சதீவிலும் 'கொரோனா' கண்காணிப்பு!

யாழ்ப்பாணம், பெப். 29

அடுத்த வாரம் நடக்கவுள்ள கச்சதீவு அந்தோனியார் உற்சவத்தின் போது, கொரோனா (கொவிட் 19) வைரஸ் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளது. சுகாதார அமைச்சு இது தொடர்பில் நட 13 ➤

# எங்களின் இறைமையில் தலையிடவே முடியாது

## ஐ.நா. ஆணையரின் அறிக்கை தொடர்பில் சீறுகிறார் மஹிந்த



கொழும்பு, பெப்ரவரி 29

இலங்கைக்கு என்று இறைமை இருக்கின்றது. கொள்கை இருக்கின்றது. சட்ட வரையறைகள் இருக்கின்றன. அரசமைப்பு இருக்கின்றது. இவையெல்லாவற்றையும் மீறி உள்விவகாரங்களில் சர்வதேசம் தலையிடவே முடியாது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்கள் தொடர்பான எமது நிலைப்பாடுகளில் எந்த மாற்றமும் கிடையாது. இதை ஐ.நாவும் சர்வதேச நாடுகளும் நன்கு உணர்ந்து செயற்பட வேண்டும். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 13 ➤

உள்ளே

தேர்தல் கூத்து

## ஒப்பந்தகாரர் தெரிவாகாமலே சப்ரிகமவுக்கு அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், பெப். 29

சப்ரிகம திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வீதிகள் மற்றும் கட்டடங்களுக்கான ஒப்பந்தகாரர்கள் தெரிவு செய்யப்படாமல் அடிக்கல் நடும் நிகழ்வுகள் இன்று இடம்பெறவுள்ளன. மார்ச் 2ஆம் திகதி நள்ளிரவு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் இந்தப் பணிகளை முன்னெடுக்க முடியாது என்பதற்காக அவசர அவசரமாக அடிக்கல் நடும் 11 ➤

## ஐ.நாவால் இலங்கையை எதுவும் செய்யமுடியாது!

### பச்லெட் அம்மையாரின் அறிக்கைக்கு விமல் வீரவன்ச சண்டித்தனப் பதில்

கொழும்பு, பெப். 29

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து இலங்கை விலகியமை நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் சரியானதே. இதை மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் புரிந்து கொள்ள 13 ➤

## பட்டதாரிகளுக்கு பதறியடித்து கடிதங்களை அனுப்பியது அரசு!

### 5 ஆண்டுகளுக்கு அசையவே முடியாது! ஓராண்டுக்கு ரூ.20 ஆயிரம் மட்டுமே!!

கொழும்பு, பெப். 29

எதிர்வரும் 2ஆம் திகதி நள்ளிரவு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் அரசால் நியமனங்கள் வழங்க முடியாமல் போய்விடும். இதன் காரணமாக வேலையற்ற பட்டதாரிகளுக்கு அவசஅவசரமாக நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 12 ➤

## தனியார் கல்வி நிலையத்துக்குச் 'சீல்'

யாழ்ப்பாணம், பெப். 29

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள் 5 உணவகங்கள், ஓர் வெதுப்பகம் மற்றும் பிரபல தனியார் கல்வி நிலையம் என்பன சுகாதாரச் சீர்கேடு காரணமாக நேற் 13 ➤

## ஐ.நா. விவகாரம் அறிக்கை விரைவில்

### சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 29

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களின் இணை அனுசரணையிலிருந்து இலங்கை அரசு விலகியமை குறித்தும், அதைக் கண்டித்தும், இலங்கை அரசின் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை 12 ➤

# வடக்கு நுண்நிதிக் கடன் சலுகை அரசு அறிவிப்பு

கொழும்பு, பெப். 29

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் நுண்கடன் சுமையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அதிலிருந்து மீண்டெழ நுண் நிதி கடன் வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது. இதற்காக 542 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், ஒரு நபருக்கு உயர்ந்தபட்சமாக 60 ஆயிரம் ரூபா வரை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் பல்வேறு நுண் நிதி நிறுவனங்களில் கடனைப் பெற்றுக் கொண்டுள்ள கிராமத்தில் குறைந்த வருமானங்களைப் பெறும் மக்கள் இந்தக் கடன் சுமையால் பெரிய பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். நுண் கடனிலிருந்து மீண்டெழ முடியாதுள்ள இவர்களுக்கு சலுகைகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளது. இதன் கீழ் ஆகக் கூடிய கடன் வரையறையாக ஒரு நபருக்காக 60 ஆயிரம் ரூபா வரை அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு கிராமிய வங்கி மற்றும் சிக்கன மற்றும் கடன் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் கூட்டுறவு சங்கங்கள் ஊடாக கடன் ஆலோசனை முறை ஒன்று இவர்களுக்கான நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கடன் ஆலோசனை முறையை நடைமுறைப்படுத்துவதற்காக 542 மில்லியன் ரூபா திறைசேரியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது - என்றார்.

(ஒ.5,24)

# ஐ.நாவின் உறுப்புரிமையிலிருந்து இலங்கையை வெளியேற்றுங்கள்

## இப்படிப் பரிந்துரைக்கிறார் விக்கி

*யாழ்ப்பாணம், பெப். 29*

*பாதுகாப்புச் சபையின் பரிந்துரையின் பேரில் பொதுச் சபையானது ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் இலங்கை தொடர்ந்து உறுப்புரிமை கொண்டு நிலைக்க வேண்டுமா? என்பதை மீள் பரிசீலனை செய்ய முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றோம். இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.*

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சர்வதேச சமூகத்தினர் முன்னிலையில் தொடர்ந்து பத்தாண்டு காலமாக தனது கடப்பாடுகளைத் ஏற்று வந்த இலங்கை அதே தொடர் ஒழுங்குடன் அவற்றிற்கு மதிப்புக் கொடுக்கத் தவறி வந்துள்ளது. தன் பாற்பட்ட பல கடப்பாடுகளை நிறைவேற்றாத இலங்கை, போர்க்குற்றங்கள், மனித இனத்துக்கெதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை சம்பந்தமாகப் பதிலளித்தலுக்கான பொறிமுறையொன்றை உருவாக்க் தொடர்ந்து மறுத்து வந்தமை அதன் பிழையான செயல்களுள் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

'பிரிவினைப் பயங்கரவாதம் சார்பாக 2009ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் இன்று வரையில் இலங்கையில் ஒரு தோட்டா கூட சுடப்படவில்லை' என்று பெருமையுடன் கூறிய அமைச்சர் குணவர்த்தன, அப்படியாயின் ஏன் 1979ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மிகக் கொடூரமான பயங்கரவாத (தற்காலிக)த் தடைச் சட்டத்தை இதுவரை இலங்கை கைவாங்கத் தவறியுள்ளது என்பது பற்றிக் காரணம் கூறத் தவறியுள்ளார்.

கற்றுணர்ந்த பாடங்கள், மீள் நல்லிணக்க சமரச ஆணைக்குழுக்களை நியமிப்போம் என்று 2010ஆம் ஆண்டு கூறிய கூற்றின் மறு உருவமே கடந்த 26ஆம் திகதி உள்ளக விசாரணை ஆணைக்குழுவை நியமிப்போம் என்று ஜெனிவாவில் கூறிய கூற்று. இவ்வாறான உள்ளக விசாரணை ஆணைக்குழுவை அமைப்போம் என்ற இலங்கையின் புதிய கூற்று நடைமுறைப்படுத்தப்பட்டாலும் இனிவரும் பத்து வருடங்களில் கூட உண்மையைக் கண்டறிய முன்னேற்றம் எதுவும் ஏற்படாது என்பதே யதார்த்தம். இலங்கையின் இவ்வாறான வாக்குறுதிகள் மதிப்பற்ற வாக்குறுதிகள். காரணம் உண்மையைக் கண்டறிய வேண்டும் என்ற எண்ணம் தொடர்ந்து வந்துள்ள சிங்களப் பெரும்பான்மை அரசுகளுக்கு என்றுமே இருந்ததில்லை.

எனவே ஐ.நாவின் ஒருமித்த கருத்தை உதாசீனம் செய்யும் இந்தச் செயற்பாடு சம்பந்தமாக போதுமான பதில் நடவடிக்கையை சர்வதேச சமூகம் எடுக்க வேண்டும் என்பதே எமது திடமான வேண்டுகோள். தனது உலகளாவிய நியாயாதிக்க அதிகாரத்தைப் பாவிக்க வேண்டிய கடப்பாடு தற்போது சர்வதேச சமூகத்தைச் சார்ந்துள்ளது. அதைப் பாவித்து மிகக் கொடூரமான இவ்வாறான குற்றங்களைப் பற்றி ஆராயும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் அல்லது அதே மாதிரியான அதிகாரம் கொண்ட வேறு மன்றங்களின் முன் இலங்கையின் படையணியினரின் பணியாளர்களை நிறுத்த சர்வதேச சமூகமானது முன் வர வேண்டும்.

ஐ.நா. பிரேரணைகளைத் தொடர்ந்து மதிக்காது மீறி வந்துள்ள இலங்கையின் நடத்தையையும் நாட்டின் மக்களிடையே குறிப்பிடட சில பகுதியினருக்கு எதிராக அரசின் அனுசரணையுடன் பலகாலமாக நடாத்தி வந்த தவறான செயல்பாடுகளையும் கணக்கில் எடுக்கும் போது இலங்கையை ஐ.நா. பட்டய உறுப்புரை 6 இன் கீழ் முன்னிறுத்தி நடவடிக்கை எடுக்கலாம் என்றே நாம் நம்புகின்றோம்.

பாதுகாப்புச் சபையின் பரிந்துரையின் பேரில் பொதுச் சபையானது ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் இலங்கை தொடர்ந்து உறுப்புரிமை கொண்டு நிலைக்க வேண்டுமா என்பதை மீள் பரிசீலனை செய்ய முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

இன்று வரையில் இலங்கை உலகை உதாசீனம் செய்து வந்துள்ளது. உலகானது நட்வடிக்கை எடுக்க இப்போது தருணம் உதயமாகியுள்ளது. ஒரு உறுப்பு நாடு தனது கடப்பாடுகளை மீற இன்று ஐக்கிய நாடுகள் இடமளித்தால் நாளை இந்த உலக நிறுவனத்தின் சாவு மணியைக் கேட்க நேரிடும், என்றுள்ளது.

(ஒ.5)

# திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 3பேர் கைது

கிளிநொச்சி, பெப். 29

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் மூவரைக் கைது செய்துள்ளதாகப் பளைப் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

முகமாலை இந்திராபுரம் பகுதியில் ஒரே இரவில் மூன்று வீடுகளில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் கட்டைக்காட்டில் ஒருவர் சில தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்தார். அவரிடமிருந்து திருடப்பட்ட அலைபேசிகள், மோட்டார் சைக்கிள் பாகங்கள் என்பன மீட்கப்பட்டிருந்தன. அவர் வழங்கிய தகவலுக்கு அமைவாக மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர். சங்கானை மற்றும் மானிப்பாயைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதாகியுள்ளனர்.

இவர்கள் நீதிமன்றில் முற்படுத்த ப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(ஒ.5,6)

# அமெ. தூதரகம் முன்னால் தனி ஒருவர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப். 29

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக தனி நபர் ஒருவர் நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்தார்.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டார். இலங்கையின் தேசியக் கொடியையும் பதாகைகளையும் கைகளில் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டார்.

(ஒ.5,22)

## கஞ்சாவைக் கைவிட்டு தப்பியவர்

# ஓராண்டின் பின்னர் பளையில் கைது

கிளிநொச்சி, பெப். 29

70 கிலோ கஞ்சாவை உடமையில் வைத்திருந்த சந்தேகத்தில் பொலிஸார் கைது செய்யச் சென்றபோது தப்பிச் சென்ற சந்தேக நபரைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

கடந்த ஆண்டு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், கஞ்சாவுடன் வந்ததாகத் தெரிவித்து சந்தேக நபரைக் கைது செய்ய முற்பட்டனர். அவர் 70 கிலோ கஞ்சாவையும் 35 பொதிகளாக்கியிருந்த நிலையில் அவற்றைக் கைவிட்டுச் சென்றிருந்தார். அவரைப் பொலிஸார் தேடிவந்தனர்.

இந்த நிலையில் பளை நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் அவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

(ஒ.5,6)

# இன்னும் முடிவில்லை இறுதிச் சுற்று நாளை

கொழும்பு, பெப். 29

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஐக்கிய தேசிய சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்குமிடையிலான முக்கியத்துவமிக்க சந்திப்பொன்று நாளை நடைபெறவுள்ளது. இரு தரப்பிலிருந்தும் மூத்த உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர்.

பொதுத்தேர்தலில் போட்டியிட வேண்டிய சின்னம் தொடர்பில் இதன்போது இறுதி முடிவெடு க்கப்படும் என்று ஐக்கிய தேசிய சக்தியின் பொதுச்செயலர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று மாலை கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய சக்தியின்கீழ் போட்டியிடும் வகையில் கட்சி யாப்பில் திருத்தம் மேற்கொள்வதற்கு செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது.

வேட்புமனு வழங்கல் உட்பட மேலும் சில விடயங்களை முன்னெடுக்கும்போது அதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தலைவரின் அனுமதி அவசியம் எனவும் வலியுறுத்தப்பட்டுள் ளது.

அதேவேளை, சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய தேசிய சக்தியின் ஆரம்ப நிகழ்வு மார்ச் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கு முன்னர் சின்னம் தொடர்பில் இறுதி முடிவை எடுக்கும் நோக்கிலேயே முதலாம் திகதி சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ.5,44)

# அடிப்படைவாதிகள் இல்லாத நாடாளுமன்றை நிறுவுவோம்

## கோத்தா அரசு கூறுகிறது

யாழ்ப்பாணம், பெப். 29

அடிப்படைவாதிகள் இல்லாத அனைத்து இன மக்களையும் இணைத்துக் கொண்ட நாடாளுமன்றத்தை உருவாக்குவதே எமது நோக்கம். அடிப்படைவாதிகளின் பேரம்பேசும் நடவடிக்கைக்கு இம்முறை முற்றுப்புள்ளி வைப்போம். இவ்வாறு இராஜாங்க அமைச்சரும் அரசின் இணை ஊடகப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலுக்குப் பின்னர் அடிப்படைவாதிகள் இல்லாத அனைத்து இனத்தவர்களையும் உள்ளடக்கிய, நாட்டின் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய நாடாளுமன்றத்தை உருவாக்க மக்கள் ஆதரவளிக்க வேண்டும். ஏனெனில் கடந்த 25 வருடங்களாக நாட்டில் ஆட்சி செய்த கட்சிகள் அடிப்படைவாதிகளுக்கு முன்னால் தலைகுனிந்தன. நாடாளுமன்றத்தில் தங்களுக்கு இருக்கும் குறிப்பிட்ட ஆசனங்களை வைத்துக்கொண்டு, ஆட்சியாளர்களுடன் பேரம்பேசி அவர்களின் அடிப்படைவாதத்தை அதிகரித்துக்கொண்டனர். அவ்வாறான அடிப்படைவாதிகளின் பேரம் பேசும் நடவடிக்கைக்கு இம்முறை முற்றுப் புள்ளி வைப்போம்.

கதிர்காமரை பிரதமாரக்க வேண்டும் என்று இந்த நாட்டு மக்கள் தெரிவித்தனர். அப்போது நாட்டில் இனவாதம், அடிப்படைவாதம் இருக்கவில்லை. ஆனால், அதன் பின்னரான காலப்பகுதியில் நாடாளுமன்றம் முற்றாக அடிப்படைவாதிகளின் ஆதிக்கத்துக்கு கீழ் இருக்கும் நிலை ஏற்பட்டிருந்தது. ஆட்சியாளர்கள் அவர்களின் கோரிக்கைகளுக்குக் கீழ்படிய வேண்டிய நிலையே இருந்தது.

உதாரணமாக உள்ளூராட்சி சபை சட்டவரைவை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்து அதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் அனுமதித்துக்கொள்ளும்போது சிலர் வாக்களிக்க மறுத்துச் சென்று விட்டனர். இறுதியில் அந்த அடிப்படைவாதிகளை வரவழைத்து, அவர்களுக்குத் தேவையான வரப்பிரசாதங்களை பெற்றுக்கொடுத்தே அந்தச் சட்டவரைவை அனுமதித்துக் கொள்ள முடிகின்றது. அந்த நிலைமைக்கு நாடாளுமன்றம் சென்று விடாமல் பாதுகாக்க எதிர்வரும் தேர்தலில் மக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

(ஒ.5,22)

## அற்றோனிப் பவரை கையளித்து வெளிநாடு சென்றார் தே.ஆ.உ

அவசரமாக வெளிநாடு செல்லும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், அற்றோனிப் பவரை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்து விட்டுச் சென்றுள்ளார். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் அறிவிக்கப்படலாம் என்பதால், ஆணைக்குழு உறுப்பினரின் கையெழுத்து கட்டாயம் தேவை. இதன் காரணமாக அவர் தனது கையெழுத்தைப் பயன்படுத்துவதற்கான அற்றோனிப் பவரைக் கையளித்துள் ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளருடன் மூன்று உறுப்பினர்கள் மாத்திரமே தற்போதுள்ளனர். தேர்தல்கள் ஆணைக்குழு ஒரு தீர்மானம் எடுத்து வெளியிடுவதானால் மூன்று உறுப்பினர்களும் கையெழுத்திட வேண்டும்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரின் மிக நெருங்கிய உறவினர் வெளிநாட்டில் உயிரிழந்துள்ளார். அவரின் இறுதிக் கிரியைகளில்பங்கேற்கஆணைக் குழு உறுப்பினர் வெளிநாடு பயணமாகியுள்ளார். அவர் நாடு திரும்ப காலதாமதம் ஆகக் கூடும். அதற்கிடையில் எதிர்வரும் 2ஆம் திகதி நள்ளிரவு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால், அது தொடர்பான வர்த்தமானியை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட வேண்டும்.

வர்த்தமானி வெளியிடுவதற்குதேர்தல்கள்ஆணைக் குழு உறுப்பினரின் கையெழுத்து அவசியம் என்ற அடிப்படையில், அவர் தனது கை யெழுத்தைப் பயன்படுத்தும் வகையில், உரிமை கையளித்தல் பத்திரத்தில் (அற்றோனிப் பவர்) ஒப்பமிட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளரிடம் வழங்கிச் சென்றுள்ளார்'- (ஒ;5,105)

## ஐ.எம்.எவ். ஏப்ரலின் பின்னரே புதிய நிதித் திட்டம்

கொழும்பு, பெப். 29

சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எவ்.) எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குப் பின்னரே, இலங்கைக்கான புதிய நிதித் திட்டத்தை ஆராயும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்கள அதிகாரி ஜெர்ரி ரைஸ் தெரிவித்துள்ளார்.

வொஷிங்டனில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் செய்தியாளர் சந்திப் பின்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் இலங்கையுடனான புதிய நிதித் திட்டம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்ட போதே மேற்கண்டவாறு கூறினார்.

(ஒ.5)

# இந்தியத் தூதரக கோரிக்கை கவனத்திலெடுக்காத இலங்கை

## யாழ்ப்பாணம் விமான நிலைய வரிக்குறைப்பு விவகாரத்தில்

கொழும்பு, பெப். 29

மத்தள மற்றும் இரத்மலான விமான நிலையங்களுக்கானவரியைநிறுத்தியும் குறைத்தும் சலுகைகளை அறிவித்துள்ள அரசு, யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கு வரிக்குறைப்பை மேற்கொள்ளவில்லை. வரிக்குறைப்பு மேற்கொள்ளுமாறு இந்தியத் தூதரகம் முன்வைத்திருந்த கோரிக்கையும் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

மத்தள சர்வதேச விமான நிலையத்திலிருந்து மீண்டும் சர்வதேச விமான போக்குவரத்துகளை ஆரம்பிப்பதற்கும், இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பிராந்திய விமான சேவைகளை ஆரம்பிப்பதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சமர்ப்பித்த தீர்மானத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவைத் தீர்மானத்தை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பில் அமைச்சர் பந்துல தெரிவித்ததாவது:

மத்தள விமான நிலையத்தில் 60 அமெரிக்க டொலர்களாக காணப்பட்ட விமான நிலைய வரி அறவீடு இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்தப்படும். இந்த விமான நிலையத்தில் வெளியேறும் உபசரிப்பு பணியாளர்களுக்கான கட்டணத்துக்கு கழிவை வழங்குதல், நிலச் செயற்பாட்டு கட்டணத்துக்காக கழிவு வீதத்தை வழங்குதல், நிவாரண விலைக்கு விமானத்துக்குத் தேவையான எரிபொருளை விநியோகிக்கவும் முன்னேற்றத்தை ஊக்குவிப்பதற்காக ஒரு வருட காலத்துக்கு துணைப்பட்டியல் இடப்பட்ட சர்வதேச விமான நிறுவனங்கள் தரை இறங்கல் மற்றும் விமானங்களை நிறுத்தி வைத்தலுக்கான கட்டணத்தை கைவிடுதல் போன்ற வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

இரத்மலானை சர்வதேச விமான நிலையத்தில் 60 அமெ்ரிக்க டொலர் விமான நிலைய வரியில் 50 சதவீதத்தை மாத்திரம் அறவிடுதல், நிவாரண விலைக்கு விமானங்களுக்குத் தேவையான எரிபொருளை விநியோகித்தல், முன்னேற்றத்தை ஊக்குவிக்க ஒருவருட காலத்துக்கு துணை பட்டியலிடப்பட்ட விமான நிறுவனத்துக்கு தரை இறங்குதல் மற்றும் விமானங்களை நிறுத்தி வைத்தலுக்கான கட்டணத்தை கைவிடுதல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படாமல் விமான நிலைய வரி இரட்டிப்பாக அறவிப்படுவது தொடர்பில் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. இது தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

இந்தியத் தூதரகமும் இந்த விடயத்தில் கரிசனை செலுத்தியிருந்தது. அவர்களின் கோரிக்கையும் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

(ஒ.5,24,105)

## கௌரவிப்பு நிகழ்வு

வவுனியா,பெப்.29

வவுனியா பண்டாரவன்னியன் மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் 2019 ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மன்றத்தின் தலைவர் மா. கதிர்காமராஜா தலைமையில் வவுனியா காலை 8 மணிக்கு சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது.

(ஐ-110)

## தவக்கால வழிபாடு

யாழ்ப்பாணம்,பெப்.29

கொய்யாத்தோட்ட கிறிஸ்து அரச ஆலய 4 ஆம் வலயத்தின் பங்கு மக்களின் சிலுவைப் பாதை வழிபாடு இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஈச்சமோட்டை வீதியில் நடைபெறும். தொடர்ந்து பாவ சங்கீர்தன சடங்கும், திருப்பலியும் நடைபெறும் என்று வலயத் தலைவர் அறிவித்துள்ளார்.

(க)

## இறுவட்டு, நூல் வெளியீடு

மன்னார்,பெப்.29

மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்திருக்கும் தென்மோடி, வடமோடிப் பண்புகளைக் கொண்ட தேசியக் கலை வடிவமான "வாசாப்பு நாடகங்களின்" இசைப் பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு அதன் முதலாவது பாகம் இறுவட்டாகவும், நூலாகவும் வெளியிடப்படவுள்ளன.

வடக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இன்று சனிக்கிழமை மன்னார், நானாட்டான் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவெல் பெர்னாண்டோ ஆண்டகை, கிழக்குப் பல்கலைக் கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. மௌனகுரு, சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அ. பத்திநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். இறுவட்டு, நூல் வெளியீடு என்பனவற்றுடன் விருந்தினர்களின் சிறப்புரைகளும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

(ஐ)

# உணர்வுபூர்வமான கற்றலே சிறந்தது!

## உளநல மருத்துவர் ஆலோசனை

**யாழ்ப்பாணம்,பெப்.29**

**மாணவர்கள் இடையே ஏற்படும் முரண்பாட்டுச் சிந்தனைகள், அவர்களது கல்வி மேம்பாட்டுக்குத் தடையாக இருக்கின்றமையுடன், தம்மைத் தாமே தண்டிக்கும் மனப்பாங்கும் கல்வியில் நாட்டமின்மையையும் ஏற்படுத்தும். எனவே பாடசாலை மாணவர்களுக்கும், வழிகாட்டும் ஆசிரியர்களுக்கும் உணர்வுபூர்வமான ஆற்றுப்படுத்தல், கல்வி மேம்பாட்டுச் செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறு உள நல மருத்துவர் சி.சிவதாஸ் தெரிவித்தார்.**

இலங்கை கரித்தாஸ் அனுசரணையுடன், யாழ் கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் மேற்கொள்ளும் செயற்திட்டத்தில் பங்கேற்கும் ஆற்றுப்படுத்துநர்களுக்கான ஐந்து நாள் பயிற்சி கரித்தாஸ் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. அதில் அவர் தெரிவித்ததாவது:-

மாணவர்களுக்கு வழிகாட்டும் ஆசிரியர்கள் நல்லுறவை பலமாக்கி, உணர்வுகளைப் புரிய வைக்க வேண்டும். சமூகப் பிறழ்வான நடத்தைகளுக்கு முகம் கொடுக்கும் மாணவர்களை வழிப்படுத்த வேண்டும். இதற்கு சகல மட்டத்தினரும், பொது அமைப்புக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும். இதனை முன்னெடுப்பதில் கரித்தாஸ் நிறுவனம் முன்னெடுக்கும் முயற்சிகள் நம்பிக்கை தருகின்றன - என்றார்.

மன்னார், திருமலை, யாழ்ப்பாணம் உள ஆற்றுப்படுத்துநர்களுக்கும், பாடசாலை ஆசிரியர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.



உளநலப் பணியாளர்கள் தமது உளவள அறிவை வளர்த்து பணியாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தையும், ஆசிரியர்கள் உணர்வுபூர்வக் கற்றலுக்குச் சிறந்த வழிகாட்டலாய்ச் சந்திப்புக்கள் அமைந்தன என்றும் அனுபவப் பகிர்வில் பகிர்ந்து கொண்டனர். (க)

# பல் சிகிச்சை 3 நாள் மட்டுமே

வரணி, பெப். 29

வரணி பிரதேச வைத்தியசாலையில் செவ்வாய், வியாழன், சனிக்கிழமை ஆகிய நாள்களில் மாத்திரமே பற்சிகிச்சைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வரணி பிரதேச வைத்தியசாலையில் நிரந்தர பல்வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்படும் வரை செவ்வாய், வியாழன், சனிக்கிழமை ஆகிய நாள்களில் மாத்திரம் பல்சிகிச்சைகள் இடம்பெறும் என பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி பகிரங்க அறிவித்தல் மூலம் தெரிவித்துள்ளார். (ப-122)

# பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு ஆணைக்குழு அழைப்பு

ஈஸ்டர் தாக்குதல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்புப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக லலித் பத்திநாயக்க முன்னர் செயற்பட்டிருந்தநிலையில் இந்தத் தாக்குதல் தொடர்பாக சாட்சியமளிக்க ஆணைக்குழு முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று ஆணைக்குழுவின் செயலாளர் எச்.எம்.பீ.பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

லலித் பத்திநாயக்க இதற்கு முன்னரும் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்திருந்தார். அதேவேளை, ஆணைக்குழுவில் இதுவரையில் 72 பேர் சாட்சியமளித்துள்ளனர். (எ)

# வெள்ளை வான் ஊடக சந்திப்பு குரல் மாதிரிகளில் ஒற்றுமை

கொழும்பு, பெப்.29

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன் இணைந்து சர்ச்சைக்குரிய ஊடகவியலாளர் சந்திப்பில் வெள்ளை வான் கடத்தல், கொலை, தங்கக் கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றங்கள் தொடர்பில் வெளிப்படுத்திய விவகாரத்தில், அதில் கலந்து கொண்டவர்களின் குரல் பதிவுகள் சந்தேகநபர்களின் மாதிரிகளுடன் ஒத்துள்ளன என்று அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் கொழும்பு பிரதான நீதிவானுக்கு அறிவித்தார்.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன் இணைந்து சர்ச்சைக்குரிய ஊடகவியலாளர் சந்திப்பில் வெள்ளை வான் கடத்தல், கொலை, தங்கக் கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றங்கள் தொடர்பில் வெளிப்படுத்திய விவகாரம் தொடர்பிலான வழக்கு நேற்றுமுன்தினம் கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அதன் போதே பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டாளர் தரப்பில் விசாரணையாளர்களான சி.ஐ.டியின் பொலிஸ் பரிசோதகர் ஹேமந்த மன்றில் மேலதிக விசாரணை அறிக்கையுடன் முன்னிலையானார். முறைப்பாட்டாளர் சார்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ்பிரசன்னமானார்.

முதல் இரு சந்தேக நபர்களான இருவரும் பிணையில் உள்ள போதும் நேற்றுமுன்தினம் மன்றில் முன்னிலையாகாத நிலையில் அவர்கள் இருவரையும் எதிர்வரும் 3 ஆம் திகதி நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு மகர சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் நீதிவான் உத்தரவிட்டார். (எ)



# வித்தியானந்தாவுக்கு புதிய அதிபர் நியமனம்

முல்லைத்தீவு, பெப்.29

முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியின் (தேசிய பாடசாலை) புதிய அதிபராக சதாசிவம் பாலச்சந்திரன் கல்வி அமைச்சினால் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார். பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் பேரில் தேசிய பாடசாலை அதிபராக கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெருமவினால் நேற்றையதினம் கொழும்பில் வைத்து நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இவர் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் பொது ஆளணியைச் சேர்ந்த உத்தியோகத்தராவார்.

இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் இரண்டாம் மூன்றாம் தரங்களைச் சேர்ந்தோரும் இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றைச் சேர்ந்தோருக்குமே அதிபர் நியமனங்கள் வழங்கப்பட வுள்ளன.

இவர்களுக்கு கடந்த ஆட்சிக் காலத்தில் நியமனங்கள் வழங்க முயற்சி எடுக்கப்பட்ட போதிலும் அரசியல் தலையீடுகளால் இம்முயற்சிகள் தடைப்பட்டன. தற்போது அரசியல் தலையீடுகள் எதுவும் இன்றிய நிலையில் சுயாதீனமாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-222)

# சிறுவர் மந்த போசனையை ஒழிக்க ஐ.நாவுடன் இணக்கம்

கொழும்பு, பெப்.29

சிறுவர் மந்த போசனையை ஒழிப்பது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையுடன் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

2030ஆம் ஆண்டளவில் சிறுவர் மந்த போசனையை ஒழிப்பதற்கு ஐக்கிய நாடுகளினதும் உலக வங்கியினதும் அழைப்பை ஏற்றுக்கொண்டமைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நன்றி தெரிவித்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

உடனடி உணவு மற்றும் போசனை குறைந்த உணவுப் பழக்கத்தால் சிறுவர்கள் மந்த போசனையை எதிர்நோக்கியுள்ளனர் என்று ஜனாதிபதியுடனான கலந்துரையாடலின்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மந்த போசனையைக் குறைப்பதற்கு வறுமையை ஒழிப்பது முக்கியம் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, அதற்காக மக்கள் மயப்படுத்தப்பட்ட பொருளாதாரத் திட்டத்தை அரசு முன்னெடுக்கும் எனக் கூறியுள்ளார்.

சுகாதாரத்துறை மற்றும் கிராமிய பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இலங்கை எதிர்நோக்கியுள்ள சவால்கள் குறித்து ஜனாதிபதி இதன்போது தெளிவுபடுத்தினார் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (எ)

# கழிவுகள் கொட்டப்பட்டு நாற்றமெடுக்கும் வீதிகள்



**யாழ்ப்பாணம்,பெப்.29**

**கல்லுண்டாயை அண்டியுள்ள குறுக்கு வீதிகளான ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதி, நவாலி பிரசாத் வீதி,நவாலி கொத்துக்கட்டி வீதிகளில் இறந்த விலங்குகள் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளால் நிரம்பி வழிகின்றன.**

இதனால் கடுமையான சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுகின்றன என்று வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

மக்களுக்கு முறையான விழிப்புணர்வு வழங்கப்படாமையால் கழிவகற்றல் செயற்பாடு மக்கள் அதிகம் வாழும் இடங்களில் முறையற்ற விதத்தில் இடம்பெறுகின்றன.

இவற்றை உடன் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரவேண்டும் என்று கூட்டத்தில் பிரதேச செயலர் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன், இவ்வாறான கழிவுகள் மக்களுக்குத் தீங்குகளை ஏற்படுத்தும். எனவே வலி.தென்மேற்குப் பிரதேசசபை, உள்ளூராட்சிதிணைக்களம் என்பன இணைந்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

(க-50)

# சுற்றுலாத்துறையை மேம்படுத்தத் திட்டம்

## பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்



சுற்றுலாத்துறையை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக அரசு விசேட கவனம் செலுத்தியுள்ளது. புதிய வரவு - செலவுத்திட்டத்தில் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அமைச்சர் பிர சன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பேருவல கலுவாமோதர கடற்கரையைச் சுற்றியுள்ள சுற்றுலாத்தலங்களில் நிலவும் குறைபாடுகளை ஆராய சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்ட அமைச்சர் அதன் பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பேருவலவில் பல விடுதிகள் மூடப்பட்டுள்ளன. அவற்றுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திக்கொடுக்க கடந்த அரசு எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. சுற்றுலாத் துறையின் சரிவு காரணமாக இந்த பகுதிகளில் சுமார் 30 ஆயிரம் பேர் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

பாதைகள், மருத்துவமனைகள், கழிப்பறைகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக விரிவுப்படுத்தப் பார்க்கின்றோம். ரயில் நிலையங்களில், முக்கிய சுற்றுலாத் தலங்களாக அடையாளம் காணப்பட்ட இடங்களில் ஆறுதல் மையங்களை நிறுவவும் எதிர்பார்க்கின்றோம். அதற்குப் பொருத்தமான இடங்களை அமைச்சு ஏற்கனவே அடையாளம் கண்டுள்ளது.

இந்த வசதிகள் சர்வதேச தரத்துக்கு அமைய கட்டமைக்கப்படும். சுற்றுலாப் பயணிகளுக்கு சுகாதாரமான உணவகங்கள் போன்று நிதி பரிமாற்றும் மையங்களையும் உருவாக்க எண்ணியுள்ளோம். மூடப்பட்ட விடுதிகளை மீண்டும் திறக்க அவற்றின் உரிமையாளர்களுக்குச் சலுகை வழங்குவது தொடர்பாகவும் அரசு கவனம் செலுத்தியுள்ளது.

சலுகை அடிப்படையில் அவர்களுக்கு கடன் திட்டத்தை அறிமுகப்படுத்துவது தொடர்பாக அமைச்சரவையில் விவாதிக்க உத்தேசித்துள்ளேன். கடந்த அரசிடம் சுற்றுலாத்துறை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் எதுவும் இருக்கவில்லை. போர் முடிவடைந்த பின்னர், வளர்ந்து வந்த சுற்றுலாத்துறை கடந்த அரசின் காலப்பகுதியில் முற்றிலும் சரிந்துவிட்டது - என்றார். (எ)

## பண்டாரி அம்மன் பெருந்திருவிழா

வடமராட்சி,பெப். 29

பருத்தித்துறை, தம்பசிட்டி அருள்மிகு ஸ்ரீ மஹாமாரி அம்பாள் (பண்டாரி அம்மன்) கோவில் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

பத்துத்தினங்கள் இடம்பெறும் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கும், தீர்த்தத் திருவிழா மறுநாள் 8 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 6 மணிக்கு இன்பர்சிட்டி சமுத்திர தீர்த்தக் கரையிலும் நடைபெறவுள்ளன.

ஆலயத்தில், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. சிவஸ்ரீசபா பாஸ்கரக்குருக்கள் பிரதம குருவாக இருந்து பெருந்திருவிழாவை நடத்தி வைப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ப-173)

# சுயநல இழப்பே நோன்பாகும்




நோன்பு என்பது சடங்கல்ல. அது ஒரு சபதம். எடுத்த காரியத்தை தூய உள்ளத்தோடு முடித்தே தீருவேன் என்ற மனத்தீரம். இலக்கை அடைய உதவும் மைல்கல். எம்சுகம் துறந்து பிறர் நலம் காப்பதுதான் அர்த்தமுள்ள நோன்பாகும்.

நோன்பு வலிந்து நம்மேல் நாமே சுமத்திக் கொள்வதல்ல. மனமுவந்து மனித மாண்புக்காக எம்மைக் கரைத்துக் கொள்வதாகும். இல்லிட மற்றோரை ஆதரிக்கவும் பசி தாகத்தை தணிக்கவும், கொடுமைத்தனங்களை அவிழ்க்கவும், அடிமைக்கு விடுதலை கொடுக்கவும், முதியோரை அரவணைக்கவும் எம்மை அர்ப்பணித்து தியாகம் கலந்த சுகமான இழப்புக்களை அனுபவிக்கத் தயாராகும்போது நோன்பு மாண்புபெறும்.

அதிகளவில் உண்ணாநோன்பிருந்தால் இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பார் என்ற சமன்பாடு நோன்பின் இலக்கு அல்ல. தன்னைக் கடந்து தன்யே மறந்து பிறர் வாழவேண்டும் என்ற துடிப்பில் தன்னையே பலியாக்குவதுதான் நோன்பு. தவக்காலம் மட்டும் நோன்புக் காலமல்ல. எமது வாழ்வு முழுவதும் நோன்பாகட்டும். சத்தமில்லா சபதம் ஏற்று நல்ல செயல்கள் ஆற்றுகின்றமை நோன்புக்கான சிறந்த இலக்கணமாக அமையும்.

அன்பு செலுத்தித் தொண்டு புரியும் அத்தியாயம் நமது செயற்பாடுகளில் வரையப்பட்டும். பிறருடைய வாழ்வில் சுமை ஏற்றுபவர்களாக அல்லாது சுவை ஊட்டுபவர்களாக நோன்பை முன்னெடுப்போம்.

**எஸ்.யேசுதாஸ்,கொழும்புத்துறை.**

# சூரியவெவ தாக்குதலை கண்டிக்கின்றார் டளஸ்!

கொழும்பு, பெப்.29

அம்பாந்தோட்டை சூரியவெவ கிரிக்கெட் மைதான வளாகத்தில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளார் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் டளஸ் அழகப்பெரும.

இது தொடர்பில் சுயாதீன விசாரணையை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர், இலங்கை கிரிக்கெட் சபை ஆகியவற்றுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் டளஸ் அழகப்பெரும விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அம்பாந்தோட்டை, சூரியவெவ கிரிக்கெட் மைதானத்தில் நான்கு வருடங்களாக எந்தவொரு சர்வதேச போட்டிகளும் நடைபெறவில்லை. இந்த நிலையில் நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கை, மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதிய ஒரு நாள் கிரிக்கெட் தொடர் பெப்ரவரி 26 ஆம் திகதி அங்கு நடைபெற்றது.

அந்தப் போட்டியை பார்வையிடுவதற்காக வந்திருந்த இரசிகர்கள் மீது அனுமதி சீட்டு வழங்கும் வாயிலில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதல் சம்பவத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. விளையாட்டு துறை அமைச்சர் என்ற வகையில் குறித்த தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன். விளையாட்டுத் துறையை ஆதரிக்கும் அதேபோல் மதிக்கும் நாட்டில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றமை வேதனைக்குரிய விடயமாகும். இந்த சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணை முன்னெடுத்து எனக்கு அறிக்கையொன்றை பெற்றுத்தருமாறு விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு உத்தரவிட்டுள்ளேன்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரும் என்னுடன் பிரத்தியேகமாக கலந்துரையாடியதுடன், உடனடியாக இது தொடர்பாக ஆராய்ந்து பார்க்குமாறும் ஆலோசனை வழங்கினர்.

இந்த சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்தி அதற்கான அறிக்கையை ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளிப்பதற்கு துரித நடவடிக்கை முன்னெடுப்படும். இந்தத்தாக்குதல்சம்பவம் தொடர்பாக அனைத்து கிரிக்கெட் ரசிகர்களிடமும் மன்னிப்பு கேட்டுக் கொள்கின்றேன். என்றுள்ளது. (எ-44)

## நூல்வெளியீடும் கௌரவிப்பும்

வரணி,பெப்.29

வரணி மாசேரி திருவருள் மிகு புராதன குருநாதர் கோவில் 3 ஆவது அலங்கார திருவிழா நூல்வெளியீடும், கௌரவிப்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் கணகசபாபதி கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிதம்பரன் கந்தசாமி மற்றும் தீவக கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சின்னையா ஜெகன் ஆகியோர் கலந்துகொள்வர்.

பிரதேசத்தில் கல்வித்துறையில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.(ஜ-122)

# கொமர்ஷல் வங்கியின் 'ஏரிஎம்' இயந்திரம் அரியாலையிலும்!

யாழ்ப்பாணம்,பெப்.29

கொமர்ஷல் வங்கி தனது தன்னியக்க இயந்திரமான (ATM) வலையமைப்பை மேம்படுத்தும் நோக்குடன் மற்றுமோர் 'ஏரிம்' இயந்திரத்தை கண்டி வீதி, புங்கங்குளம் சந்தி அரியாலையில் புதிதாக நிறுவியுள்ளது.

இந்த ஏரிஎம் மூலம் ஏ-9 வீதியூடாக பயணிக்கும் மற்றும் அதை அண்மித்துள்ள தமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன் ஆரம்பித்துள்ள இந்த இயந்திர வலையமைப்பானது கொமர்ஷல் வங்கியின் 865ஆவது வலையமைப்பாகும்.

# கூட்டணி அமைக்கும் அவசியம் கிடையாது

## காமினி லொகுகே தெரிவிப்பு



**கொழும்பு, பெப்.29**

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான கூட்டணியில் இணைந்து கொள்வதற்கான தேவை சுதந்திர கட்சியினருக்கும், பொதுஜன பெரமுனவினருக்கும் கிடையாது. கூட்டணியை பலப்படுத்த முன்னர் முதலில் சொந்த கட்சியை பிரதித் தலைவர் என்ற பதவியில் இருந்து எதிர்க்கட்சி தலைவர் பலப்படுத்த வேண்டும் என கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.**

பொதுத் தேர்தல் தொடர்பில் அரசின் நிலைப்பாடு தொடர்பாக வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது; பிற கட்சியின் உறுப்பினர்களை ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணியில் இணைந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்திருக்கின்றமை நகைப்புக்குரியது. சுதந்திர கட்சி மற்றும் பொதுஜன பெரமுன ஆகியவற்றின் உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டணியில் இணைந்து கொள்வதற்கானஎவ்விதஅவசியமும்கிடையாது. ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியைப் பிரதான பங்குதாரராகக் கொண்டு பொதுஜன பெரமுன பரந்துபட்ட கூட்டணியை உருவாக்கியுள்ளது. இந்தக் கூட்டணியில் பிரதான கட்சியினை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. பேச்சின் ஊடாக கூட்டணி அமைத்துக் கொள்வதில் எவ்வித இழுத்தடிப்புக்களையும் நாம் முன்னெடுக்கவில்லை.

நாகரிகமான அரசியல் கலாசாரத்தை ஐக்கிய தேசியக் கட்சியினரால் முன்னெடுத்து செல்ல முடியாது. கட்சியின் செயற்குழுவின் தீர்மானத்துக்கு அனைத்துத் தரப்பினரும் மதிப்பளிக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் எதிர்த்தரப்பினர் கட்சியின் அடிப்படை கொள்கையைப்பின்பற்றவில்லை. அரசியல் ரீதியில் நெருக்கடிக்குள்ளாகியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அடிமட்ட உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கொள்ளஅழைப்புவிடுத்துள்ளோம்.- என்றார். (எ)



முல்லை மாவட்டத்தில்

# 703 மாணவர்களுக்கு கல்வி புலமைப் பரிசில்

முல்லைத்தீவு,பெப்.29

முல்லைத்தீவு மாவட்டத்தில் சமுர்த்தி திணைக்களத்தின் கீழ் உயர்தரத்தில் கல்வி கற்கும் 703 மாணவர்களுக்கு சமுர்த்தி சிப்தொர கல்வி புலமைப் பரிசில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட சமூர்த்தி திணைக்கள பணிப்பாளர் க.ஜெயபவானி தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்தி திணைக்களத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட 2019/2020 கல்வி ஆண்டு மாணவர்களுக்கான "சமுர்த்தி சிப்தொர" கல்விப் புலமைப் பரிசில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மாவட்டத்தில் சமுர்த்தி நிவாரணம் பெற்றுவரும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்து 2020 /2021 வரையான கல்வி ஆண்டில் உயர்தரம் படித்துவரும் மாணவர்களுக்கான மாதம் தோறும் 1500 ரூபா உதவிக்கொடுப்பனவு வழங்கும் சமுர்த்தி சிப்தொர கல்வி புலமைப் பரிசில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்படி புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 218 மாணவர்களும், கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 224 மாணவர்களும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 132 மாணவர்களும், துணுக்காய் பிரதேசத்தில் 75 மாணவர்களும், மாந்தை கிழக்கு பிரதேசத்தில் 35 மாணவர்களும், வெலிஓயா பிரதேசத்தில் 19 மாணவர்களும் இந்தத் திட்டத்தில்உள்வாங்கப்பட்டுள்ளனர். இவர்கள்உயர்தரத்தில் கல்வி கற்கும் வரையிலான காலப்பகுதிக்கான கற்றல் செயற்பாட்டுக்காக சமுர்த்தி சிப்தொர புலமை பரிசில் வழங்கப்படும். - என்றார். (ஐ-19-222)

# விளையாட்டு விழா

வவுனியா,பெப்.29

வவுனியா கரப்புக்குத்தி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, விஞ்ஞானங்குளம் நவரத்தினம் வித்தியாலயம் மற்றும் சிவன் முன்பள்ளி ஆகியன இணைந்து விளையாட்டு விழாவை கரப்புக்குத்தி பாடசாலை மைதானத்தில் நடத்தின.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், சிறப்பு விருந்தினராக திருமதி துஷ்யந்தி சிவகுமாரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-222)



சாவகச்சேரி நகரசபையால் மேற்கொள்ளப்படும் திண்மக்கழிவகற்றல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று நேற்றுக் காலை இடம்பெற்றது. வேள்ட் விஷன் லங்கா நிறுவனப் பிரதிநிதிகள் இந்தக் கருத்தரங்கை நடத்தினர்.

சாவகச்சேரி. தென்மராட்சி கலைமன்றக் கலாசார மண்டபத்தில் கருத்தரங்கு இடம்பெற்றது. நகர சபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் மற்றும் உறுப்பினர்கள் திண்மக் கழிவகற்றல் பிரதேசக் குழுவினர் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். (ப-9)







# ஒரு வாரத்தில் ஐவருக்கு டெங்கு

கிளிநொச்சி,பெப்.29

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த ஒரு வாரத்தில் ஐந்து பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது.

சுகாதார திணைக்களச் சாரதி உட்பட ஐவருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் கொழும்புக்குச் சென்று வந்ததன் பின்னரே காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை டெங்குத் தொற்று என உறுதிப்படுத்தப்படுவோரின் வீடுகளுக்கு உடனடியாகச் செல்லும் தொற்று நோய் தடுப்புப் பிரிவினர், புகை அடித்து டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவர். தற்போது அச்செயற்பாடுகள் முன்னெடுப்பதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (க-214)

# பொதுக் கூட்டமும் நிர்வாக தெரிவும்

கிளிநொச்சி,பெப்.29

கிளிநொச்சி - பரந்தன் இந்து மகா வித்தியால்ய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளன.

பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-222)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அவசரமுடிவும் அவதியும்

வெறும் தேர்தல் வெற்றிக்காக தென்னிலங்கையில் இனவாதிகளிகளைக் குஷிப்படுத்துவதற்காக இலங்கை எடுத்த முடிவு இப்போது மீண்டுமொரு பொறிக்குள் தள்ளியுள்ளது.

ஜெனிவா தீர்மானங்களில் இருந்து ஒருதலைப்பட்சமாக விலகும் முடிவை அரசு எடுத்தபோது, பலரும் வியப்புக்குள்ளாகினர். ஏற்கனவே ஐ.நாவையும், அமெரிக்காவையும் மஹிந்த ராஜபக் ஷ எதிர்த்தமையாலேயே, பல்வேறு அரசியல், பொருளாதார நெருக்கடிகளை அவரின் அரசு எதிர்கொள்ள நேரிட்டது. ஜி.எஸ்.பி வரிச்சலுகை நிறுத்தப்பட்டதால் மிகப்பெரிய பொருளாதார இழப்பை நாடு சந்தித்தது. ஜெனிவாவில் கழுத்தை நெரிக்காத குறையாக மிகக் கடுமையான அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. தேர்தலில் மஹிந்தவைப் படுதோல்வியடைய வைப்பதற்கான சகல புறக்காரணிகளையும் அமெரிக்காவும்,ஐ.நாவும் கனகச்சிதமாகச் செய்து முடித்தன. அவ்வளவு ஏன், மைத்திரிபால சிறிசேனவைக் கூட , மஹிந்தவின் கூட்டில் இருந்து பிரித்து, ஐ.தே.க தலைமையிலான கூட்டின் பொதுவேட்பாளராக்கியதன் பின்னணியிலும் அமெரிக்காவின் கரங்களே இருந்தன.

அமெரிக்காவுக்கு எதிராகக் கம்பு சுற்றியதால் அண்ணன் பட்ட பாட்டைப் பார்த்த பின்னராவது ஜனாதிபதி கோத்தாபய தன்னுடைய போக்கை மாற்றிக் கொண்டிருக்க வேண்டும். அத்தோடு ஒரு அமெரிக்கப் பிரஜையாகவும், சில மாதங்களுக்கு முன்னர் வரை இருந்தவர் என்பதால், கோத்தாபயவுக்கு அந்த நாடு தன்னை எதிர்ப்போரை என்னவிதமாகப் பணிய வைக்கும் என்பது கொஞ்சமாவது தெரிந்திருக்கும். அப்படி இருந்தும், “அண்ணன் வழியிலேயே சென்று அமெரிக்காவை எதிர்ப்பேன்” என்ற நிலைப்பாட்டிலேயே உறுதியாக இருக்கிறார்.

ஏனெனில் இனிவரும் காலங்களில் போர்வெற்றி என்ற வஸ்து காலாவதியாகிவிடும். இப்போதே ஏறக்குறைய அப்படித்தான். வராது வந்த மாமணியாக , ஈஸ்டர் தாக்குதல் மட்டும் நடந்திராவிட்டால், புளித்துப்போன போர்வெற்றிக் கதைகளை மட்டும் சொல்லிக் கொண்டு இப்போது கோத்தாபய ஜனாதிபதியாகியிருக்க முடியாது. ஆயினும் ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் ஒரு வலிமையான ஆக்ரோஷமான தலைவர் ஒருவரின் ஆட்சி தேவை என்று சிங்கள மக்கள் தவறாக முடிவெடுத்ததன் விளைவே கோத்தாபய ஜனாதிபதியான சம்பவம்.

அந்தத் தவறுக்கான தண்டனைகளை அடுத்து வரப்போகும் வாரங்கள் வழங்கப்போவது சர்வ நிச்சயம். தமக்கு முகத்தில் அடித்தாற் போல, இலங்கை ஐ.நாசபையின் தீர்மானங்களை தான்தோன்றித்தனமாக உதறியதால் அமெரிக்கா கடுப்பில் இருக்கிறது. அதனால்தான் வழக்கத்தை விடவும், மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் கடுமையான தொனியில் இலங்கையை எச்சரித்துள்ளார்.

இனி , மனித உரிமைகள் கூட்டத்தொடர் முடிந்ததுமே தன்னுடைய பேச்சைக் கேட்காமல் இப்படி முடிவெடுத்த இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை முடுக்கி விடும். குறிப்பாக பொறுப்புக்கூறலை மேற்கொள்ளாவிட்டால், ஜி.எஸ்.பி வரிச்சலுகையை நிறுத்துவோம் என்று முதலில் மிரட்டிப் பார்க்கலாம். மிரட்டலுக்குப் பணியாவிட்டால், உண்மையாகவே அந்தச் சலுகையை நிறுத்தி ஒரு பொருளாதார நெருக்கடியை உருவாக்கலாம். ஏற்கனவே உலக நாடுகள் பலவற்றிடம் வாங்கிய கடனால் வங்குரோத்தில் இருக்கும் இலங்கைக்கு , வரிச்சலுகைகளும் இல்லாமல் போனால், அதலபாதளத்தில் விழ வேண்டியதுதான். தேர்தலுக்காக நிதியே இல்லாமல் தொடங்கப்பட்டுள்ள சப்ரிகம திட்டங்களும், 1 லட்சம் பேருக்கான வேலை வாய்ப்பு நியமனங்களும் இந்த வரிச்சலுகை இல்லாமல் போனால் இடைநிறுத்தப்படுவதோடு, புதிய அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொள்ள முடியாமல் போய்விடும். காலப்போக்கில் மக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரித்து, சிங்கள மக்களே தாங்கள் கொண்டுவந்த ஜனாதிபதி மீதும், அரசு மீதும் அதிருப்தி கொண்டு புதிய அரசை உருவாக்க ஆதரவளிக்கும் நிலை விரைவில் உருவாகக் கூடும்.

ஆக, ஒரு தேர்தல் வெற்றிக்கான பிரசாரத்துக்காக, சர்வதேசத்திடம் சண்டித்தனம் காட்டப்போய், இப்போது வாங்கிக் கட்டத் தொடங்கியுள்ள கோத்தாபய அரசு, நிரந்தரமாகவே ராஜபக் ஷகளின் அரசியல் வாழ்வை சூனியமாக்கவும் கூடும். சூதானமாக நடக்காவிட்டால் இதுவே கதி!

# எம்.சி.சியிலிருந்து விலக அமைச்சரவை அனுமதி!

### அதன் பேச்சாளர் பந்துல தெரிவிப்பு

தொழும்பு, பெப்.29



தேசிய பாதுகாப்பு , நாட்டு மக்களின் அபிலாஷைகள் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு மிலேனியம் சவால் ஒப்பந்தத்தில் (எம்.சி.சி.) கையெழுத்திடாமலிருப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. எம்.சி.சி. தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் இடைக்கால அறிக்கையில்கூறப்பட்டுள்ளவிடயங்களை ஆராய்ந்த பின்னரே இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத்தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எம்.சி.சி. ஒப்பந்தத்தை கைவிடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அரசமைப்பு மற்றும் இறையாண்மைக்கு இந்த ஒப்பந்தம் சவாலாக அமையும் என்று இந்த ஒப்பந்தம் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம்.சி.சி. தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் தயாரிக்கப்பட்டு தன்னிடம் கையளிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையை பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ அமைச்சரவையில் சமர்ப்பித்தார். அந்த இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பல விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அவற்றில் ஒழுங்குகள் இன்றி பொதுமக்களுக்கு தெரியும் வகையில் கையெழுத்திடாதிருத்தல், அரசமைப்பு மற்றும் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் சட்டவிதிகளுக்குஏற்ப அல்லாமல் அவற்றை மீறிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தேசிய பாதுகாப்பு, பொருளாதாரம், கலாசாரம் மற்றும் அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களில் அழுத்தம் பிரயோகிக்கும் வகையிலான விடயங்கள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய இந்த ஒப்பந்தத்தில் பாதகமான உள்ளடக்கங்களை நீக்குவது தொடர்பில் ஆராய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது.

தேசிய பாதுகாப்புக்கு சவாலாக அமையாத வகையிலும் மக்களின் அபிலாஷைகளை மீறாத வகையிலும் எம்.சி.சி. ஒப்பந்தத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அமெரிக்கா இணக்கம் தெரிவிக்குமானால், அதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நாடாளுமன்றம் அனுமதி வழங்கினால் மாத்திரமே கையெழுத்திட முடியும். அதற்கு அமெரிக்கா இணக்கம் தெரிவித்தால் இடைக்கால அறிக்கை தயாரித்த குழுவிடமே மேலதிக ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் - என்றார். (ஏ)

## முஸ்லிம் காங்கிரஸும் சஜித்துடன் சங்கமம்!

கொழும்பு, பெப். 29

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி எனும் புதிய அரசியல் கூட்டணியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று இணைந்துகொண்டது.

இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பை விடுப்பதற்காக நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முற்பகல் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இதில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது முஸ்லிம் காங்கிரஸின் தலைவரால் கூட்டணியின் முடிவு சஜித்துக்கு அறிவிக்கப்பட்டது. இதனை அவர் ஏற்றுக் கொண்டதுடன், முஸ்லிம் காங்கிரஸின் வருகை புதிய அரசியல் இயக்கத்துக்கு உந்துசக்தியாக அமையும் என குறிப்பிட்டார்.


அத்துடன், தமிழ் முற்போக்குகூட்டணி, ஜாதிக ஹெல உறுமய ஆகியன சஜித் அணியுடன் ஏற்கனவே சங்கமித்துவிட்டன. (ம-44)

## போலி அ.அட்டை ஒருவர் கைது

கொழும்பு, பெப்.29

பொலிஸ் விசாரணைகளின் போது போலி அடையாள அட்டையை வழங்கிய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். திட்டமிட்ட குற்றத்தடுப்பு பிரிவின் புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

நபரொருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்த திட்டமிட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அவர் வைத்திருந்த அடையாள அட்டை போலியானது என்று தெரிய வந்ததையடுத்து பொலிஸார் அவரைக்கைதுசெய்துள்ளனர். (ஏ)



## வெங்காயத்துக்கு உத்தரவாத விலை

கொழும்பு, பெப்.29

உள்ளநாட்டு விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் வெங்காயத்தின் உத்தரவாத விலையை அதிகரிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

உள்நாட்டு விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் ஒருகிலோ வெங்காயத்தின் உத்தரவ்வாத விலையை 60 ரூபாவில் இருந்து 80 ரூபாவாக அதிகரிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்த இந்தத் தகவலைத் தெரிவித்தார். (ஏ)

# சேவைநலன் பாராட்டும் வாழ்த்தும்

## அதிபரின் வாழ்த்துச் செய்தி



இரசாயனவியல் பாட ஆசிரியராக கடமையாற்றி வரும் திரு.தவமணி பாலச்சந்திரன் அவர்கள் எமது கல்லூரியில் கற்பித்தல் செயற்பாடுகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தற்போதைய இளம் ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாக செயற்பட்டு வந்ததுடன் பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கும் தனது ஒத்துழைப்புக்களை வழங்கி வந்தமை குறிப்பி டத்தக்கது. அவருடைய சேவைக்காலத்தில் இறுதி காலப் பகுதியில் எமது கல்லூரியில் கற்பித்தபோதும் மாணவர்களின் பெறுபேற்றை அதிகரிப்பதற்கு பங்களிப்பு செய்ததுடன், கடந்த காலத்தில் கற்பித்த கல்லூரிகளில் உயர்ந்த பெறுபேற்றை பெற்றுக்கொடுத்தவர். மத்தியில் எம்மோடு சேர்ந்து நின்று சிறந்த பணிபுரிந்தவர். ஓய்வு பெறும் இந்நாளில் அவரது ஓய்வுக்காலம் சிறக்க உடல் உள ஆத்மீக நலனுடன் நிறைவாக அமைய வாழ்த்துகின்றேன்.

கலாநிதி சி.க.எழில்வேந்தன்
அதிபர்.

Best Wishes

## கோட்டக்கல்விப் பணிப்பாளரின் உள்ளத்திலிருந்து



தனது அயராத உழைப்பால் கல்வி கேள்விகளில் உயர்ந்து நின்ற எங்கள் இரசாயனவியல் ஆசிரியர் திரு.தவமணி பாலச்சந்திரன் அவர்கள் பரந்துபட்ட தமிழ்ப் பிரதேசமெங்கும் கல்விப் பயிர் வளர்த்த ஒருவர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அவர் நிறைவான சேவையின் நிறைவில் ஓய்வுபெறுவதையிட்டு கல்விச் சமூகம் சார்பாக அவருடைய நற்சேவையை பெரு மகிழ்வுடனும், நன்றியுடனும் பாராட்டி நிற்கின் றேன். மூத்த அனுபவம் வாய்ந்த ஆசிரிய ராக உயர்ந்து வரும் மத்தியின் மைந்தர்களை வழிநடத்திச் சென்ற அவருடைய ஓய்வுகாலம் சிறக்கவும் இனிவரும் காலங்களிலும் அவ ருடைய நற்சேவை சமூகத்தில் தொடரவும் எல்லாம் வல்ல இறை ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

சி.தேவகுமாரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
கோட்டக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

34 வருடங்களாக அர்ப்பணிப்புடன் கடமையாற்றி
இன்று (29.02.2020) ஓய்வுபெறும் எமது ஆசிரியர்

### திரு.தவமணி பாலச்சந்திரன் (SLTS I)
(B.Sc, PGDE, MSC, Dip. in Pharmacy)



### சேவை விவரம்
பு/சாஹிரா தேசிய பாடசாலை
(04.12.1985 - 18.03.1990)
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
(19.03.1990 - 31.12.1997)
யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
(01.01.1998 - 27.09.2008)
பு/சாஹிரா தேசிய பாடசாலை
(28.09.2008 - 08.04.2018)
யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
(09.04.2018 - இன்றுவரை)

Best Wishes

## உதவிக் கல்விப் பணிப்பாளரின் உள்ளத்திலிருந்து



### மகிழ்வுடன் வாழ்த்துகின்றேன்

அகவை அறுபதை அண்மித்த நிலையில் சுய விருப்பில் 29.02.2020 அன்று ஓய்வுபெறும் ஆசிரியர் திரு.தவமணி பாலச்சந்திரன் அவர்களின் சேவை நயப்பில் வாழ்த்து செய்தி வழங்குவதில் மனமகிழ்வடைகின்றேன். இவரது 34 வருடகால ஆசிரிய சேவையில் ஏறத்தாள 19 வருடங்கள் யாழ். வலய பாடசாலைகளான யா/கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம், யா/யாழ்.இந்துக் கல்லூரி, யா/யாழ். மத்தியக் கல்லூரி, ஆகியவற்றில் தனது சேவையை அர்ப்பணிப்புடன் ஆற்றி ஓய்வுபெறுகிறார். இரசாயன வியல் பாடத்தில் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற இவரின் பங்களிப்பு முக்கியமானதாக அமைந்துள்ளது. சக ஆசிரியர்களுடனும் நட்புறவுடன் பழகி மாணவர்களின் முன்னேற்றம் கருதி செயற் பட்டுள்ளார். இவரது' உன்னதமான சேவையை வாழ்த்துவதுடன் இவர் தனது ஓய்வு காலத்தில் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இருக்க இறைஆசி வேண்டுகின்றேன்.

லாவண்யா சுகந்தன்
உதவிக்கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்)
யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்.

## ஆசிரியர் வட்ட தலைவரின் உள்ளத்தில் இருந்து



பல வைத்தியர்களையும் பொறியியலாளர்களையும் உருவாக்கிய பெருமைக்குரிய ஆசான்

34 வருடகாலம் ஆசிரியத்துவ கடலில் நீந்தி முத்துக் குளித்து தாமும் உயர்ந்து தன்னைச் சார்ந்த மாணவர்களையும் உயர்த்திய சிறந்த ஆசிரியர் இவராவார். குறிப்பாக கற்பிக்கும் நுட்பமும் விளக்கமும் இவருக்கே தனித்துவமான ஒரு சிறந்த கற்பித்தல் முறையாக காணப்பட்டமையை இவர் கற்பித்த பாடசாலை வரலாறுகளில் பதிவு செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் புத்தளம் சாஹிராக் கல்லூரியிலும் யாழ்.இந்துக் கல்லூரியிலும் நீண்டகாலம் இரசாயனவியல் ஆசிரியராக கடமைபுரிந்து பல வைத்தியர்களையும் பொறியியலாளர்களையும் பல அறிஞர்களையும் ஆசிரியர்களையும் உருவாக்கிய பெருமை இவருக்கே உரியது இதை விட இவர் ஒரு வைத்தியரின் அறிவை தனக்குள் தாங்கியவராகவும் இருப்பது இன்னும் பெருமைக்குரியது அதாவது மருத்துவத்துறையில் Diploma in pharmacy என்னும் கற்கை நெறியை பயின்ற ஒரு மருந்தகம் நடத்தவதற்குரிய உரிமைத்துவத்தையும் தனக்குள் கொண்டுள்ளார்.
இவ்வாறு பல சிறப்புக்களையும் பல விடயங்களையும் தன்னகத்தே கொண்ட இவ் ஆசானின் ஓயவுக்காலம் சிறப்புற ஆசிரியர் வட்டம் சார்பில் வாழ்த்துகின்றோம்.

தே . றெ . கிங்ஸ்லி
தலைவர் ஆசிரியர் வட்டம்

ஆசிரியர் வட்டம் - யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
26 . 04 . 1938



மறைவு
30 . 01 . 2020

கடந்த (30.01.2020) அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயார்

## அமரர் சிங்கராஜா பரமேஸ்வரி

எமக்கு உயிரும் உருவும் கொடுத்த தெய்வம் நீங்கள்
எமக்கு வாழ்வழித்த கருணையின் சிகரம் நீங்கள்
என்றும் அழியாத எம் இதயத்தின் துடிப்பு நீங்கள் – இருந்தும்
எம்மை ஆறாத் துயரில் அழவைத்து சென்றதேனா?
மரணம் தழுவாத மனிதர்கள் யாருமுண்டோ?
இருந்தும் மலர்ந்த உங்கள் முகம் கண்களில்
தோன்றி ரணமாய் கொல்கின்றது.
இருந்தும் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இன்று (29.02.2020) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.25/1, புகையிரத ஒழுங்கை,
புங்கங்குளம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 921 0099

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 01.04.1953
மறைவு 28.01.2020

கடந்த 28.01.2020 செவ்வாய்க்கிழமை சிவபத்மடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் புவனேஸ்வரி தயாபரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 27.02.2020 வியாழக் கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (29.02.2020) சனிக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(CS/31568)(11.17)

பழைய தபாற்கந்தோர் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்



பிறப்பு 01 . 07 . 1931

இறப்பு 28 . 02 . 2020

## திருமதி செல்லத்துரை சற்குணவதி (குணமணி)

புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும். 10 ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை சற்குணவதி (குணமணி) நேற்று (28.02.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும். கமலா. றஞ்சி. தேவி. தவம். யோகம். செல்வன். மோகன். பவளம். காலஞ்சென்றவர்களான ராணி. ராசன் ஆகியோரின் அன்புத் தாயாரும். புவனேந்திரன். பாலன். நகுலேஷ். கணேஷ். யோசெப். கிருபா. மாம்பழம். சித்திரா. தீபா ஆகியோரின் மாமியாரும். நிதி. சதீஸ். றமேஸ். சுரேஸ். ஜெயா. ஜீவா. சீலன். உதயன். விஜயன். சிவா. ரூபி. காலஞ்சென்ற விஜி மற்றும் நதியா. ரூபிகா. அனோஜ். அஜந்தன். சயந்தா. கம்ஷா. சிந்து. யசி. சுபா. துசி. விது. வைசன். அபிசன். அபிஷா. றக்சிகா. அனோசிகா. றதினிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும். வானு. நியூரி. ரினுசி. யஸ்வின். கனிஷ். இவான்கா. கிரிஷாந். சுமன். சியா. சுகிர். தனோஜ். யசிந்த். கபிஷ். இனோஜா. இந்து. விதுர்சன். லோபிதன்.தர்சிகா. தர்சிகன். கிருஷா. சியர்ஷ். ஓவியா. சாரிக். பிரசன்னா. பிரஜீன். கோகுலன். றஜீவன். சாலினி. லக்சன். லவன். நிவேந்தினி. அபிஷா. அபிஷாந். துஷாந் ஆகியோரின் பூட்டியும். டயாகரனின் அன்புக் கொள்ளுப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு மணற்காட்டு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/31366(11,17)

**தகவல்:- குடும்பத்தினர்.**

**004 1763 345 633, 077 220 5654**

# மரண அறிவித்தல்கள்



பிறப்பு 09 . 12 . 1951

இறப்பு 28 . 02 . 2020

## திருமதி தவராணி பாலசுப்பிரமணியம்

மொனராகலையைப் பிறப்பிடமாகவும் 26. குருந்தவத்தை. பதுளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவராணி பாலசுப்பிரமணியம் நேற்று (28.02.2020) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து (ஓவசியர்) நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் நாகலிங்கம். அருளானந்தம் ஆகியோரின் அன்பு தங்கையும் பேபி. வவி. மணி. ராசன். அப்பன் ஆகியோரின் அண்ணியும் பிரதீபன். திலகதீபா மற்றும் விஜயதீபன். ஆகியோரின் அன்புத்தாயும் சுஜாதா. ஜனதீபன் மற்றும் பூர்ணிதா ஆகியோரின் அன்பு மாமியும் கீர்த்தனா. காருசன். ஜனனி. ஜோதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2020) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பதுளை மாநகரசபை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**26. குருந்தவத்தை. பதுளை**

**055 222 8154**

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ



தோற்றம் 19 . 07 . 1937

மறைவு 27 . 02 . 2020

## திருமதி நவமணி தங்கராஜா


யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவமணி தங்கராஜா கடந்த (27.02.2020) வியாழக்கிழமை வண்ணை காமாட்சி அம்பாளின் பாதகமலங்களைச் சென்றடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துவேலுப்பத்தரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான முருகேசு - பொன்னம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் மகேந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (இராசுக்குட்டி), வள்ளிஅம்மை தம்பதிகளின் மருமகளும் கட்டடப்படவரைஞர் தங்கராஜாவின் அன்பு மனைவியும், சுதாகர், பகீரதி, ஸரஸவாஹினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சோமதி, சிவஞானம், சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் டிலக்சனா, ஸிவஷாந்த், பிரணவன் ரேணுபவன் யோகபவன், திதோஜனன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.958/9 காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:- குடும்பத்தினர்.
077 036 5922 (கணவர்)
077 923 5926 (மகன்)**



## Dr. பொன்னுத்துரை சிவபாலன்

நீர்வேலியை பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட **Dr.**பொன்னுத்துரை சிவபாலன் கடந்த (25.02.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை (இளைப்பாறிய அதிபர்- உரும்பிராய் சைவத்தமிழ் மகாவித்தியாலயம்) - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கமலாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நர்சிகா (லண்டன்), தில்சிகா (கனடா), கிருசிகா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலேந்திரா (லண்டன்), கிருபாகரன் (கனடா), கரிகிருஷ்ணா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், வாஷ்னா, ரெல்வின், அகீவ், திமேகா, கிஸ்ரன், கிஸ்ரா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவனேசன், சிவேந்திரன் மற்றும் சிவதாசன், காலஞ்சென்ற சிவராணி மற்றும் சிவாநந்தன், சிவசுப்பிரமணியம் (லண்டன்), சிவகுமாரி, தியாகி பொன். சிவகுமாரன் மற்றும் சிவயோகன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலியும் 17 ஆவது பிறந்தநாள் நினைவும்



## செல்வன் தவத்துரை ஹரிஷன்

(மாணவன் யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி)

தோற்றம்
14.02.2003

மறைவு
04.03.2017

திதி:- வளர்பிறை ஷஷ்டி





ஆண்டுகள் மூன்று ஆனதுவே
உன் ஆசை முகம் எம்மைவிட்டுப் பிரிந்து
அதற்குள் உன்னை அன்புகாட்டி வளர்த்த - உன்
ஆசை புச்சா பெரியம்மாவையும்
அழைத்து விட்டாய் உன்னிடத்தில்
அகவை 18 ஆனவுடன் அம்மா உன்னை
மோட்டார் சைக்கிளில் நான் ஏற்றிச் செல்வேன்
அதுவரை தான் நீங்கள் மோட்டார் சைக்கிள்
ஓட வேண்டும் என ஆசை ஆசையாய் கூறுவாயே
அம்மாவுக்கும் தங்கைக்கும் நான் தான் காவல்
என அடிக்கடி கூறுவாயே
இப்போ எமக்கு யார் துணை என
கண்மூடி மறைந்தீர்
அன்புச் செல்லமே ஹரிஸ் குட்டி உன்னை
டெங்கு எனும் கொடிய நோய் காவு கொண்டுவிட்டதே
இவ்வளவு சிறுவயதில் உம்மை இழப்போம் - என
எள்ளளவும் நாம் எண்ணவில்லை
ஆறாத்துயரில் கண்ணீரில் கரைகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி111

என்றும் உன் நினைவால் வாடித்துடிக்கும்

அப்பா, அம்மா, அன்புத் தங்கை மது, மாமாமார், மாமி, பெரியப்பா, பெரியம்மாமார், அக்காமார், அண்ணா, மச்சான்மார், மச்சாள் மற்றும் குட்டி மருமக்களான ரஷ்வினா, சயன், அனுஷாலி

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் நாராயணப்பிள்ளை பூபாலசிங்கம்



(சமூக சேவையாளர் - அம்பாள் கபே உரிமையாளர்)
கச்சார்வெளி, பளை

பிறப்பு
03.11.1937

இறப்பு
12.03.2019

திதி: சஷ்டி (29.02.2020)

நேசத்துடனும் அன்பு பாசத்துடனும்
ஒரு கூட்டுக் கிளியாக
எமை வளர்த்து ஆளாக்கி
நேர்வழியில் வாழவைத்த
எம் குடும்ப சூரியன்
எம் அன்புத் தெய்வத்தை
எம் உள்ளங்களில் இருத்தி
எந்நாளும் வணங்குகிறோம்




அன்னாரின் ஓராண்டு நினைவு
அன்னாரின் இல்லத்தில்
இன்று (29.02.2020) நடைபெறும்
என்பதை அறியத்தருகின்றோம்.

கச்சார்வெளி, பளை. 077 255 5861, 021 2050001

குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 10 . 11 . 1926

இறப்பு 28 . 02 . 2020

## திருமதி வேலுப்பிள்ளை சரஸ்வதி

எனது அம்மா திருமதி மோகனதாஸ் சுலோஜினி (பாசம்) அவர்களின் அன்புத் தாயார் எனது அம்மம்மா அவர்கள் நேற்று (28.02.2020) வெள்ளிக்கிழமை காலமான செய்தி கேட்டு ஆற்றொணா துயர் அடைந்தேன். தூரதேசத்தில் இருப்பதால் உடனிருந்து துயரத்தை பகிர்ந்துகொள்ளமுடியாது மிகவும் வேதனையடைகின்றேன். அம்மாவின் பிரிவால் துயருற்றிருக்கும் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் மற்றும் உறவுகளுடன் நானும் துயரில் பங்குகொள்கின்றேன். அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அம்மம்மாவுக்கும் எனது கண்ணீரை காணிக்கையாக்குகின்றேன். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி.

அன்புடன்
அவுஸ்ரேலியா மோ. துஷாந்தன் (பேரன்)

# மரண அறிவித்தல்



பிறப்பு 15 . 07 . 1938

இறப்பு 28 . 02 . 2020

## திருமதி செல்லையா பூரணம்

வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட செல்லையா பூரணம் அவர்கள் நேற்று (28.02.2020) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் தங்கமுத்து தம்பதிகளின் அன்பு புதல்வியும், காலஞ்சென்ற செல்லையாவின் மனைவியும் காலஞ்சென்ற நாகம்மா, காலஞ்சென்ற பொன்னையா, காலஞ் சென்ற கந்தையா, ராசதுரை, சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நடராசா, காலஞ் சென்ற கண்மணி, புஸ்பமலர், பொ.பரமேஸ்வரி, சோ. பரமேஸ்வரி, ஆகியோரின் மைத்துனியும், வசந்தாதேவி, வரதராஜன் (இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்), கணேசராசா (வீடமைப்பு அதிகாரசபை கிளிநொச்சி) சத்தியதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜயாத் துரை, ரஞ்சினிதேவி, வசந்தி (ஆசிரியர் - பனங்காமம் அ.த.க.பாடசாலை), கணேசதாஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கௌசிகன், ஜீவிகா (ஆசிரியை - வவுனியா), ஜீவிதன் (பொலிஸ் உத்தியோகத்தர்), சஜீகா, சுயாந்த் (கிராம உத்தியோகத்தர்-மாந்தை கிழக்கு பிரதேச செயலகம்), சுகன்யா, திவ்வியா, பானுஜன், சுயானா (ஜேர்மனி), கருணதாஸ்(ஜேர்மனி) சிவதாஸ் (ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆருஜன், டியோன், வினிஷா, பிரக்கியா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01.03.2020 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வாதரவத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே. இல. 077 019 9045 தகவல்:- குடும்பத்தினர்.

## ஒப்பந்தகாரர்...

நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.
சப்ரிகம திட்டத்துக்கு உரிய நிதி ஒதுக்கீடு இல்லை. அதற்கான நிதி விடுவிக்கப்படவில்லை. இவ்வாறானதொரு நிலையில் திட்டங்களை முன்னெடுக்கும் ஒப்பந்தகாரர்கள் தெரிவு செய்யப்படாமல் அடிக்கல் நடும் நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.
இதேவேளை வலி. வடக்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியின் மறுசீரமைப்புப் பணி சப்ரிகம திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த வீதியை மறுசீரமைப்புச் செய்வதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது. பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியை மறுசீரமைப்புச் செய்வதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு தொடர்பில் பிரதேச சபைக்கு எந்தவொரு தகவலும் தெரிவிக்கப்படவில்லை. அத்துடன் தார் வீதியாக மறுசீரமைக்கப்படவுள்ள மேற்படி வீதிக்கு, சிமெந்துக் கலவை இட்டு அடிக்கல் நடுகை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## சடலம்...

தனர்.
அலகல்லுபோட்டகுளம் பகுதியில் வசித்து வந்த அர்ச்சுணன் அருள்குமார் (வயது -26) இளைஞன் நேற்று முன்தினம் இரவு முதல் காணாமல் போயுள்ளார். பல இடங்களில் அவரைத் தேடியும் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. வீட்டு வளவிலுள்ள தோட்டக்கிணறு நேற்றுக் காலை தண்ணீர் இறைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டபோது சடலம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,110)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## சின்னத்தம்பி ஜெயராஜா
(ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர்)

தோற்றம் 07.12.1938

மறைவு 22.02.2018

எமதருமை அப்பாவே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஈராண்டுகள் உருண்டோடி விட்டதுவே.
அன்பான அப்பாவே வாழ்க்கைப் பாதையில்
எம் வழிகாட்டி நீங்கள் எம் உயர்வுக்கு வித்திட்ட அப்பாவே
உங்கள் மேனி திருநீறு ஆனாலும் எம் நினைவில்
கலந்திட்ட உங்கள் ஆத்மா சாந்திபெற
மல்வம் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளின் திருப்பாதங்களைத்
தினமும் வணங்குகின்றோம்.

"தெய்வநிழல்"
மல்வம், உடுவில்.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## இராசையா பரமநாதன்



பிறப்பு 21.04.1956
இறப்பு 28.02.2020

அரியாலையை சேர்ந்த ஒய்வுபெற்ற கைதடி அரச முதியோர் இல்ல உத்தியோகத்தர் இராசையா பரமநாதன் நேற்று (28.02.2020) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் லக்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் கிருஸ்ண குமாரியின் அன்பு கணவரும் சரஸ்வதி, காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும் காந்திமதி, கிருஸ்ணவதனி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2020) மு.ப 10.00 மணியளவில் இல. 95, பொன்னம்பலம் வீதி, அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.95, பொன்னம்பலம் வீதி,
அரியாலை

தகவல் : குடும்பத்தினர்

## கண்ணீர்அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி பகீரதி சிவஞானம்** அவர்களின்
அன்புத்தாயார்
**திருமதி நவமணி தங்கராஜா**
27.02.2020 வியாழக்கிழமை அன்று
இறைபதமடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபம்
தெரிவிப்பதோடு அவர்களின் ஆத்மாசாந்தியடைய
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**யா/மானிப்பாய் மகளிர்கல்லூரி.**

## மரண அறிவித்தல்



**கமலாதேவி நவரட்ணராஜா**
**(இளைப்பாறிய ஆசிரியை)**

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை, ரசிகா தொடர்மாடி, டபிள்யு சில்வா மாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட கமலாதேவி நவரட்ணராஜா (இளைப்பாறிய ஆசிரியை- யாழ்ப்பாணக்கல்லூரி, மெட்ரோ சர்வதேச கல்லூரி) அவர்கள் 25.02.2020 அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - கனகாம்பிகை அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பையா - ராஜிதம்மாவின் மருமகளும், நவரட்ணராஜாவின் பாசமிகு மனைவியும், றோகன்(USA), மைதிலி(USA) ஆகியோரின் அருமைத் தாயாரும், ரூபன்(USA)இன் அன்பு மாமியாரும், அன்ரூ, எலனா ஆகிய இருவரின் நட்புக்குரிய பேத்தியும் காலஞ்சென்ற ராஜேந்திரா, பேராசிரியர் இந்திரபாலா(அவுஸ்ரேலியா), காலஞ்சென்ற லீலாவதியின் உடன் பிறப்பும், காலஞ்சென்ற திலகேஸ்வரி, செல்வராணி, பிரியதர்ஷினி(அவுஸ்ரேலியா) காலஞ்சென்ற திருச்செல்வம், நடராஜா, ஜீவராஜா(அவுஸ்ரேலியா), யோகேஸ்வரி (அவுஸ்ரேலியா), திலகேஸ்வரி காலஞ்சென்ற விக்னேஸ்வரி, சாந்தகுமார்(கனடா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 7/1 A, மெனெரிகம பிளேஸ், கல்கிசையில் இன்று சனிக்கிழமை 29.02.2020 திகதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை 01.03.2020 திகதி காலை 08.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு 10.00 மணியளவில் கல்கிசை இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தொடர்புக்கு: 0785618978 தகவல்: குடும்பத்தினர்

AP ads 077 2359535

## DEATH ACKNOWLEDGEMENT

"Remember me with smiles and laughter, for that is how I will remember you all.
If you can only remember me with tears, then don't remember me at all"



**SHIVAUN NALINI RAVINDRAN**

We offer heartfelt thanks to The Bishop of Jaffna, Rt. Rev. Dr. Justin B. Gnanapragasam, The Vicar General, The Rector of St. Patrick's College, The Parish Priest and the Assistant Priests of St. Mary's Cathedral, The Rector of St. Xavier's Major Seminary, The Rector of St. Martyn's Minor Seminary, Rev. Fathers, Rev. Sisters, Rev. Brothers, The medical officers, nursing staff and other staff of the Emergency & Accident Unit of the Teaching Hospital Jaffna, The Honourable Mayor of Jaffna, Dr. S. Nithiyananda, our family doctor, Academic & Non-academic staff of St. Patrick's college and students, Principal & staff of Holy family Convent National School, Principal & staff of St. James Girls School, OBA St. Patrick's College and OGA Holy family Convent who visited her in hospital, attended the funeral, sent floral tributes and messages of condolences and for sharing our grief at this difficult time. A special note of thanks to those of our relatives, friends and neighbours who helped in numerous ways.

**We regret our inability to thank individually. Please accept this acknowledgement as an appreciation of our utmost gratitude.**

**Julian Ravindran and Family**

Mobile :- 077 706 2753


### பட்டதாரிகளுக்கு...

மாவட்டச் செயலகங்களின் கடிதத் தலைப்புக்களை ஜனாதிபதி செயலகம் பெற்றிருந்தது. அவசர அவசரமாக நேற்றைய திகதியிடப்பட்டு நியமனக் கடிதங்கள் வேலையற்ற பட்டதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தேர்தலை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கை காரணமாக, நேர்முகத் தேர்வுக்கு தோற்றாத பட்டதாரிகளுக்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சரவை இணைப்பேச்சாளர்பந்துலகுணவர்தன, ஒரு வருடத்துக்கு மேலாக வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரிகளுக்கு அரச துறைகளில் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி கோத்தாபய உறுதியளித்திருந்தார். அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று (நேற்று) முதல் ஜனாதிபதி செயலகத்தால் அனுப்பட்டு வருகின்றன. நியமனக் கடிதத்தின் பிரதி மாவட்டச்செயலருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மார்ச் முதலாம் திகதி முதல் 2021 மார்ச் வரையில் அவர்களுக்கான தலைமைத்துவம் உட்பட ஏனைய பயிற்சிகள் வழங்கப்படும். பயிற்சிகாலத்தில் அவர்களுக்கு மாதாந்தம் 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சிகள் முடிவடைந்த பின்னர், பின்தங்கிய அதேபோல் அரச சேவை அத்தியாவசியமாக தேவைப்படுகின்ற பகுதிகளுக்கே அவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். பின்தங்கிய பிரதேசங்களுக்கும் உயரிய அரச சேவையை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

2021 முதல் 5 வருடங்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட பகுதியிலேயே அவர்கள் பணியாற்ற வேண்டும். இடமாற்றம் வழங்கப்படாது. அதேபோல் உயர் டிப்ளோமா பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்களும் அனுப்பட்டுள்ளன - என்றார்.

(ஒ.5,24,44)


## காணவில்லை



காலியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா வந்த
**ஜயத்துங்க ரட்ணாயக**
**வயது 70**
கடந்த (27.02.2020)
வியாழக்கிழமை இரவு
நல்லூரில் இருந்து காணாமல்
போயுள்ளார். **இவர் சாம்பல் கலர் சேட்டும், பச்சை கட்டம் போட்ட சரமும் அணிந்திருந்தார்.**

கண்டவர்கள் பின்வரும் தொலைபேசியுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புக்கு:- 076 488 7492, 077 240 0922

**காரைநகர்**
**கிழவன்காடு கலாமன்றம்**
**நடத்தும்**

## ஸ்தாபக தின நிகழ்வு

இடம் : கிழவன்காடு கலாமன்ற
மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் : 01.03.2020 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 3.00 மணி



**நிகழ்வுகள்**

நாட்டிய நிகழ்வு - " நிருத்திய வந்தனம்"
நெறியாள்கை - ஸ்ரீமதி சாந்தினி சிவனேசன்

**சிறப்பு பட்டிமண்டபம்**

**தலைப்பு**
"புலம் பெயர் தேசத்து நம் உறவுகள்
தமிழர் பண்பாடு கலாசாரத்தை"
மறந்துவிட்டனர் ! மறக்கவில்லை !

**நடுவர்**
காரை தமிழருவி - த. சிவகுமாரன்

**"சிதம்பர ஜோதி" விருதுபெறுவோர்:**

- சிவஸ்ரீ வி. ஈஸ்வரக்குருக்கள்
- த.சிவகுமாரன்
- சு.கணபதிப்பிள்ளை
- V.K. பஞ்சமூர்த்தி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம்,
காரைநகர்.

(in.12708) (13.17)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி திலீபன் சுலோஜினி**
அவர்களின் அன்புத்தந்தை
**டேவிற் தேவதிரவியம்** அவர்கள்
காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச்சங்கம்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்**

## துயர் பகிர்கின்றோம்

எமது பணிமனையில் **முகாமைத்துவ உதவியாளராக**
**கடமையாற்றும் இரத்தினதுரை**
**மகேஸ்வரநாதனின்** அன்புத் தந்தை
**வேலுப்பிள்ளை இரத்தினதுரை**
அவர்கள் கடந்த **24.02.2020** அன்று இறைபதம் அடைந்ததையிட்டு
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிசங்கம்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

(J.11492) (13.17)


### ஐ.நா...

எதிர்த்தும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் ஜெனிவாக் கூட்டத் தொடரில் சமர்ப்பித்த வாய்மூல அறிக்கை பற்றியும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது நிலைப்பாட்டைத் தெரிவிப்பது மிகவும் கட்டாயம். எனவே, இது தொடர்பில் விரிவான அறிக்கை ஒன்றை விரைவில் வெளியிடவுள்ளோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

(ஒ.5,22)


**விற்பனைக்கு** இரண்டு மாதங்கள் நிரம்பிய வெள்ளை நிற **பொமேரியன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.**

தொடர்பு:- 077 537 3209, 077 991 2363

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நாட்கூலி அடிப்படையிலோ. ஒப்பந்த அடிப்படையிலோ வேலை செய்யக்கூடிய பெயின்டர் (Painter) தேவை.

தொடர்பு - 077 985 1946, 077 592 5371

## விற்பனைக்கு உண்டு

**புறொய்லர் கோழி மொத்தமாக விற்கப்படும்.**

**1Kg உயிரோடு விலை ரூபா 280/=**
**இடம் - மாதகல்**

தொடர்பு :- 077 271 8149

## தவறிவிட்டது

கன்னாதிட்டி வீதிக்கிடையில் அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கிய பேர்ஸ் (Purse) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
**தொடர்பு:**
0776 989 925, 0775 035 266

**யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.**

1. மேசன் - ரூபா 1500.00 - 1600.00
2. மேசன் உதவியாளர்- ரூபா 1200.00

**தேவைப்படின் உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.**

தொடர்புக்கு:-075 9183 945
(திங்கள் முதல் - வெள்ளி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை மட்டும் தொடர்பு கொள்ளவும்)

## பெண் பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணம் நெல்லியடியில் வசிக்கும் வயோதிப பெண் ஒருவரை பராமரிப்பதற்கு **பெண் பராமரிப்பாளர்** ஒருவர் தேவை.

(யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவில் வசிப்பவர்கள் மட்டும்)

தொடர்புகளுக்கு:-
076 948 2680, 077 068 0777

## கச்சதீவிலும்...

வடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.
கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழா எதிர்வரும் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதில் இந்தியாவில் இருந்து 3 ஆயிரம் பக்தர்களும், இலங்கையில் இருந்து 7 ஆயிரம் பக்தர்களும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை கடற்படை ஊடகப் போச்சாளர் லெப்டினன் கமாண்டர் இசுரு சூரிய பண்டார தெரிவித்தார்.
அரச தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பில் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா (கொவிட்- 19) வைரஸ் தொடர்பாகவும் இதில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சு இது தொடர்பில் விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. பக்தர்கள் புறப்படும் இடத்திலும் திரும்பி வரும் பொழுதும் கொரோனா வைரஸ் குறித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் கூறினார். (ஒ.5)

## எங்களின்...

தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான நிலைப்பாடு சம்பந்தமாக கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேருக்கு நேர் போராடி கொடிய பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்டெடுத்த பாதுகாப்புப் படையினருக்கு எதிராகப் பல்வேறுதரப்பினரால் முன்வைக்கப்பட்ட பொய்யான குற்றச்சாட்டுக்கள் ஐ.நா. தீர்மானங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும்போது அதற்கு நாம் எவ்வாறு இணை அனுசரணை வழங்குவது? அதனால் தான் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து நாம் வெளியேறியுள்ளோம் என்பதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.
உள்நாட்டுக்குள் பொறிமுறை ஒன்றை உருவாக்கித்தான் பொறுப்புக்கூறல் கடமையை எம்மால் செய்ய முடியும் என்பதையும், சர்வதேசத்தின் பொறிமுறையை நாம் ஒருபோதும் ஏற்கவே மாட்டோம் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம், என்றார். (ஒ.5,22)

## ஐ.நாவால்...

வேண்டும். ஐ.நாவிலுள்ள எந்தச் சபையாலும் எங்களை (இலங்கையை) எதுவுமே செய்ய முடியாது என்பதையும் அவர் கவனத்தில்கொள்ள வேண்டும். இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 43ஆவது அமர்வில் நேற்றுமுன்தினம் இலங்கை குறித்த வாய்மூல அறிக்கையை முன்வைத்துப் பேசிய ஆணையாளர் மிச்செல் பச்லெட், ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து இலங்கை விலகும் முடிவைக் கண்டித்திருந்தார். உள்ளகப் பொறிமுறை ஒன்றை நியமிப்பது என்ற இலங்கை அரசின் நிலைப்பாட்டையும் அடியோடு நிராகரித்துள்ளார். இது தொடர்பில் அமைச்சர் விமல் வீரவன்ச கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்க வேண்டாம் என்று ரணில் அரசை அப்போது நாம் வலியுறுத்தி இருந்தோம். எமது சொல்லுக்கு மரியாதை கொடுக்காமல் நாட்டைப் பாதிக்கச் செய்யும் அந்தத் தீர்மானங்களுக்கு ரணில் அரசு இணை அனுசரணை வழங்கியது.
கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஆணையின் பிரகாரம் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான ஐ.நா. தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து விலகும் முடிவை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஒன்றிணைந்து எடுத்தார்கள். அமைச்சரவையிலும் இதற்கான அனுமதி கிடைத்ததால் அரசின் முடிவை நாடாளுமன்றத்திலும் ஜெனிவாக் கூட்டத் தொடரிலும் வைத்து வெளிவிவகார அமைச்சர் அறிவித்துள்ளார்.
நாட்டின் பாதுகாப்பு, சட்டங்கள், அரசமைப்பு, காணி விவகாரம், சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றம் குறித்துப் பாரதூரமான பரிந்துரைகள் ஐ.நா. தீர்மானங்களில் இருந்தபடியாலேயே அதிலிருந்து நாம் விலகியுள்ளோம். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை மீறி ஐ.நாவால் இலங்கை விவகாரத்தில் தலையிட முடியாது. ரணில் அரசு மாதிரி சர்வதேச அரங்கில் இலங்கையை எமது அரசு காட்டிக்கொடுக்காது.
இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன என்ற ஐ.நாவின் குற்றச்சாட்டுக்களை உள்நாட்டுவிசாரணையின் மூலம் விசாரித்து அதன் உண்மைத்தன்மையை அறிந்துகொள்வோம். நாட்டின் இறையாண்மையை மீறி இதைக் கண்டிப்பதற்கும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டுக்கு எந்த அதிகாரமும் இல்லை - என்றார். (ஒ.5,22)

## தனியார்...

றுச்' சீல் 'வைத்து மூடப்பட்டன.
பிரபல கல்வி நிலையத்தில் டெங்கு நுளம்புக்கு ஏதுவான சூழல் காணப்பட்டமையால் கல்வி நிலையத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதே போன்று நகரின் மத்தியில் காங்கேசன்துறை வீதியில் இருந்த உணவகங்கள் மற்றும் புற நகர்ப் பகுதி வெதுப்பகம் ஒன்றும் மூன்று உணவகங்களும் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்பட்டதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
நீதிமன்ற உத்தரவின் பெயரில் இவை அனைத்தும் சீல் வைக்கப்பட்டதோடு காணப்பட்ட குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு மன்றின் அனுமதியை பெற்று இயங்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ.5,17,105)

## சிறப்பு...

கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குப் பிரேரிப்பதற்கு அல்லது சிறப்பு சர்வதேச தீர்ப்பாயத்தை நிறுவுவதற்கான கோரிக்கை விடுக்கப்படவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கை மீதான பொது விவாதத்தில் நேற்றுப் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
30/1 பிரேரணையானது, இலங்கை அரசால் இணை அனுசரணை வழங்கப்பட்டு, அது இந்த ஐ.நா. மனித உரிமை சபையின் அங்கத்தவர்கள் பலராலும் பெரிதும் சிலாகிக்கப்பட்டும் இருந்தது.
இந்தப் பிரேரணையானது, சர்வதேச கலப்பு குற்றவியல் பொறிமுறையை கொண்டிருக்கும் என்று, தமிழர்களுக்கு சொல்லப்பட்ட போதும் (தமிழர்கள் மத்தியில் விற்பனை செய்யப்பட்ட போதும்) அதற்கு மாறாக, பொறுப்புக்கூறலை உள்ளக விசாரணைக்குள் மட்டுப்படுத்தப்படுத்தக்கூடிய வகையில் மிக சாமர்த்தியமான வார்த்தைகள் மூலம் அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது என்பதை எமது அமைப்பு இங்கே பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தது.
இந்தப் பிரேரணையை நடைமுறைப்படுத்த முடியாது என்று அப்போதைய அரசு வெளிப்படையாகவே மறுதலித்திருந்த போதிலும், தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் கால நீடிப்பு கொடுக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த நவம்பரில் இலங்கையில் புதிய அரசு பதவிக்கு வந்திருக்கிறது.
இங்கு இழைக்கப்பட்ட அனைத்துக் குற்றங்களுக்கும் பின்னணியில் இருந்த முக்கிய சூத்திரதாரி எனக் குற்றம் சாட்டப்பட்டிருப்பவரே இப்போது புதிய ஜனாதிபதியாக வந்திருக்கிறார்.
இந்தப் புதிய அரசானது, எதிர்பார்க்கப்பட்டபடியே, 30/1 பிரேரணையின் இணை அனுசரணையில் இருந்து விலகிக் கொள்வதாக, உத்தியோகபூர்வமாக இந்த மன்றிற்கு அறிவித்திருக்கின்றதன் மூலம் இந்தப் பிரேரணையை நிராகரித்திருக்கின்றது. எனவே, இலங்கையை இனியாவது சர்வதேச நீதிமன்றுக்குப் பாரப்படுத்த வேண்டும், என்றார். (ஒ.5,26)

## முதியவர்...

ளது. கிளிநொச்சி கணேசபுரத்தைச் சேர்ந்த ஏழுமலை நாகேஸ்வரன் (வயது-62) என்ற முதியவரே உயிரிழந்தவராவர்.
முதியவர் இறுதிப் போரின் போது முள்ளிவாய்க்காலில் மனைவியையும் தனது 3 பிள்ளைகளையும் இழந்து மகன் ஒருவருடன் வசித்து வந்தார். கமத்தொழில் செய்து வரும் இவர் தனது வீட்டில் உள்ள களஞ்சிய அறையில் சாராயத்தை வாங்கி வந்து வைத்து அருந்துவது வழமை.
கடந்த 23 ஆம் திகதி, போதிய வெளிச்சம் இல்லாத குறித்த அறையில் இருந்து சாராயத்தை எடுப்பதாக நினைத்து தவறுதலாகக் கிருமிநாசினியை அருந்தியுள்ளார். உடனடியாக மருத்துவமனைக்குகொண்டு செல்லப்பட்டவர் அங்கு மருத்துவரிடம் தான் தறுதலாக கிருமி நாசினியை அருந்தியதாக வாக்குமூலம் வழங்கியுள்ளார். கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை அவருக்குத் திடீரென மயக்கம் ஏற்பட்டது. இதனையடுத்து யாழ். போதனா மருத்துவமனைசேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவர் நேற்று உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணையை நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (நு-26)











# டெல்லியில் கலவரம் 35 பேர் உயிரிழப்பு!

புதுடெல்லி, பெப். 29
இந்திய ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கொண்டு வந்த குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் காரணமாக டெல்லியில் பெரும் கலவரம் ஏற்பட்டுள்ளது. கடந்த மூன்று நாள்களில் 35 பேர் உயிரிழந்தனர்.

டெல்லியில் குடியுரிமை சட்டத்தின் (சிஏஏ) ஆதரவாளர்கள், எதிர்ப்பாளர்கள் இடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மோதல் நடைபெற்று வருகிறது. இந்தக் கலவரத்தில் 35 பேர் உயிரிழந்துள்ளனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். சட்டம்ஒழுங்கு நிர்வாகத்தில் டெல்லி பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ள னர். கலவரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த வன்முறையில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் இதுவரையில் 360 பேர் .கைதுசெய்யப்பட்டுள்ளதாக டெல்லி காவற்துறையின் மக்கள் தொடர்பு அலுவலர் எம்.எஸ்.றந்தாவா ஊடகங்களிடம் தெரிவித்தார். (ம)



# சிரியா துருக்கி நேரடி மோதல்?

டமஸ்கஸ், பெப். 29
சிரியாவுக்குள் அத்துமீறி நுழைந்த துருக்கிச் சிப்பாய்களுக்கு எதிராக சிரிய அரச படைகள் நடத்திய தாக்குதலில் 33 துருக்கிச் சிப்பாய்கள் உயிரிழந்தனர். இதையடுத்து சிரியா - துருக்கி இடையே நேரடி மோதல் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (ம)

# டெல்லி கலவரத்துக்கு ஐ.நா. சபை கண்டனம்

புதுடெல்லி, பெப். 29
குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிராக டெல்லியில் இடம்பெற்றுவரும் போராட்டங்களை இந்திய அரசும் பொலிஸும் கட்டுப்படுத்தத் தவறியுள்ளன - என்று ஐ.நா.மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தியாவில் கொண்டு வரப்பட்டுள்ள குடியுரிமைத் திருத்தச் சட்டம் மற்றும் டெல்லி கலவரத்தில் பொலிஸாரின் போக்கு போன்றவை மிகவும் கவலை தருகின்றது. இந்தியாவில் அனைத்து சமூதாயத்தைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் அமைதியான முறையில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து வருகிறார்கள். அவர்கள் இந்தியாவின் நீண்டகால மதசார்பற்ற பாரம்பரியத்தை ஆதரித்து வருகின்றனர். டெல்லி கலவரத்தின்போது, முஸ்லிம்களுக்கு எதிராக சில பிரிவினர் தாக்குதல் நடத்தியபோது பொலிஸார் பாராமுகமாகச் செயற்பட்டுள்ளனர் - என்றார். (ம)

# ஈரான் துணை அதிபருக்கு கொரோனாத் தொற்று

தெஹ்ரான், பெப். 29
ஈரான் துணை அதிபரான மசூமே எப்டகருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என அந்த நாட்டு ஊடக ஆலோசகர் தெரிவித்துள்ளார்.




சீனாவின் ஹுபேய் மாகாண தலைநகர் வுகானில் கடந்த டிசெம்பர் இறுதியில் கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டது. இதன்பின், பீஜிங் மற்றும் ஷாங்காய் என பல்வேறு நகரங்களிலும் பரவிய இந்த வைரஸ் வுகானில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியது. கொரோனா வைரஸ் சீனாவில் மட்டுமின்றி, உலகம் முழுவதும் கடும் மிரட்சியை ஏற்படுத்தி வருகிறது. இந்த வைரஸால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும், பலியானோர் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. ஈரானில் கொரோனா மிக வேகமாகப் பரவி வருகின்றது. தற்போது அந்த நாட்டின் துணை அதிபர் மசூமே எப்டகருக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளது. (ம)



# இன்றைய நாள்

**மேடம்:** தொழில் வளம் பெருகும் நாள். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற கொள்கைப்பிடிப்போடு செயல்படுவீர்கள். தெய்வீக சிந்தனை மேலோங்கும். மாற்று இனத்தவர்கள் மகிழ்ச்சிக்குரிய செய்தியைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

**இடபம்:** எடுத்த காரியங்களை எளிதில் முடித்து வெற்றி காணும் நாள். அஞ்சல் வழியில் அனுகூலச் செய்தி வந்து சேரும். கடன்சுமை குறையும். எதிரிகள் விலகுவர். இடம், பூமி வாங்கிச் சேர்க்கும் எண்ணம் மேலோங்கும்.

**மிதுனம்:** இல்லம் தேடி இனிய செய்தி வந்து சேரும் நாள். வங்கிச் சேமிப்பு உயரும். கனவு பலிதம் உண்டு. ஆரோக்கியத்திற்காக மாற்று மருத்துவத்தை மேற்கொள்வீர்கள். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்:** நினைத்தது நிறைவேறும் நாள். நேற்றைய சேமிப்பு இன்றைய செலவிற்கு கைகொடுக் கும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். மாற்று இனத்தவர்களால் மனதிற்கினிய செய்தி வந்து சேரும்.

**சிம்மம்:** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள். பழைய பிரச்சினை ஒன்றைப் பக்குவமாகப் பேசித்தீர்வுகாண்பீர்கள். தொழிலில் புதிய முதலீடுகள் செய்வீர்கள். ஆதரவுக்கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை உயரும்.

**கன்னி:** சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய நாள். எண்ணங்களைச் செயலாக்குவதில் சில இடையூறுகள் ஏற்படலாம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. கடன்சுமை கூடும். விரயங்கள் தவிர்க்க முடியாததாக அமையும்.

**துலாம்:** வரவு திருப்தி தரும் நாள். எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க இல்லத்தாரின் ஒத்துழைப்பு கிடைக்கும். வரன்கள் வாயில் தேடி வந்து சேரும். கனவு பலிதம் உண்டு. தொழில் முன்னேற்றம் திருப்தி தரும்.

**விருச்சிகம்:** மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும் நாள். பணப்புழக்கம் அதிகரிக்கும். பாராட் டும், புகழும் கூடும். தொழில் வளர்ச்சிக்கு வி.ஐ.பி.க்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**தனுசு:** விழிப்புணர்ச்சியுடன் செயல்படுவதால் விரயங்கள் குறையும் நாள். விருந்தினர்களின் வருகை உண்டு. வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக்கும். யாரிடமும் வாக்குக் கொடுக்கும் முன் யோசித்துக் கொடுப்பது நல்லது.


**மகரம்:** கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் நாள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பர். குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். தைரியத்தோடு எந்தக் காரியத்திலும் செயல்படுவது நல்லது.

**கும்பம்:** விரும்பிய காரியம் விரும்பிய படியே நடைபெறும் நாள். தொலை தூரத்திலிருந்து வரும் தொலைபேசி வழித்தகவல் தொழிலுக்கு உறுதுணை புரியும். மாறுபட்ட கருத்துடையோர் மனம் மாறுவர்.

**மீனம்:** லாபம் அதிகரிக்கும் நாள். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில்ரீதியாக வெளியூர் பயணங்களை மேற் கொள்வீர்கள். வேலைப்பளு கூடும். பொன், பொருள் சேர்க்கை ஏற்படும்.

# சுழல் ஜாலம் காட்டியது பற்றிக்ஸ் மடிந்தது யாழ்ப்பாணக் கல்லூரி






யாழ்ப்பாணம்,பெப்.29

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் சுழலில் சிக்கி முதல் நாளில் 81 ஓட்டங்களுக்குள் சுருண்டது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி.

பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 103ஆவது துடுப்பாட்டத் தொடர் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி களத்தடுப்பை தீர்மானித்து. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 52 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் கௌசிகன் 22 ஓட்டங்களையும், சிந்துஜன் 15ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். ஏனைய வீரர்கள் எவரும் 10 ஓட்டங்களைத் தாண்டவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. பந்து வீச்சில் டனிசியஸ் 6 இலக்கைச் சரித்தார்.



தனது முதல் இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி முதல் நாள் முடிவில் 40 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. டிலக்சன் 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கீர்த்தனன் 29 ஓட்டங்களுடனும் கஸ்ரோ 10 ஓட்டங்களுடன் களத்திலுள்ளனர். இன்று இரண்டாவதும், இறுதியுமான ஆட்டம் இடம்பெறும். (23)

# மகாஜனா அபாரம் ஸ்கந்தா திணறல்

யாழ்,பெப்.29


வீரர்களின் போர் துடுப்பாட்டத் தொடரில் மகாஜனாக் கல்லூரி அணி முதல் நாளில் 245 ஓட்டங்கள் முன்னிலையில் காணப்படுகின்றது.



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தா வரேதாயக்கல்லூரிக்கும் இடையிலான20ஆவது வீரர்களின் போர் துடுப்பாட்ட தொடர் நேற்று வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சுன்னாகம் ஸ்கந்தாவரேதாயக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. அதற்கமைய தனது முதல் இன்னிங்ஸுக்காக களமிறங்கிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி முதல் நாளில் 9 இலக்குகளை இழந்து 313 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது. அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கிருஷன், தனிஸ்ரன் களமிறங்கினர். இருவரும் இணைந்து நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அணி சார்பில் தனிஸ்ரன் 75 ஓட்டங்களையும், வரலக்ஷன் 51 ஓட்டங்களையும், மதீசன் 49 ஓட்டங்களையும், சிலக்ஷன் 46 ஓட்டங்களையும், சயந்தன் 31 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் பிரசன், டனுஸ்ராஜ், கௌரிசங்கர் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.





அதற்கமைய தனது முதலாவது இன்னிங்ஸுக்காக களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதல் நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. களத்தில் டான்சன் 21 ஓட்டங்களுடனும், டனுஸ்ராஜ் 19 ஓட்டங்களுடனும் உள்ளனர். பந்து வீச்சில் சதுர்ஜன் 4 இலக்குகளைச் சரித்தார்.

(23)

வெளிநாடுகளுக்கான
பொதிகள் சேவை COURIER Services
தொடர்புகளுக்கு 077 0111 035 | 036
077 0111 028 | 029
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்

தென்னிந்திய வட இந்திய யாத்திரையும் சுற்றுலாக்களும்

இன்பச் சுற்றுலா

ஆரம்பம்:- 04.04.2020 நாள்கள் - 07

**செல்லும் இடங்கள்:-** சுருக்கமாக சிம்லா, குளு, மனாலி, சண்டிக்கார்,பஞ்சாப், இந்திய, பாகிஸ்தான் எல்லை (வாகாபோடர்) வேறு இடங்களும் காணலாம். உணவு அசைவம், சைவம். அனைத்து செலவுகளும் உட்பட.

தென்னிந்திய யாத்திரை

ஆரம்பம்:- 16.04.2020 நாள்கள் - 12

**செல்லும் இடங்கள்:-** உச்சிப்பிள்ளையார், 6 படை வீடுகள், 9 நவக்கிரக ஆலயங்கள், பஞ்சபூதத்தலங்கள் (5), திருப்பதி, மதுரை மீனாட்சி, இராமேஸ்வரம், தஞ்சாவூர், காஞ்சி-புரம், மேல்மருவத்தூர், பிரம்மாகோயில் உட்பட 45 இற்கு குறை யாத ஆலயங்களைத் தரிசிக்கலாம். அனைத்து செலவுகளும் உட்பட உணவு சைவம்.

சீரடி, புர்ட்டப்பர்த்தி, திருப்பதி

ஆரம்பம்: ஒவ்வொரு மாதமும் நடைபெறும். நாள்கள் - 08, விருப்பமானவர்கள் பதிவு செய்யவும். தரிசிக் கும் இடங்கள்- சீரடி 3 நாள்கள், சனி சிங்கனாப்பூர், திரயம்பகேஸ்வரர், ஜோதிலிங்கம் நாசிக், பஞ்சவடி, புர்ட்டப்பர்த்தி, திருப்பதி, அலமேலுமங்கா, காளகஸ்திரி, திருத்தணி அனைத்துச் செலவுகளும் உட்பட. உணவு சைவம்

மலேசியா சுற்றுலா

ஆரம்பம்:- 01.05.2020 நாள்கள் - 05

5 இரவு, 6 பகல், பார்க்குமிடங்கள்:- மலாக்கா, கோலாலம்பூர் உட்பட வேறு சுற்றுலா இடங்களும் காணலாம். உணவு அசைவம், சைவம் (பார்க்கக் கூடிய இடங்கள் அனைத்தும் காணலாம்) AC Room கள், AC வாகன வசதிகள்

இவை அனைத்துக்கும் எமது சேவைகள்

இருவழி விமான ரிக்கட், விமான நிலையம் போகவர வாகனவசதி, மூன்றுவேளை உணவு, காப்பி, ரீ, மினரல் வோட்டர் (குடிநீர்) இரண்டுபேருக்கு கட்டில்மெத்தை, வெஸ்ரன் கொமட், வென்னீர், குளியலறை இணைந்த அறைகள், யாத்திரைகள்,சுற்றுலாக்கள் முழுவதும் AC. வாகனவசதி, யாழ்:கொழும்பு, யாழ்.வாகன வசதி செய்துதரப்படும். விவரங் களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். குறைந்த கட்டணம்.

**வந்தவரைக் கேளுங்கள் தரிசித்து வரலாம் வாருங்கள். நிறைவான சேவை**

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11
Email:- sriranganathan2601@gmail.com, sriranganathan1944@gmail.com
Facebook:- sridevisriranganathanthuraiappa
077 768 0102/ 077 736 2154
(IN/12696)(11.17)



# இந்தியா-நியூசிலாந்து 2ஆவது டெஸ்ட் இன்று

இந்தியா-நியூசிலாந்து அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் போட்டி இன்று அதிகாலை 4 மணிக்கு கிறிஸ்ட்சர்ச்சில் ஆரம்பமாகின்றது.

நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி ரி-20 தொடரை கைப்பற்றியது. பதிலுக்கு நியூசிலாந்து அணி ஒருநாள் தொடரை கைப்பற்றி பதிலடி கொடுத்தது. இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டி இடம்பெற்று வருகின்றது. முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி அபார வெற்றி பெற்றது. இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

நியூசிலாந்து அணி இந்தத் தொடரையும் கைப்பற்றி இந்திய அணிக்கு பதிலடி கொடுக்கும் முனைப்பிலேயே களமிறங்கும். அதே நேரம் இந்திய அணியும் இந்தத் தொடரைக் கைப்பற்றி சமநிலைப்படுத்தும் முனைப்பில் களமிறங்கும். இந்த மைதானத்தைப் பொறுத்த வரையில் வேகப் பந்து வீச்சே ஆதிக்கம்.செலுத்தும் என்பதால் நியூசிலாந்து அணிக்கு வெற்றிக்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. நியூசிலாந்து அணியில் டிரென்ட் போல்ட், டிம் சவுதி அச்சுறுத்திய நிலையில் நீல் வாக்னெரும் அணியுடன் இணைந்துள்ளது அணிக்குப் பெரும் பலம். இந்திய அணியில் மாற்றங்களுக்கு நிறைய வாய்ப்புள்ளது. இந்த மைதானத்தில் இது வரை நடந்துள்ள 6 டெஸ்ட் போட்டிகளில் நியூசிலாந்து அணி 4 போட்டிகளில் வெற்றியும், ஒன்றில் தோல்வியும், ஒன்றில் டிராவும் கண்டுள்ளது.

உடன் தேவை
கணினியில் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் தெரிந்தவர்கள் தேவை. (அனுபவம் உள்ளவர்கள் மட்டும் - பெண்கள்) நேரில் வரவும்.
தொடர்பு - 078 141 2959, 077 223 1147
இராமநாதன் றோட், திருநெல்வேலி

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 . 02 . 1946



மறைவு 03 . 03 . 2017


**அமரர் சின்னத்தம்பி மகாலிங்கம்**
திதி:சஷ்டி

எங்கிருக்கிறாய் தந்தையே!
ஆண்டுகள் பல ஆனதென்று அறிவு எமக்கு கூறுகிறது.
உண்மைதானா இதுவென்று எம் உள்ளுணர்வு மறுக்கின்றது.
கண்மூடி திறப்பதற்குள் எல்லாம் கனவுபோல தான் தெரிகின்றது.
கனவாகிவிடாதா என்றும் எம் நனவு மனம் ஏங்குகின்றது.
மறக்கவும் முடியவில்லை உன்னை மனதில் மறைக்கவும் முடியவில்லை.
தொடர்கின்றது நம் போராட்டம் உன் நினைவு விழுதுகளையும் சுமந்தபடி
விழுதுகள் விருட்சமாகி உன் நிழலை நியப்படுத்தும்.
மனங்கலங்காதே நீயும் அமைதிகொள் படைத்தவன் படி அளப்பான் என்றோ...

காளிகோயில் வீதி, சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
குடும்பத்தினர்.
(CS/31557)(10)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 29 . 04 . 1955



மறைவு 30 . 01 . 2020

**அமரர் லயன் தங்கராஜா அன்பானந்தன்**

எமது குடும்பத்தலைவரின் மறைவுச்செய்தி கேட்டு எமக்குப் பல்வேறு வழிகளில் உதவியும் ஆறுதலும் அளித்த அனைவருக்கும் நேர்முகத்திலும் தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும், தொலை தூரங்களிலிருந்து அன்னாரைத் தேடி வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், போசனமளித்து உதவியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிரியைகள் இன்று (29.02.2020) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

16/1, ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(IN:12706) (13.17)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 24

*சக்கடத்தார் எத்தனை பேர் சறுக்கிய குதிரையிலே*
*பக்குவம் கெட்ட பதர்களும் ஏறியே –வித்துவத்தை*
*காட்டவெண்ணி ஐ.நாவுக்கு எறிந்த கல்லில்*
*மாட்டினர் தாமே தம் மடமையினால்!*
*–ஒட்டுக்குழு சுவாமிகள்*

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 மாசி 17 சனிக்கிழமை (29.02.2020) சிகரம் : 6






# திருக்கேதீஸ்வரத்திலிருந்து எழுவைதீவு வரை...

நிலாந்தன்

அண்மையில் தமிழ் வாக்குகள் சாதி ரீதியாகவும் சமயரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் பிரிக்கப்படும் வாய்ப்புக்கள் அதிகரித்து வருவது குறித்து ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அந்தக் கட்டுரை தொடர்பாக ஒரு சமூக செயற்பாட்டாளர் என்னோடு கதைத்தார். அவர் காரைநகரில் உள்ள சமூகமேம்பாட்டு அமைப்பைச் சேர்ந்தவர்.

கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலின்போது இந்த அமைப்பு என்னோடு தொடர்பில் இருந்தது. அவர்களை ஆதரித்து கட்டுரைகளையும் எழுதி இருக்கிறேன். என்னோடு தொலைபேசியில் கதைத்த நண்பர் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார். சாதி ரீதியாக சமூகத்தைப் பிரிப்பதற்கு நாங்கள் எதிராகவே இருப்போம். நீங்கள் கூறுவதுபோல, தேசிய விடுதலை எனப்படுவது சமூக விடுதலையை உள்ளடக்கியதுதான். சமூக விடுதலை எனப்படுவதுதேசியவிடுதலைக்குஎதிராகத்திரும்பக்கூடாது. ஆனால் “காரைநகரில் எமது சமூகத்தின் மீதான அவமதிப்பும் புறக்கணிப்பும் அப்படியே இருக்கும்பொழுது நாங்கள் எப்படித் தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் கரைவது?” என்று கேட்டார். இந்தக் கேள்விக்குப் பதில் கூற வேண்டியது அரங்கிலுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் தான். தேசிய விடுதலை எனப்படுவது சமூக விடுதலையையும் உள்ளடக்கியதுதான் என்ற அடிப்படையில், குறிப்பிட்ட சமூகங்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கட்சிகள் போதியளவு வேலை செய்திருக்கவில்லை. அந்த வெற்றிடம்தான் தேசியவாதத்துக்கு எதிர் நிலைப்பாடு உள்ள கட்சிகள் மேற்படி சமூகங்களை தமது வாக்கு வங்கிகளாக மாற்ற முயற்சிப்பதற்குக் காரணம்.



அதாவது, தேசியநோக்கு நிலையிலிருந்து தமிழ்ச் சமூகத்தில் காணப்படும் முரண்பாடுகளைக் கையாளத் தேவையான பக்குவமும், தத்துவத் தரிசனமும் அரங்கில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் இல்லை. அந்த வெற்றிடத்தில்தான் இவ்வாறு சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுயேட்சைக் குழுக்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனவா?

இவ்வாறு சமூக ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கப்படும் சமூகங்கள் தங்களுக்குள் திரளாகி தமக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுவது தவிர்க்க முடியாதது. சமூக விடுதலைக்காக குறிப்பிட்ட சமூகங்களைத் திரளாக்காமல், தேசிய விடுதலைக்கான பெருந்திரளாக்கம் பற்றிச் சிந்திக்க முடியாது. ஒடுக்கப்பட்ட ஒரு சமூகம் அந்த ஒடுக்குமுறையின் பெயரால் அந்த ஒடுக்குமுறைக்கு எதிராகத் திரளாவது தவிர்க்க முடியாதது. தேசிய விடுதலை எனப்படுவது, சமூக விடுதலையையும் உள்ளடக்கியதுதான். ஒரு தேசமாகச் சிந்திப்பது என்பது ஜனநாயக அடிச்சட்டத்தின் மீது ஒருவர் மற்றவருக்குச் சமம் என்ற அடிப்படையில் திரளாக்குவதுதான். எந்த ஓர் அடையாளம் காரணமாக ஒரு மக்கள்திரள் ஒடுக்கப்படுகிறதோ அந்த அடையாளத்தின் பேரால் அவர்கள் திரளாகுவது தவிர்க்க முடியாதது. இவ்வாறு இன ரீதியாகவும், மொழி ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் அந்தப் ஒடுக்குமுறைக்கு எதிராக ஒரு பெருந்திரளாகுவதே ஒரு தேசமாக வாழ்தல் என்று பொருள்படும். ஆனால் அந்தக் திரட்சிக்குள் ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடாது.

இந்த விளக்கம், மதமுரண்பாடுகளுக்கும் பொருந்தும். ஒரு தேசிய திரட்சிக்குள் மதங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் இருக்கமுடியாது. மாறாக மதப்பல்வகைமை அங்கே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு மதப்பல்வகைமையை ஏற்றுக்கொண்டு தேசிய நோக்கு நிலையிலிருந்து மதமுரண்பாடுகளை அணுக வேண்டும். ஆனால் அண்மைக்காலங்களில் தமிழ்ச் சமூகத்துக்குள் மதமுரண்பாடுகள் மதநோக்கு நிலையில் இருந்தே அணுகப்படுவதாகத் தெரிகிறது. குறிப்பாக, திருக்கேதீச்சர வளைவு விவகாரம், ஊர்காவற்றுறையில் வீதிகளின் பெயர் மாற்றப்பட்ட விவகாரம் எழுவைதீவில் இரண்டு பாடசாலைகள் விவகாரம் என்பவை ஏற்படுத்திய எதிர்விளைவுகள் அதைத்தான் காட்டுகின்றன.

திருக்கேதீச்சர வளைவு விவகாரத்தை நீதிமன்றத்துக்கு போகவிட்டமை, தமிழ்த் தேசியநோக்கு நிலையில் ஒரு தோல்வி. அந்த விவகாரத்தை மதபீடங்கள் அணுகுவதற்கு பதிலாக, அதை ஒரு சட்டப் பிரச்சினையாக அணுகுவதற்கு பதிலாக அதை ஒரு தேசிய பிரச்சினையாக, தேசிய நிலையிலிருந்து ஒரு சிவில் அமைப்போ அல்லது கட்சியோ அல்லது பேரவை போன்ற ஒரு மக்கள் இயக்கமோ கையாண்டு இருந்திருக்கவேண்டும். அப்படிப்பட்ட அரசியல் தரிசனமுடைய அமைப்புகளும் கட்சிகளும் இல்லாத வெற்றிடத்தில் அந்த விவகாரம் நீதிமன்றத்துக்கு சென்றிருக்கிறது. அந்த வெற்றிடம் காரணமாகத்தான், ஊர்காவற்றுறையில் வீதிகளைப் பெயர் மாற்றுவது ஒரு விவகாரமாகியது.

எழுவைதீவில் இரண்டு பாடசாலைகள் விவகாரம் மதமுரண்பாடுகள் பெரிதாகும் விதத்தில் விளைவுகளை ஏற்படுத்தியது. குறிப்பாக, எழுவைதீவு விவகாரத்தில் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட ஓர் ஊடகத்தில் பிரசுரிக்கப்பட்ட பத்தியில் தகவற் பிழைகள் இருப்பதாக எழுவைதீவு மக்களில் ஒருசாரார் கூறுகிறார்கள். அந்தப் பத்திரிகையின் அலுவலகத்துக்கு வந்த ஒரு குழுவில் இந்துமதத்தினரும் அடங்குவர் என்றுஅவர்கள் கூறுகிறார்கள்.

தமக்கு நியாயம் வேண்டும் என்று கேட்டே தாங்கள் அந்தப் த்திரிகை அலுவலகத்துக்கு வந்ததாக கூறுகிறார்கள். அவர்களை அவ்வாறு போகுமாறு தூண்டியது ஒரு கத்தோலிக்க மதகுருவே என்று பத்திரிகைத் தரப்பு குற்றஞ்சாட்டுகிறது.

*(14ஆம் பக்கம் பார்க்க)*







புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்


மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட , வன்னிவிளாங்குளம் பாலைப்பாணியில் பெப்ரவரி 6 ஆம் திகதி , ஜெயாண்ணை எனப்படும் பால்ராஜா ஜெகதீஸ்வரன் என்பவர் கட்டுத்துவக்கால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது கொலை தொடர்பான மர்மங்களைத் துப்புத்துலக்க வழமை போல, எமது புலனாய்வுக்குழு களமிறங்கியது. பொலிஸார், ஊர் மக்கள் , இறந்தவரின் குடும்பத்தினர், சந்தேகநபர்களின் குடும்பத்தினர் ஆகியோரிடம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சில மர்மமுடிச்சுகளை அவிழ்க்க முடிந்தது. அவற்றை சஞ்சீவி வாசகர்களுக்காக இங்கு தருகிறோம்



# காட்டுக்குள் ஒரு கொலை!

## காட்டிக் கொடுத்த கட்டுத்துவக்கு!!!

○ கதிர்



சற்று நேரத்தில் நடக்கப்போகும் விபரீதத்தை உணராமல் பனிக்குளிரில் உறைந்து கிடந்தது குக்கிராமமான 'பாலைப்பாணி'.சுற்றிலும் காடுகளையும், வயல்களையும் கொண்ட ஊர் அது.

விடிகாலையின் அமைதியைக் குலைத்தது அந்தச் சத்தம்.

" டுமீல்"

சந்தேகமேயில்லாமல் அது வேட்டோசை.

காதை அதிரச் செய்த அந்த ஒலி கேட்டு , சிறு குருவிகள் கீச்சிட்டபடி கூட்டமாகப் பறந்தோடின. வெடிச் சத்தமும், குருவிகளின் அங்கலாய்ப்பும் சேர்ந்து ஒரு செய்தியை அந்த ஊர்மக்களுக்குச் சொல்லிச் சென்றன.

பாலைப்பாணி மக்கள் வேட்டோசையை வைத்தே, அது யாரால் தீர்க்கப்பட்டது என்பதை ஊகிப்பதில் வல்லவர்கள்.

அவர்களுக்குத் தெரியும், இது 'அவன்' வைத்த வெடிதான்.

" இண்டைக்கும் ஏதோ மானுக்கோ, மரைக்கோ வெடி வச்சிட்டான் போல" என்று தமக்குள் சொல்லிக் கொண்டே அவர்கள் தத்தம் வேலைகளில் மூழ்கிவிட்டனர்.

ஆனால்... அந்த வெடி , மானுக்கோ, மரைக்கோ வைக்கப்படவில்லை என்பதை அடுத்த சில நிமிடங்களில் பாலைப்பாணி மக்கள் உணர்ந்து கொண்டனர்.

**வேட்டோசைக்கு சில நிமிடங்களுக்கு முன்னர்...!**

வயல்வெட்டுக்காக ( நெல் அறுவடைக்காக )ஒரு தேநீரை உறிஞ்சிவிட்டு மோட்டார் சைக்கிளில் பனியை ஊடறுத்துப் போய்க் கொண்டிருந்தார் ஊரவர்களால் ஜெயாண்ணை என்று அழைக்கப்பட்ட ஜெகதீஸ்வரன். பனிப்புகார் பாதையை மூடிக் கிடந்தது. எதிரே யார் நின்றாலும் கிட்டப் போனாலே ஒருவர் நிற்கிறார் என்பதைக் கண்டுபிடிக்க முடியும். அந்த அளவுக்கு பனி தன் விளையாட்டை முடிக்காமல் வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தது. வழக்கமாக பனிக்குளிரில் இருந்து தப்பிக்க ஜெயாண்ணை ஹெல்மெட்டும், நீண்ட சப்பாத்தும் அணிந்தே வயலுக்குப் போவார். அன்றைக்கு ஏனோ ஹெல்மெட் 'மிஸ்ஸிங்'.

குளக்கட்டுப் பாதையை அண்மித்த போது

எதிரே யாரோ மறிப்பது போல தென்பட, மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கொஞ்சம் அவர் தணிக்கவும்,

"டுமீல்' என்ற வேட்டோசை கேட்கவும்,

கட்டுதுவக்கு ஒன்றிலிருந்து ஈயக்குண்டு பாயவும்,

அவரின் காதுப்பக்கமாக சூடான ரத்தம் தெறிக்கவும் சரியாக இருந்தது.

குண்டடிபட்ட ஜெயாண்ணை அப்படியே உயிரற்று, மோட்டார் சைக்கிளோடு கீழே சாய்ந்தார். வெடிபட்ட இடத்திலிருந்து குருதி 'குபுகுபு' வென, வெள்ளம் போலப் பாய்ந்து, அந்த இடத்தை ஒரு அவசரத்தனத்தோடு நனைக்கத் தொடங்கியது.

அதேநேரம் அவருக்கு எதிர்ப்புறமாக உள்ள புதரில் இருந்து எழுந்த ஒரு உருவம் கையில் கட்டுத்துவக்கோடு, அடர்காட்டுப் பகுதியை நோக்கி அவசரமாக ஓடத் தொடங்கியது. கட்டுதுவக்கில் இருந்து இன்னமும் புகை கிளம்பியபடி இருந்தது.

**வேட்டோசையின் பின்னர்...!**

வயல்வேலைக்காக சென்று கொண்டிருந்த இளைஞர்களே முதலில் ஜெயாண்ணையின் உடலைக் கண்டார்கள்.

குருதி கொப்பளிக்க, கண்கள் நிலைகுத்திட, அவர் உடலைக் கண்டபோதே உடலில் உயி ரில்லை என்பது அவர்களுக்குப் புரிந்துவிட்டது.

" ஆள் செத்திட்டு... ஒருத்தரும் கிட்டப் போகவேண்டாம் .. பொலிசுக்கு அறிவியுங்கோ" ஒருவர் சொல்ல,

பொலிஸுக்கும், ஊர்க்காரர்களுக்கும் ஓடிப்போய்ச் சொன்னார்கள். கொஞ்ச நேரத்திலேயே, ஜெயாண்ணையின் சடலத்தை சுற்றி , ஊர்மக்கள் கும்பலாகத் திரண்டுவிட்டார்கள். ஆளாளுக்கு அவரின் சாவுக்கான காரணத்தை அங்கேயே சிலாகித்தபடி, ஜெயாண்ணைக்காக பரிதாபப்பட்டார்கள். அப்படி அவர்கள் சிலாகித்த காரணங்களில் இரண்டு மிக முக்கியமானவை.

**1. நேற்றிரவு ஊர் இளைஞர்களுக்கும் அவருக்கும் இடையே ஏற்பட்ட அடிதடி**
**2. நீண்டகாலமாக இழுபடும் காணிப்பிரச்சினை**

இந்த இரண்டில் ஒன்றுதான், அவரின் உயிரைக் குடிக்கக் காரணம் என்பது மக்களின் நம்பிக்கை. இப்போதும் அப்படியே நம்புகிறார்கள். இந்த இரண்டும் இல்லாவிட்டால், அவரின் 'தனிப்பட்ட நடத்தை' பிடிக்காதவர்கள் செய்த வேலையாக இருக்க வேண்டுமெனவும் சிலர் தமக்குள் கதைத்துக் கொண்டனர். ஏனெனில், அந்த ஊரின் 'மைனராக' ஜெயாண்ணை அறியப்பட்டிருந்தார்.

அதற்கிடையில் புழுதியைக் கிளப்பிக் கொண்டு பாலைப்பாணிக்கு பொலிஸாரினதும், அதிகாரிகளினதும் வாகனங்கள் படையெடுக்கத் தொடங்கின. அது நாள்வரை அந்த ஊரை எட்டியும் பார்த்திராத அந்த அதிகாரிகளும், வாகனங்களும் ஜெயாண்ணையின் கொலையைச் சாட்டாக வைத்தாவது வந்தனவே என்று மக்கள் எண்ணிக் கொண்டார்கள்.

பொலிஸ் வந்ததுமே உடனடியாக விசாரணையில் இறங்கி விட்டது. அங்கிருந்தவர்கள் அனைவருமே ஊர்க்காரர்கள். அதனால் அவர்களின் வீடுகளுக்குச் சென்று விசாரிப்பதை விடவும் அங்கேயே விசாரிப்பது சுலபம் என்பதைக் கணக்கிட்டிருப்பார்கள் போலும்.

" சடலத்தை ஆர் முதலிலை பார்த்தது?"

"எத்தினை மணிக்கு வீட்டை விட்டு வெளிக்கிட்டவர்?"

" வெடிச்சத்தம் எத்தினை மணிக்குக் கேட்டது?"

"அவருக்கு எதிரிகள் ஆரும் இருக்கினமா?"

இப்படி வழக்கமான பாணியில் ஒரு தரப்பு விசாரித்துக் கொண்டிருக்க, இன்னொரு பொலிஸ்தரப்பு தடயங்கள் ஏதும் சிக்குமா? என்று தேடலில் இறங்கியது. கொஞ்சநேரத் தேடலின் பின்னர் ஜெயாண்ணையின் தலைக்குள் சென்று வெளியேறிய ஈயக்குண்டு ஒரு பற்றைக்குள் கண்டுபிடிக்கப்பட்டது. சடலம் இருந்த இடத்துக்கும் ஈயக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட இடத்துக்குமான இடைவெளி 40 மீற்றர். அந்தளவு வேகத்தோடு தலையைப் பிளந்துகொண்டு அந்த ஈயக்குண்டு வெளியேறியிருக்க வேண்டுமானால், வெடிபொருள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அத்தோடு கொலையாளி பதுங்கியிருந்ததாக நம்பப்படும் புதரை அண்மித்த இடத்தில் கசக்கப்பட்ட நிலையில் ஏதோவொரு புத்தகத்தில் இருந்து கிழிக்கப்பட்ட கடதாசியும், சில பீடித்துண்டுகளும் மீட்கப்பட்டன. அவற்றில் இருந்த கைரேகைகளும் சேகரிக்கப்பட்டன.

புதரில் இருந்து கொலையாளி தப்பியோடிய பாதையை அண்ணளவாக , காலடி பட்டு நசிந்து போன செடி, கொடிகள் காட்டிக் கொடுத்தன. ஆனாலும் ஓரளவு தூரத்துக்கு மேல் அந்தத் தடங்களை இனங்காண்பது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை.

ஆரம்ப விசாரணைகள் பூர்த்தியான பின்னர் பொலிஸார் சில முடிவுகளைச் சொன்னஎர்கள்..

" மிக அண்மையாக இருந்து சுடப்பட்டதாலேயே இப்படியான காயம் தலையின் பக்கவாட்டாக ஏற்பட்டுள்ளது. அவர் வேகமாகச் சென்று கொண்டிருக்கும் போது சுடப்பட்டிருக்க முடியாது. ஒன்றில் அவர் மறிக்கப்பட்டு சுடப்பட்டிருக்க வேண்டும். அல்லது அவரின் வேகம் தணிந்த சமயம் இலக்குப் பார்த்து சுடப்பட்டிருக்க வேண்டும். கொலைக்கான ஆயுதம் கட்டுத்துவக்குத்தான். குறைந்த பட்சம் ஆறுபெட்டி தீக்குச்சிகளில் உள்ள வெடிமருந்து பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நன்றாக இலக்குப் பார்த்துச்

சுடக்கூடிய, கட்டுத்துவக்கைக் கையாள்வ தில் அனுபவம் மிக்கவர் ஒருவர் தான் இந்தக் கொலையைச் செய்திருக்க வேண்டும்"
பொலிஸார் இப்படிச் சொல்லிக் கொண்டி ருக்கும் போதே, அங்கிருந்தோரின் கண்கள் தம்மையுமறியாமல், 'அவனை' நோக்கித் திரும்பின.
ஜெயாண்ணை அந்த ஊரின் மைனர் என் றால், இவனோ பாலைப்பாணியின் முதல்தர வேட்டைக்காரன். வைச்ச குறி தப்பாது. ஒரே வெடியில் மிருங்கங்களை அடிப்பதற்கு அவனைவிட்டால் வேறை ஆளில்லை. காலை யில் வெடிச்சத்தம் கேட்டபோது, மக்கள் இவன் வேட்டைக்கு வைத்த வெடியென்றே நினைத்தார்கள். அவன் தான், கண்ணா!
கண்ணாவுக்கும், ஜெயாண்ணைக்கும் முதல் நாளிரவுதான் பெரும் அடிதடி ஒன்று நடந்து முடிந்திருந்தது.
அந்தத் தகவல் பொலிஸாருக்கும் சொல்லப் பட, சந்தேகத்தின் பேரின் கண்ணாவுக் கும்,அவரது சகாவான நிசாந்தன் என்பவருக் கும் கைவிலங்கு போடப்பட்டது.

## வேட்டோசைக்கு முன்னரான காணிப்பிரச்சினை

பாலைப்பாணியில் 58ஏக்கர் வயல் நிலம் தனக்குச் சொந்தமானதென ஜெயாண்ணை உரிமை கோரி யுள்ளார். ஆனால் அந்த நிலம் அரச காணி என் றும், நீண்ட காலமாக தாங்களே விவசாயம் செய்து வருவதால் தங்களுக்கே அதைத் தர வேண்டும் எனவும் அப்பகுதியில் வசித்துவரும் 11 விவசாயி கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, இன்ன மும் அந்த வழக்கு தீர்க்கப்படாமல் நீள்கிறது.

அந்த வயல் காணி 1958 காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் கிளி நொச்சி நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது. பின்னர் அவர் இடம்பெயர்ந்து சென்றதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வருவாய்த்துறையினர் அந்தக்காணி களைக் கையகப்படுத்தி, விவசாயம் செய்வதற் காக ஊரவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துள்ள னர்.

இறுதிப் போரின் பின்னரான மீள் குடி யேற்றத்தின்போது, நீர்ப்பாசன உத்தியோகத்த ரின் மருமகன் முறையான ஒருவர் பரந்தன் பகு தியிலிருந்து வந்து அதனைத் தமது காணியை என்று உரிமை கோரி அதில் ஒருபகுதியில் விவசாயம் செய்துள்ளார்.
மிகுதிக் காணியை இராணுவம் ஊரவர்க ளிடம் விவசாயம் செய்யப் பகிர்ந்தளித்துள் ளது. இந்நிலையில், ஒரு சில வருடங்க ளுக்கு முன்னர் நீர்ப்பாசன உத்தியோகத்தரின் மகள் வெளிநாட்டிலிருந்து வந்துள்ளார். அவர் தனது தந்தையின் மருமகன் முறையானவரி டமி ருந்து காணியை மீள பெற்றுக்கொள்ளும் நோக் கில், ஜெயாண்ணையின் பெயரிற்கு கள்ள உறுதி முடித்துக் கொடுத்ததாகவும், பின்னர் இருவருக் கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக மீள காணியை பெற்றுக்கொள்ள முயற்சித்த தா கவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், "இந்தக் காணி எங்களது பரம் பரை காணி. அவரின் (ஜெயாண்ணையின்) தந்தை யாருக்குச் சொந்தமான காணி. இங்கே விவசா யம் செய்து கொண்டிருக்கும்போதுதான் அவ ரின் (ஜெயாண்ணையின்) தந்தையாரான பால் ராஜா இலங்கை இராணுவத்தால் சுட்டுக்கொல்லப் பட்டார் . காணியின் உறுதி எங்களிடமே உள் ளது" என்று ஜெயாண்ணையின் குடும்பத்தினர் கூறுகின்றனர்.

ஊரவர்கள் சிலருக்கும் ,ஜெயாண்ணைக் கும் குறித்த வயல் காணி தொடர்பாக அடிக்கடி முட்டல், மோதல்கள் தொடர்ந்துள்ளன. இந்த முரண்பாடுகளால் ஜெயாண்ணைக்கு ஆதரவாக ஒரு பகுதியும், எதிராக இன்னொரு பகுதியுமாக ஊரே இரண்டுபட்டது. கடந்த தைப்பொங்கல் தினத்தன்றும் இந்த இருகுழுக்களும் மோதிக் கொண்டுள்ளன. அப்போது இரு தரப்பினரையும் ஜெயாண்ணையே சமாதானப் படுத்தியுள்ளார்.
நீண்டகாலமாகத் தொடர்ந்த இந்தக் காணிப்பிரச்சனையும் ஜெயாண்ணையின் உயி ரைக் குடித்திருக்கக் கூடும்

## வேட்டோசைக்கு முதல் நாள் (பெப்ரவரி 05)

வயல்வெட்டு வேலை நடப்பதால், இரவிலும் நீண்டநேரம் ஜெயாண்ணை அங்கேயே நிற்பதுண்டு. நாலைந்து பேருடன் வயலை அண் மித்த பாதையில் நின்று அவரும், சிலரும் அரட் டையடித்துக் கொண்டு நின்றனர். அப்போது வேகமாக வந்தது ஒரு மோட்டார் சைக்கிள் .வந்த வேகத்திலேயே மணலில் சறுக்கி , நிலைதடுமாறி, சரிந்து பின்னர் மீண்டது. இன்னும் கொஞ்சம் சறுக்கியிருந்தால், மோட்டார் சைக்கிளில் வந்த வன் விழுந்திருப்பான். இப்போது அவன் மோட் டார் சைக்கிளை நிறுத்தி விட்டு ஜெயாண்ணையை நோக்கி உரத்துச் சத்தமிடத் தொடங்கினான்.
" ஒரு சைட்டா நிண்டு கதைக்கத் தெரி யாதோ, எருமையள் மாதிரி நடுறோட்டில நிக்கிறி யள், மற்றவை போய் வாறேல்லையோ?"
பதிலுக்கு ஜெயாண்ணையும், கூட இருந்த வர்களும் கத்த அவன் அங்கிருந்து, ஆத்திரத்தோடு மோட்டார் சைக்கிளை முறுக்கிக் கொண்டு பறந்து விட்டான். அப்படிப் போனவன் அடுப்பட்ட பந்தாக அடுத்த சில நிமிடங்களில் ஆட்களையும் கூட்டிக் கொண்டு திரும்ப அவ்விடத்துக்கு வந்தான்.
அவன் கூட்டி வந்த ஆட்களில் ஒருவன் , கண்ணா!
வந்தவர்களோடு கொஞ்சம் இணக்கமாகப் போகவே ஜெயாண்ணை விரும்பினாலும், அங்கி ருந்த சூழல் அதற்குச் சாதகமாக அமையவில்லை. இருதரப்புகளுக்கும் இடையே அடிதடி மூண்டது. ஜெயாண்ணை தரப்பின் கையே அந்த அடிதடியில் ஓங்கியது. கண்ணா அணியில் ஒருவருக்கு மருத்துவம னைக்கு கொண்டு செல்லவேண்டியளவுக்குக் காயம். காயமடைந்தவனையும் ஏற்றிக் கொண்டு கண்ணா அங்கிருந்து செல்லும் போது ஜெயாண்ணையைப் பார்த்து அடிபட்ட புலியாக உறுமினான்
" உன்னைக் கொல்லாமவிடமாட்டன். நாளைக்கு உன்ர வீட்டில வெள்ளைக்கொடி பறக்கும் " போய் விட்டான். அத்தோடு அவன் ஆத்திரம் அடங்கவில்லை. பின்னிரவில் ஜெயாண்ணைக்கு ஒரு தொலைபேசி அழைப்பு. மறுமுனையில் பேசியது கண்ணா.
" விடிய உன்னை வெடி வைச்சுக் கொல்லுவன். திரும் பவும் சொல்லுறன், நாளைக்கு உன்ர வீட்டில வெள் ளைக்கொடி பறக்கும் "
ஜெயாண்ணை நக்கலாக ஏதோ சொல்லிவிட்டுப் படுத்துவிட்டார். விடிகாலையில் உண்மையாகவே வெடி விழும் என்று அவர் கனவிலும் நினைத் திருக்க மாட் டார்.


கண்ணாவின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் அங் குள்ள கட்டுத்துவக்கைக் கைப்பற்றினர். ஆனால் அவர் களுக்கு ஏமாற்றம். அந்தத் துவக்கைப் பயன்படுத்தி நீண்டகாலமாகியிருந்தது. மிக அண்மையில் அதைப் பயன்படுத்திய எந்தத் தடயமும் அதில் இல்லை. அப்படியானால் கண்ணா கொலை செய்யவில் லையா? அல்லது கொலைக்குப் பயன்படுத்திய துவக்கு வேறு, வீட்டிலிருந்த துவக்கு வேறா? என்ற கோணத்தில் விசாரணை தொடங்கியது.
மீண்டும் கொலை நிகழ்ந்த இடத்துக்குச் சமீபமாக தடயவியல் பிரிவின் உதவியோடு தேடுதல் தொடர்ந்தது.
அங்கு ஒரு பற்றைக்குள் கண்ணாவின் உண்மை யான கட்டுத்துவக்கு கண்டுபிடிக்கப்பட்டது. அது மிக அண்மையில் பயன்படுத்தப்பட்டிருந் தது. அந்தத் துவக்கோடு இடுப்பில் கட்டும் பை ஒன்றும் மீட்கப்பட்டது. அந்தப் பையில் துவக் குக்குப் பயன்படுத்தும் ஈயக்குண்டுகளும் இருந்துள்ளன. கூடவே ஒரு பற்றுச் சீட்டும். ஏதோ ஒரு வர்த்தக நிலையத்தில், கண்ணா வின் மனைவியின் மகன் ( மனைவி கண் ணாவை இரண்டாந்தாரமாக மணமுடித்தி ருந்தார்)ஒரு 'பொக்ஸ்' வாங்கியமைக்கான பற்றுச்சீட்டே அது. ஆக, அந்தப் பை கண்ணா வீட்டுக்குரியது. அதிலிருந்த குண்டுகளும் கண்ணாவினுடையவை.
ஏன் அந்தப் பையையும், துவக்கையும் கண்ணா அந்தப் பற்றைக்குள் போட வேண்டும்? ஒருவேளை தன்மீது சந்தே கம் வந்தாலும், தடயமேதும் கிடைக் காமல் செய்யத்தான்.
"ஜெயாண்ணையைச் சுட்டுவிட்டு ஓடும்போது, முதல் வேலையாக கட் டுத்துவக்கை ஒரு பற்றைக்குள்ளும், ஈயக்குண்டுகள் அடங்கிய இடுப்புப் பையை இன்னொரு பற்றைக்குள் ளும் தூக்கியெறிந்துள்ளார் கண்ணா. அவை பொலிஸாருக்கு கிடைக்காது என்று நினைத்துள்ளார். ஆனால் கிடைத்துவிட்டது.கட்டுத்துவக்கு கண்ணாவைக் காட்டிக் கொடுத்து விட்டது" என்று பொலி ஸார் கூறு கின்றனர்.

## தடயம்



கொலை நடந்த இடத்தில் சில பீடிக் கட்டைகள் மீட்கப்பட்டி ருந்தன அல்லவா. அப்படி பீடி புகைக்கும் போது, பீடியின் அடிப்பக்கத்தை கிள்ளியெறிந்து விடுவது கண்ணாவில் இயல்பு. ஜெயாண்ணை வருமவரை புத ருக்குள் பீடி குடித்தவாறு இருந்த கண்ணா, தன்னையும் மறந்து வழக்கம் போல பீடியின் அடிப்பாகத்தை கிள்ளியுள்ளார். அத்தோடு தொலைவில் உள்ள கடையொன்றில் சம்பவம் நடந்த அதிகாலையில் சென்று கண்ணாவின் மனைவி பீடிக் கட்டு வாங்கியுள்ளார். பீடியும் கண்ணாவைக் காட்டிக்கொடுக் கும் தடயமாக்கி விட்டது.

## தடயம்



அதே இடத்தில் ஒரு புத்தகத்தில் இருந்து கிழித்தெடுக்கப்பட்டு , கசக்கப்பட்ட கடதாசியும் கண்டு பிடிக்கப்பட்டது. அந்தக் கடதாசி, கண்ணாவின் மகனுடைய பாடப் புத்தகமொன்றில் இருந்தே கிழிக் கப்பட்டுள்ளது. அந்தக் கடதாசி மூலமே துவக்குக்குள் தீக்குச்சி மருந்தை உள்ளே போட்டு அடைத் துள்ளார் கண்ணா.



(23ஆம் பக்கம் பார்க்க)

# மௌன மொழி 5 இற்கான கவிதைகள்



வறுமை தரும் வரப்பிரசாதம்
சிறுபிள்ளை தொழில் போதலாம்
ஐந்தாறு காசுக்காக அடுத்தவன் வலையில்
பிடித்த மீனை கொடுத்து விட்டு
பிச்சைக் காசை வாங்கிக் கொண்டு
பசிக்காக ஏங்கி நிற்கும் உன் வயிற்றுக்கு
கல்வி தான் சோறு போடுமென இந்த ஜகத்தினால்
கற்றவர் ஓங்கியுரைத்திடல் வேண்டும்.........

**சியாளினி சூரியகுமார்,**
யாழ்.பல்கலைக் கழகம்.

**சதிவலை வீசி சாகடிக்க**
**நினைக்காதே......**
**வலைவீசி மீன் பிடித்து**
**உயிர் வாழத் துடிக்கின்றோம்...**
**சாதி பல செய்து சாகடிக்க**
**நினைத்தாலும் சளைத்திட**
**மாட்டோம்.....!**

**V. ரவி, சுதுமலை.**

மனிதன் மீன்களை மடக்கிட
வலை வீசிப் பொறி வைக்கலாம்
பாவம் மனிதனை மனிதன் மடக்கிட
மாநிலத்தில் வைக்கப்படும் பொறிகளுக்கு
இரையாகிடும் இளைத்த மனிதரைக் காத்திட
இன்று வரை எவரும் பிறந்திடவில்லையே
காரையோகா, காரைநகர்.

உதயத்தை இதயத்தில் பதித்து
உயிரையே பணயம் வைத்து
உறக்கமின்றி மீன் பிடித்து
உயிர் வாழ உழைப்பவரால்
ஊரே வாழ்கின்றது
அவர் வாழ்வு கடலோடு கரைவதை
எவர் எண்ணிப் பார்க்கிறார்
அவர்களும் உயிரளிப்பவரே

**அபி. அருண் நிஷாந்தினி,**
கொழும்புத்துறை.

**கரை வலை**
**தரை வலை**
**வரும் வரை**
**உணவு தேடி**
**கடல் மேல்**
**சிறகை விரித்து**
**பறந்து திரியும்**
**பறவையாய் மனம்**

க.நாகராசா,
நுணாவில் மத்தி.

வயிற்றுப் பசிக்கு
வலைவிரிக்கும் மனிதனும்
வயிற்றில் பசியுடன்
வலையில் மாட்டும் மீனும்
அகலப் பரந்த ஆழியில்
அலைமோதும் காட்சியில்
அர்ப்பணிப்பு செய்வது
மீனா? மனிதனா?

**லயஸ்ருதி சிவகுமார்,**
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை.

நான் எனும் அகந்தையில்
சதி வலை விரித்து மீன் எனப் பிறரை
பிடிக்க நினைப்பதால்
தனது வலையில் தானே சிக்கி
அழிவைத் தேடுகிறது மனித குலம்!

**ச.சர்ஜீகன்**
யாழ்.இந்துக் கல்லூரி

**தேடலிடையே பசியையும்**
**வாடலிடையே வறுமையையும்**
**புதைக்க வலையிடையே**
**புதையல் தேடும் வர்க்கம்....!**

**மஞ்சுளா சுப்பிரமணியம்,**
கொழும்பு பல்கலைக்கழகம்.

இவை உண்மையான
மீன்களல்ல!
வலையில் அகப்பட்ட
பிளாஸ் ரிக் மீன்கள்!
மேல்நாடு தந்த
நாகரீகப் பரிசு இவை!
மிதமிஞ்சிய கழிவுகளை
சுமக்கின்றதே நம்கடல்!

**சி.பிருந்தாவனசாரங்கன்,**
கொக்குவில் மேற்கு.

ஓயாத அலைகள்
ஓய்ந்துவிட்ட நிலையில்
வீசிவிட்ட வலையில்
அகப்பட்டது மீன்குஞ்சா
இல்லை இல்லை அதுவே கஞ்சா
யார் எவர்க்கும் அஞ்சா
நஞ்சு சுமந்தவர் பூமி
நாறிக்கிடக்குதே சாமி.........

**இ.சிவசிறிதரன்,**
சங்கானை.

**பரிசு பெறும் கவிதை**

**அக்கரைக்கும் இக்கரைக்கும்**
**அலையலையாய்**
**தாவிடும் மீன்கள்**
**கரை வலையில் சிக்குண்டு**
**கலங்கித் தவிக்கின்றனவே!**
**அயலான் கரைதொட்ட**
**அத்தனை நம்மவர்க்கும்**
**இதே கதிதான்**
**இது விதியா? சதியா?**

K. அச்சுதன், சாவகச்சேரி.

பேரினவாதத்தின்
பேரழிவு தரும் சதி
வலையினில் மாட்டி
விடுபடமுடியாமல்
சீரழியும் தமிழினம்
மீனவனின் வலையினில்
மாட்டிய போதும்
மானத்துடன் போராடி
மரணத்திலிருந்து
விடுபடத்துடிக்கும் மீனினம்


**வேலாயுதபிள்ளை பாமா,**
முல்லைத்தீவு.

சாகரமே எங்கள் சமுத்திர பெண்ணே
பாகமடி நீ எமக்கு பசிக்கமுது அளிப்பதனால்
மோகமடி எம்மவர்க்கு மோகனமுனை சார்ந்ததால்
தாகமடி எந்தனுக்கு தாய்த்தமிழில் உனைபாட

முத்தமிழ் தாயினும் மூத்தவள் நீயன்றோ
முத்துக்கள் சொரியும் வித்தகி நீயன்றோ
அத்தியின் மத்தியில் சிறுமுத்து எம்தேசம்
சொத்தென உனைகாக்கும் வித்துக்கள் நாமாவோம்

**சு.லென்சிகா**

# மௌன மொழி 6




இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *uthayansanjeevi@gmail.com*

**உங்கள் கவிதைகள் எங்கள்**
**கதவைத் தட்ட**
**வேண்டிய கடைசி நாள்:**
**06.03.2020**
0773165555




சிக்மலிங்கம் றெஜினோல்ட்

நாமே நமக்கான பெயரை (அது இன்னொரு பெயராக இருக்கலாம். அல்லது புனை பெயராகக்கூட இருக்கலாம்) வைத்துக் கொள்வதற்கு எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. சிலருக்குத் தான் அது வாய்க்கிறது. இந்த வாய்ப்புக் கிடைப்பது, ஒன்று கலைஞர்கள் எழுத்தாளர்களுக்கு. மற்றது போராளிகளுக்கு.

எழுத்தாளர்களும் கலைஞர்களும் தங்களுக்கு விருப்பமான இன்னொரு பெயரைச் சூட்டிக் கொள்வார்கள். அது புனைபெயராகி விடுகிறது. அல்லது அவர்களுக்கு அந்த இன்னொரு பெயரை அந்தத் துறையோடு தொடர்புள்ளவர்கள் சூட்டி விடுகிறார்கள். இந்த வகையில்தான் க.குணராசா, செங்கை ஆழியான் ஆனார். இராஜகோபால், செம்பியன் செல்வன் என்றானது. பாலநடராஜ ஐயர், இளையவன் ஆகியதும், முத்தையா, ஜெயகாந்தன் என்றானதும், அன்ரனிதாசன் சோபசக்தியாக அறியப்பட்டதும், இளங்கோ, கோணங்கி ஆகியதும், எஸ். பழனிச்சாமி, சி. மணி எனவும் டி.கே. துரைச்சாமி நகுலன் என மாறியதும் கூட இப்படித்தான்.

மேலும் சொல்வதானால், இப்படிப் புனை பெயர்களால் அறியப்பட்டவர்கள் ஏராளம். தியாகசேகரன் - திசேரா, நடேசன் - தெணியான், உதயணன் - சித்தாந்தன், சிறிகுமரன் - இயல்வாணன், கருணாகரன் - திருமாவளவன், கிறிஸ்தோபர் - கி.பி. அரவிந்தன், ரமணேஸ் - அஸ்வகோஸ், அத்தீக் - சோலைக்கிளி, உருத்திரமூர்த்தி - மஹாகவி, சின்னத்துரை - நீலாவணன் என நிறையவுண்டு. இப்படியே நூற்றுக்கணக்கான பெயர்களைச் சொல்லலாம்.

சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட புனை பெயர்களைத் தங்களுக்குத் தாங்களே வைத்துக் கொண்டதும் உண்டு. பிரமிள் இதற்கொரு உதாரணம். தருமு சிவராம், பானுசந்திரன், தருமு அரூப் சீவராம், பிருமிள், பிரமிள், தர்மு சிவராம் எனப் பல பெயர்களில் எழுதினார் பிரமிள். சிலர் தங்களுடைய சொந்தப் பெயரைச்சுருக்கி வைத்துக் கொள்வதுமுண்டு.



க.நா. சு, தி.க.சி, ஜேகே, எஸ்.பொ, மு.த, மு.பொ என. பின்னாளில் இந்தப் பெயர்களே பிரபல மாகி, சொந்தப் பெயர் என்ன என்று அவர்களே மறந்து விடும் அளவுக்கு ஆகியிருக்கிறது.

சினிமாவில் இது இன்னும் உச்சம். சின்னசாமி என்றொரு இயக்குநர் தமிழ்த் திரையுலகில் புகழ் பெற்றிருந்தாரே என்றால் யாருக்குமே அவரைத் தெரியாது. ஆனால், பாரதிராஜா என்றால் உடனே "ஓ.. அவரா!" என்று கண்களை விரித்து வாயைத் திறந்து விடும் ஆச்சரியம். அப்படித்தான் ராசய்யாவைத் தெரியாத பலருக்கும் இளையராஜா என்றால் தெரிந்து விடும். சிவாஜி ராவ் என்றால் நெற்றியைச் சுருக்கு வோர் ரஜினிகாந் என்றவுடன் கண்களை விரிப்பர். பாலநாதன் பெஞ்சமின் மகேந்திரனைத் தெரியுமா என்றால் உதட்டைப் பிதுக்கும் உங்களுக்கு பாலு மகேந்திரா என்றால் ஏதோ நெருங்கிய கூட்டாளியைத் தெரிந்ததைப்போலாகி விடுகிறது. ஆசா கேளுண்ணி குட்டியைத் தெரியாதவர்களுக்கெல்லாம் ரேவதியைத் தெரிந்து விடுகிறது. பழநிச்சாமி என்பது வேறு யாருமே அல்ல. அதுதான் நடிகர் சிவகுமார். சுப்பையாவே சத்யராஜ் ஆகினார். நம்பக்கடினமாக இருக்கலாம், பஞ்சாட்சரம் என்பவரே நடிகர் விஜயகுமார். முரளி கார்த்திகேயன் என்றால் யாரென்று விழிக்கும் உங்களுக்குக் கார்த்திக் என்றால் சட்டென்று அடையாளம் தெரிந்து விடும். நடிகை ராதாவின் இயற்பெயர் சந்திரிகா என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? கென்னடி ஜான் விக்டர் என்பரே நடிகர் விக்ரம். டயானா மரியாம் குரியம்தான் உங்கள் அபிமானத்தாரகை நயன்தாரா. சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியில் பயின்ற அனுராதிகாவை எல்லோருக்கும் தெரியாது. ஆனால் திரிஷா என்பது உலகமறிந்த பெயர். அரிசி மில் ஒன்றில் சின்ன முதலாளி என்று அழைக்கப்பட்ட விஜயராஜ் சினிமாவுக்கு வந்த பிறகு விஜயகாந் ஆகிவிட்டார். ரிஷிபாமா என்ற பெயர் மறைந்து சிம்ரன் என்றாகியது. சுகாசினி என்ற டீன் ஏஜ் பெண், தமிழ்ச்சமூகத்தில் சினேகா என்றறியப்பட்டார். சரவணன் - சூர்யா எனவும் ரவி மோகன் - ஜெயம்ரவி என்றும் இன்னும் ஏராளம் பெயர்களைச் சொல்ல முடியும்.

இவ்வாறானபெயர்கள் கலையுலகத்துக்கு அவசியமாகி விடுகிறது. கலையுலகம் எப்போதும் வெகுஜனமயப்பட்டதாக இருப்பதால் இந்தப் புனைபெயர் என்பது அதற்கேற்ற வகையில் ஈர்ப்பு, திருப்தி, கவர்ச்சி, உச்சரிப்புக்கும் பயன்பாட்டுக்கும் இலகு எனப் பல காரணங்களை அவசியமாகக் கொண்டுள்ளது. இதனால்தான் இவ்வாறு புனைந்து கொள்ளப்பட்ட அல்லது சூட்டப்பட்ட பெயர்கள் பின்னாளில் பேரறி முகத்தையும், பெரும் புகழையும் பெற்றதாக மாறிவிடுகின்றன. இந்தப் பெயர்கள் கூடச் சுருங்கியோ மருவியோ வேறு வடிவத்தை எடுப்பதும் உண்டு. ரஜனிகாந் ரஜினியாகவும், அஜித்குமார் அஜித் எனவும், தி.ஜானகிராமன் தி.ஜா என்றும் சுந்தர ராமசாமி சு.ரா எனவும் டொமினிக் ஜீவா, ஜீவா அல்லது மல்லிகை ஜீவா எனவும் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் எஸ்.பி.பி என்றும் சுருக்கமான வடிவத்தைக் கொண்டன. பிறகு இவை அவர்களைப் பற்றிய ஒரு குறியீடாகவே ஆகி விடுகிறது.

இதிலிருந்து முற்றிலும் வேறு விதமானது போராளிகள் தங்களுக்கு வைத்துக் கொள்ளும் பெயர்கள். அல்லது அவர்களுக்கு அமைப்பிலும், பயிற்சித் தளத்திலும் வைத்துக் கொள்ளும் பெயர்கள். தங்களுடைய சொந்தப்பெயரை மறைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் எப்போதும் போராளிகளுக்கு உண்டு. எதிரியிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்கு இது அவசியம். தங்களை மட்டுமல்ல, தங்களுடைய குடும்பத்தையும் ஏன் அமைப்பையும் கூட் இந்தப் புதிய பெயர் பாதுகாத்துக் கொள்கிறது. இதற்காகத்தான் எப்போதும் போராளிகளுக்கு வேறொரு பெயர் தேவைப்படுகிறது.

புலிகளின் தளபதிகளில் ஒருவரான பிரிகேடியர் பால்ராஜின் இயற்பெயரைப் பலரும் அறிந்திருக்க மாட்டார்கள். பால்ராஜ்ஜின் பெயரை மட்டுமல்ல, பொதுவாக எந்தப் போராளியின் சொந்தப் பெயரும் அவர்களுடைய மரணம் வரையில் வெளியே தெரிவது குறைவு. பெயர் மட்டுமல்ல, அவர்களைப் பற்றிய முழுமையான பிற விவரங்களும் கூடத்தான். அவ்வாறான வாழ்க்கையும் தெரிவும் அவர்களுடையது. பால்ராஜ்ஜின் இயற்பெயர் பாலசேகரம். புலிகளின் இன்னொரு புகழ் பெற்ற தளபதி கேணல் கிட்டு. கிட்டுவின் சொந்தப் பெயரை இன்றும் கூடப் பலரும் அறிந்திருக்க மாட்டார்கள். சதாசிவம் கிருஸ்ணகுமார் என்றால் யாரென்றே தெரியாமல் கடந்து போய் விடுவார்கள். ஆனால் கிட்டு என்றால் சட்டெனப் புரிந்து விடும். இப்படித்தான் ஈரோஸ் இயக்கத்தின் இராணுவப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த நேசதுரை திருநேசனை எவருக்கும் தெரியாது. அந்த இயக்கத்திலிருந்தவர்களுக்கே இந்தப் பெயர் அறிமுகமில்லை. ஆனால் சங்கர் ராஜி என்றால் இலங்கை, இந்திய அரசுகளுக்கே தெரிந்து விடும். ஞானபூரணி என்றால் எந்த ஞானபூரணி என்று விழிப்பவர்களுக்கு கேணல் விதுஷா என்றால் தெரியும். திலீபன் உண்ணாவிரதம் இருக்கும் வரையில் அவருடைய பெயர் இராசையா பார்த்திபன் என்று யாருக்குத்தான் தெரிந்திருக்கும்?

1970, 80, 90 களில் இயக்கப் போராளிகளின் பெயர்கள் தமிழ்ச்சமூகத்தில் மிகவும் பரவலாகியிருந்தது. 2009 இல் ஆயுதப்போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்படும் வரையில் இந்தப் பெயர்களால்தான் பல்லாயிரக்கணக்கானோர் அறியப்பட்டார்கள். புளொட்டில் சங்கிலி, சின்ன மென்டிஸ், பெரிய மென்டிஸ், எஸ்ஆர், சந்தியார், இடிஅமீன், குரு, வரதன் என ஒரு பெரிய பட்டியலுண்டு. இதைப்போல ஈ.பி.ஆர்.எல்.எவ் டேவிற்சன், றொபேட், சுகு, தம்பா அல்லது சாந்தன், குண்சி, ரமேஸ், டக்ளஸ், ஐயா, கமல், செழியன், அமீன், தாஸ், ஜேம்ஸ், அஞ்சலி, ரஜி, கிருபா, சின்னவன், பெஞ்சமின் என இதிலும் ஒரு நீள் பட்டியல். ஈரோஸில் ஐ.பி.ரி வரதன், பரா, நேசன், மைக்கல், வீரகுமார், அன்னலிங்கம் ஐயா, கைலாஷ், சுந்தர், அருளர், அழகிரி, சண், கிருபா, கரன் எனப் பல பெயர்கள். ரெலோவில் பறுவா, தாஸ், பொபி, கீரன், காளி, செல்வம், அகிலன், சாள்ஸ் என்ற நீள் வரிசை. புலிகளில் இந்தப் பட்டியல் இன்னும் நீண்டது. அவர்களுடைய காலம் நீண்டது என்பதால் பெயர்களின் வரிசையும் நீளமானது. மாத்தயா, சந்தோசம், விக்டர், குமரப்பா, புலேந்திரன், சீலன், சங்கர் என்று தொடங்கி சாள்ஸ், பொட்டம்மான், துர்க்கா, சேரலாதன், மணிவண்ணன், சூசை, காஸ்ரோ என பல்லாயிரத்தினால் நிறைந்தது. இந்த இயக்கப் பெயரை வைத்துக் கொள்வதைப் பற்றியே ஒவ்வொருவரிடமும் ஏராளம் கதைகளுண்டு. சில பெயர்கள் இயக்கத்தில் சேர்ந்தபோது அல்லது சேர்க்கப்படும்போது வைக்கப்பட்டு விடும்.

(21ஆம் பக்கம் பார்க்க)

**புலிகளின் தளபதிகளில் ஒருவரான பிரிகேடியர் பால்ராஜின் இயற்பெயரைப் பலரும் அறிந்திருக்க மாட்டார்கள். பால்ராஜ்ஜின் பெயரை மட்டுமல்ல, பொதுவாக எந்தப் போராளியின் சொந்தப் பெயரும் அவர்களுடைய மரணம் வரையில் வெளியே தெரிவது குறைவு. பெயர் மட்டுமல்ல, அவர்களைப் பற்றிய முழுமையான பிற விவரங்களும் கூடத்தான். அவ்வாறான வாழ்க்கையும் தெரிவும் அவர்களுடையது. பால்ராஜ்ஜின் இயற்பெயர் பாலசேகரம்.**




புதிர் 3

O மாயன்

பதறாத காரியம் சிதறாது' என்று மனதுக்குள் ஒருமுறை பரிவழுதி சொல்லிக் கொண்டான். பயத்தால் பதறிய மனதை ஒருமுகப்படுத்தினான். மூச்சை சில தடவைகள் ஆழமாக உள்ளிழுத்து வெளியே விட்டான். இப்போது கொஞ்சம் கொஞ்சமாக அவனது மூளைக்குள் ஒளி தென்படத் தொடங்கியது. "நான் என்ன பதார்த்தத்தின் பெயர் எழுதப்பட்ட பாத்திரத்தில் கையை வைத்திருக்கிறேன்" என்று மீண்டும் பார்த்தான். பாற்சோறு என்று எழுதப்பட்டிருந்தது. அதன் பின்னர் எதுவும் யோசிக்காமல் அதன் மூடியைத் திறந்தான். உள்ளே சுடச் சுடப் பால்.

பரிவழுதியின் முகம் இன்னும் பிரகாசமானது. உடனேயே "சாதம் என்று எழுதியுள்ள பாத்திரத்துக்குள் பாற்சோறும் , பால் என்று எழுதியுள்ள பாத்திரத்துக்குள் சாதமும் உள்ளன. அவற்றை சரியானபடி எழுதுங்கள்" என துவாரகனுக்கும், இளஞ்சந்திரனுக்கும் சொன்னான். அவர்களும் அதன்படியே செய்தார்கள். அப்போது மீண்டும் அசரீரி ஒலித்தது.

" சபாஷ் , உன் திறமையைக் கண்டு மெச்சினேன். மூவரும் வயிறார உணவருந்த அனுமதி தருகின்றேன்" என்று அந்தக் குரல் சொல்லி முடித்ததுதான் தாமதம், பாத்திரத்தோடு ஒட்டியபடி இருந்த பரிவழுதியின் கை விடுபட்டது. அத்தோடு அந்த மண்டபத்தில் திடீரெனப் பல பணியாளர்கள் தோன்றி, அவர்களுக்கு அறுசுவை உணவுகளைப் பரிமாறத் தொடங்கினர்.

இளஞ்சந்திரனுக்கு ஆச்சரியம் தாளவில்லை. "எப்படிச் சரியான பாத்திரங்களையும், அதற்குள் இருக்கும் பதார்த்தங்களையும் கண்டுபிடித்தாய்? " என்று அவன் பரிவழுதியைப் பார்த்துக்கேட்டான்.

" ப்பூ, இதொன்றும் பிரமாதமான காரியமல்ல. கையை வைத்த பார்த்திரத்துக்குள் பால் இருந்ததால், வெளியே பால் என்று எழுதப்பட்ட பாத்திரத்துக்குள் நிச்சயமாக பால் இருக்காது. சாதமோ , பாற்சோறோ தான் இருக்கும். சாதம் என்று எழுதிய பாத்திரத்துக்குள் சாதம் இருக்காது என்பதால் அதற்குள் பாற்சோறே இருக்கும், எஞ்சிய பாத்திரத்தில் பாற்சோறு இருக்கும் என்பதைக் கண்டுபிடிப்பது அவ்வளவு கடினமல்லவே" என்று சொல்லிவிட்டு, உணவை ஒரு பிடி பிடிப்பதில் பரிவழுதி குறியாக இருந்தான்.

"புதிர்மலைக்குப் போகுமுன்னரே இப்படியென்றால், அங்கே போனால் எப்படிப்பட்ட புதிர்களைச் சந்திக்கவேண்டியிருக்குமோ?" என்று சற்று உரத்த குரலிலேயே துவாரகன் கேட்டான். மற்ற இரு இளவரசர்களும் அவனைப் பார்த்துவிட்டு, மீண்டும் உணவு உண்பதில் மூழ்கினர்.

உண்டு முடித்தாயிற்று. இளவரசர்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள். சில நாழிகைகள் பயணத்தின் பின்னர், அவர்கள் கண்கள் பரபரப்படைந்தன. தீப்பந்தத்தை எடுத்து வெளிச்சத்தைக் கூட்டினர். எதிரே ஒரு சிறு குன்றில் " புதிர்மலை உங்களை வரவேற்கிறது" என்ற வாசகங்கள் தென்பட்டன. கூடவே அந்தக் குன்றின் கீழ்ப்பகுதியை நோக்கி ஒரு அம்புக்குறியும் வரையப்பட்டிருந்தது.

எனவே , அந்த அம்புக்குறி காட்டும் பாதையால் தான் புதிர்மலைக்குள் நுழைய முடியும் என்ற முடிவுக்கு இளவரசர்கள் வந்தார்கள்.

அம்புக்குறி காட்டிய திசையில் குதிரைகளைத் திருப்பினர். அங்கே ஒரு குகை. ஆனால் அதன் வாசல் மிகப்பெரிய பாறாங்கல்லால் அடைபட்டிருந்தது. அந்தக் கல்லை அகற்றுவதென்றால், நாலைந்து யானைகள் தேவை. என்ன செய்யலாம் என்று மூவரும் யோசனையில் ஆழ்ந்தனர். அப்போதுதான் , பாறாங்கல்லில் ஏதோ எழுதப்பட்டிருப்பதை இளஞ்சந்திரன் கண்டான். கொஞ்சம் நெருங்கிச் சென்று பார்த்தான். " முதலாவது புதிரை விடுவித்தாலே இந்தப் பாறை திறந்து வழியுண்டாகும். பாறையை மூன்றுதரம் தட்டினால் புதிர் கிடைக்கும்"என்று எழுதப்பட்டிருந்தது.

இளஞ்சந்திரன் பாறையை மூன்று தரம் தட்டினான். எந்தவிதமான அசைவும் இல்லை. பின்னர் யாரோ செருமும் சத்தம். அதனைத் தொடர்ந்து, " இளவரர்களே வருக, புதிர்மலைக்குள் நுழைய உங்களுக்குச் சம்மதமா?" என்ற கேள்வியோடு ஒரு குரல் ஒலித்தது.

" ஆம், சம்மதமே!" மூவரும் ஒரேகுரலில் பலமாகச் சொன்னார்கள்.

அடுத்த கணமே, அவர்கள் முன்னால் விசித்திரமான உருவம் கொண்ட ஒரு குள்ள மனிதன் தோன்றினான்.

"இளவரசர்களே, என் பெயர் காக்கை குப்தன். இந்தப் புதிர்மலையின் வழிகாட்டி நான் தான். நான் கேட்கும் புதிருக்கு சரியான விடையைச் சொன்னால், பாறை திறக்கும். தவறாகச் சொன்னால் திரும்பிப் போக வேண்டியதுதான்" என்று சொல்லிவிட்டு காக்கைகுப்தன் அவர்களை நோக்கினான். அவன் சொன்னதைக் கேட்டு இளவரசர்கள் பயப்படவில்லை. அதனால் திருப்தியோடு புதிரைக் கூறத் தொடங்கினான்.

"இந்தக் குகைக்குள் தொடர்ந்து செல்ல வேண்டுமானால் வெளிச்சம் வேண்டும், குகையின் வாசலில் தீப்பந்தம், மெழுகுதிரி, ஒரு கண்ணாடியால் மூடப்பட்ட விளக்கு என்பவை உள்ளன. ஆனால் உங்களிடம் தீப்பொறியை உண்டாக்கும் ஒரேயொரு கல் மட்டுமே உண்டு. அப்படியானால் தீப்பொறிக்கல் மூலம் எதனைப் பற்ற வைப்பீர்கள்?" என்று புதிரைக் கூறினான். துவாரகன் சட்டெனச் சொன்னான் பதிலை. உடனேயே பாறை அகன்று, பாதை திறந்தது. ஆனால் அந்தப் பாதையூடாக ஆபத்தொன்றும் அவர்களை நோக்கி விரைந்து வந்துகொண்டிருந்தது.

(புதிர்கள் தொடரும்)

# பசுவும் புலியும்




வீட்டு முற்றங்களில் அல்லது திறந்த வெளிகளில் சிறுவர் சிறுமியர் சேர்த்து மகிழ்ச்சியாக விளையாடும் விளையாட்டுக்களில் இதுவும் ஒன்றாகும்.
சிறுவர்கள் குறிப்பிட்ட ஒரு அளவில் ஒருவர் கையை ஒருவர் பிடித்தவாறு வட்ட வடிவில் நின்றிருப்பர். அவர்களது எல்லையே வேலி ஆகும்.
வட்டத்துக்கு உட்புறம் அதாவது வேலிக்கு உள்ளே ஒருவர் நிற்பார். அவரே பசு. அந்தப் பசுவை புலியிடம் இருந்து பாதுகாப்பதே வேலியின் மிகப் பெரும் கடமை.
வட்டத்திற்கு வெளியே, அதாவது வேலிக்கு வெளியே ஒருவர் நிற்பார். அவர் புலி. எப்படியாயினும் அந்த வேலியைத் தாண்டி உள்ளே சென்றோ அல்லது பசுவை வேலிக்கு வெளியே வர வைத்தோ அதனை பிடிப்பதே புலியின் ஒரே இலக்காக இருக்கும்.
வேலிக்கு உள்ளே பசு நிற்பதை அறிந்து கொண்ட புலி வேலியைத் தாண்டி உள்ளே செல்லப் பார்க்கும். ஆனால் வேலி உள்ளே செல்ல விடாது.
உடனே புலி "சங்கிலி புங்கிலி கதவத் திற" எனக் கூறும்.
அதற்கு வேலி "நான் மாட்டன் தேங்காய்ப் புலி" என பதில் கூறும்.
பின்னர் புலி "பசு மாட்டைக் கண்டீங்களா?" எனக் கேட்கும்.
உடனே வேலி "இல்லை" எனப் பதிலளிக்கும்.
பின்னர் புலி "பால் மணக்குது" என தொடர்ந்து சொல்லும்
உடனே வேலி "அது பக்கத்து வீட்டில்" எனப் பதில் உரைக்கும்
தனது திட்டம் பலிக்காது போக, பசுவைப் பிடிப்பதற்காக புல் கட்டு ஒன்றை வேலிக்கு அருகே போடுவது போல் போட, புல்லைக் கண்ட பசு புல்லுக்கு அருகில் ஓடி வரும் போது அதனைப் பிடிக்க புலி முயலும்.
பசுவைப் புலி பிடிக்கும் வரை விளையாட்டு தொடர்ந்து செல்லும். அவ்வாறு பசு பிடிபட்டால், விளையாட்டு மீண்டும் ஆரம்பமாகும். அதில் வேறு ஒருவர் பசுவாகவும் இன்னொருவர் புலியாகவும் மாறி விளையாட மற்றையவர்கள் வேலியாகவும் நிற்பார். இந்த விளையாட்டினால், சிறுவர்களிடையே ஒற்றுமை, உடற்பலம், மகிழ்ச்சி என்பவை அதிகரிக்கும்.

# வனவளப் பாதுகாப்பு

இந்தப் பிரபஞ்சத்தில் உயிர்கள் வாழ்வதற்கு அத்தியாவசியமான காரணிகள் நீர், வளி, ஒளி ஆகியவையே. இவைகள் இல்லாதுவிட்டால் உயிரினங்களின் உயிர்வாழ்வு கேள்விக்குறியாகிவிடும். உயிரினங்கள் வாழ வேண்டுமெனில் இக் காரணிகளைப் பேண வேண்டும். அதற்கு முதலில் காடுகளைப் பேண வேண்டும்.
மிக அண்மையில் நிகழ்ந்த சம்பவம் ஒன்று. தென் அமெரிக்காவின் அதிக நிலப்பரப்பில் பரந்து காணப்படும் உலகின் நுரையீரல் எனப்படும் அமேசான் காடு கொழுந்து விட்டு எரிந்தது. அந்தத் தீ பரவலுக்கு அங்கு காணப்பட்ட காய்ந்த மரங்களே காரணம் என்று ஒரு தரப்பினரால் கூறப்பட்டது. ஆனால் அதனை அடியோடு மறுத்து, குறித்த தீப்பற்றல் சம்பவமானது தற்செயலாக நடக்கவில்லை எனவும், மக்கள் குடியிருப்புக்களை அமைப்பதற்காக காடு தீ வைத்து எரிக்கப்பட்டதாக சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கப் பார்த்தாலும், அந்தத் தீமூட்டலை மேற்கொண்டவர்கள் சாட்சியங்களுடன் கையும் களவுமாக மாட்டிக் கொண்டனர். இதனால் குடியிருப்புகள் அமைப்பதற்கான நிலம் உருவானது. ஆனால் பல வகையானதாவரங்கள், அரிய வகை மரங்கள், விலங்குகள், பறவைகள், அரிதான மூலிகைகள் எனப் பல உயிரிகள் அழிவடைந்தன. உயிரின உலகில் காடுகள் ஆற்றும் பணி அளப்பரியது. தாவரங்களினாலே தான் மழைவளம் கிடைக்கின்றது. தாவரங்களின் ஆவியுயிர்ப்பின் மூலமாக வெளியேறும் நீரே "நீரியல் வட்டம்" செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டு மழையாக பூமியை நோக்கி வந்தடையும். அந்த மழை நீரானது குளங்கள், குட்டைகள் போன்ற நீர் நிலைகள் மற்றும் கடலையும் அடையும். மேலும், சூரியஒளி முன்னிலையில் நாம் சுவாசித்து வெளிவிடும் காபனீரொட்சைட் வாயுவை உள்ளிழுத்து ஒட்சிசனை வெளிவிடும் ஒளித்தொகுப்பு செயற்பாட்டை தாவரங்கள் நிகழ்த்துகின்றன. தாவரங்கள் இல்லையெனில் நாம் சுவாசிக்கும் வாயுவான ஒட்சிசன் நமக்கு கிடைக்காது. இவற்றைக் கருத்திற்கொண்டு வனவளப் பாதுகாப்பு அனைத்துத் தரப்பினராலும் வலியுறுத்தி மேற்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.
"வனவளம் காப்போம், வாழ்வில் வளம் பெறுவோம்"

கி.சாகித்தியன்
தரம் 10
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.



# கறை...

○ மலரன்னை

யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு. அதன் முன்புறத்தில் போடப்பட்டிருந்த வாங்கொன்றில் தமிழ்மாறன் அமர்ந்திருந்தான். அவன் அணிந்திருந்த வெள்ளைச் சீருடையில் ஆங்காங்கே இரத்தக் கறைகள் படிந்திருந்தன. சலனமுற்றிருந்த அவனது முகத்தை ஏறிட்டுப் பார்த்து விட்டு அருகில் அமர்ந்திருந்த முதியவர் அவனிடம் பேச்சுக் கொடுத்தார்.

"தம்பி அது உம்முடைய பிள்ளையே? என்ன நடந்தது?" எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அவனது செவிகளில் முதியவரது கேள்வி நுழையவில்லை.

அவசர சிகிச்சைப் பிரிவின் கதவைத் திறந்து கொண்டு ஒரு நேர்ஸ் வெளியே வந்தாள். மாறன் அவசரமாக எழுந்து சென்று அவளிடம் விசாரித்தான்.

"சிஸ்டர்! அக்சிடெண்ட் கேஸ் சீரியஸோ?" கவலை தோய்ந்த அவனது முகத்தைப் பார்த்தவள், அவனை ஆசுவாசப்படுத்தினாள்.

"மாறன்! பயப்படாதையும். தலையில அடி படேல .உடம்பில தான் காயங்கள். நிறைய இரத்தம் போயிட்டுது. அதனால இரத்தம் ஏற்றிக் கொண்டிருக்கினம்"

"தாங்க்ஸ் சிஸ்டர்"

சொல்லிவிட்டு வந்து அமர்ந்து கொண்டான். இதனை அவதானித்துக் கொண்டிருந்த அந்த முதியவரும் நேர்ஸ்ஸை அணுகினார். "பிள்ளை! என்னுடைய மனுசிக்கு இப்ப எப்பிடி இருக்கு ?"

"அதெல்லாம் எனக்கு தெரியாது. நான் என்னுடைய வேலையைப் பார்க்க வேணும். வழியை விடுங்கோ"

"வெடுக்" கென வார்த்தைகளை உதிர்த்து விட்டுச் சென்றவளை வெறுப்புடன் அவரது கண்கள் நோட்டமிட்டன. மாறன் அந்த வைத்தியசாலையில் பணிபுரியும் ஒரு ஊழியன் என்ற விடயம் அவருக்குத் தெரிந்திருக்க முடியாது.

கடந்த ஒன்றரை மணி நேரத்துக்குள் நடந்து முடிந்த சம்பவங்கள் அவன் கண் முன்னே நிழலாடத் தொடங்கின.

✦✦✦✦✦

அன்று மாலை ஐந்து மணியுடன் அவனது கடமை நேரம் முடிவடைந்து விட்டது. தனது உந்துருளியில் வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தவனை, ஆலடிச் சந்தியில் கூடியிருந்த கூட்டம் சுண்டியிழுத்தது. அங்கு அவன் கண்ட காட்சி.....

சிறுவன் ஒருவன் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான். பதற்றத்துடன் என்ன நடந்தது? என அங்கு கூடியிருந்தவர்களிடம் வினவினான். எவரும் வாய் திறக்கவில்லை.

"என்ன பார்த்துக் கொண்டிருக்கிறியள். பிள்ளையை உடன ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக வேணும்" கூறியவன் அப்படியே சிறுவனை வாரியணைத்துத் தூக்கினான். ஒரு பெரியவர் முணுமுணுத்தார்.

"தம்பி இது அக்சிடெண்ட். பேந்து பொலிஸ் கேஸ் என்று அலைய வேண்டி வரும்" மாறனுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.

"அதெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். யாராவது தெருவால போற ஒரு ஓட்டோவ மறியுங்கோ"

இரண்டு இளைஞர்கள் அவனுக்கு உதவ முன்வந்த போதும், ஆட்டோ ஓட்டுநர்கள் அவனுக்கு உதவத் தயாரில்லை.


"யாராவது ஒருத்தர் மோட்டர்பைக்கை எடுங்கோ. நான் பிள்ளையை மடியில வைத்திருக்கிறன். சுணங்கினால் பிள்ளையின்ர உயிருக்குத்தான் ஆபத்து."

ஒரு இளைஞன் அவனுக்கு உதவ முன் வந்தான். உந்துருளி வைத்தியசாலையை நோக்கி விரைந்தது. தக்க சமயத்தில் மாறன் அந்தச் சிறுவனை வைத்தியசாலைக்கு கொண்டுவந்து சேர்த்து விட்டான். அவனும் அங்கு பணியாற்றுவதால் அங்கு கடமையாற்றுபவர்கள் அவனுக்கு சட்டென உதவ முன்வந்தனர்.

அங்கு கடமையிலிருந்த மருத்துவர் அப்போது தான் ஒரு சத்திர சிகிச்சையை முடித்துவிட்டு புறப்படத் தயாரானார். நோயாளியைக் கண்டதும் அவருக்கு எரிச்சலாக வந்தது. புறுபுறுத்த அவரை, அவரது உதவியாளர் சமாதானப்படுத்தினார்.

"சேர்! நீங்கள் சேர்ஜரியை மட்டும் முடிச்சுட்டுப் போங்கோ. மிச்சத்தை நாங்கள் பார்த்துக் கொள்ளுறம்"

உதவியாளர்கள் கடுகதியில் இயங்க , சத்திரசிகிச்சை நிபுணர் சிகிச்சையைச் சுறுசுறுப்பாகச் செய்து முடித்தார். மீண்டும் சிறுவனைத் தீவிர கண்காணிப்புப் பிரிவுக்கு அனுப்பி வைத்தார்கள். அவசர சிகிச்சைப் பிரிவின் கதவு திறக்கும் அரவம் கேட்டு மாறன் நிமிர்ந்து பார்த்தான். டொக்டர் அங்கு நின்றிருந்தார். "மாறன்! நீர் கொண்டு வந்து 'அட்மின்' பண்ணிய பிள்ளைக்கு ஆபத்தொன்றுமில்லை. இருபத்திநாலு மணிநேரம் கண்காணிப்பு பிரிவில் வைத்திருந்துவிட்டு நாளைக்கே வார்ட்டுக்கு மாற்றி விடலாம்"



சஞ்சீவி சிறுகதை

அவனை ஆசுவாசப்படுத்தும் நோக்கத்தோடு அவர் கூறினார்.

அப்போது, அவர்களை நோக்கி மாணிக்கவாசகர் என்ற பெயருடைய அவர்களது ஊர்ப் பெரியவரும் இன்னும் சிலரும் பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தனர்.

"என்ரை பேரக்குஞ்சுக்கு என்னாச்சுது?"

அங்கு நின்றிருந்த டொக்டரை நோக்கி மாணிக்கவாசகர் வினவினார்.

மாறனைச் சுட்டிக் காட்டினார் டாக்டர்,

"இவர் தக்க சமயத்தில் பிள்ளையைக் கொண்டு வந்து சேர்த்ததாலதான் பிள்ளை உயிர் பிழைச்சிருக்கு, இவருக்குத்தான் நீங்கள் நன்றி சொல்லவேணும்"

மாறனைப் பார்த்து கை கூப்பினார் அவர்.

"அப்பாடா! இனியாவது வீட்டுக்குப் புறப்படலாம்" என்று மாறனின் மனம் ஏவியபோது தான் அவனுக்குத் தனது தங்கையின் நினைவு வந்தது. காலையில் புறப்படும்போது அவள் அவனிடம்

"அண்ணா! நாளைக்குத் தான் கடைசி நாள். எக்ஸாம் பீஸ் கட்ட வேணும்"

"சரி நிலா. நான் பின்னேரம் வரும்போது கொண்டு வந்து தாறன்"

போர் அனர்த்தத்தினால் தந்தையை இழந்து விட்ட மாறன், ஒரு கையை இழந்துவிட்ட அம்மாவையும், தங்கை தமிழ் நிலாவையும் வைத்துக் காப்பாற்ற வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியவன். அவனுடைய சம்பளம் அவர்களது வாழ்க்கைச் செலவுக்கு மட்டுமட்டாகத் தான் இருந்தது. அன்று அவனிடம் பணம் கையில் இருக்கவில்லை. எனவே, நண்பன் ஒருவனிடம் கைமாற்றாக வாங்கி வைத்திருந்தான்.

"சரி ஐயா! பிள்ளையைப் பார்த்துக் கொள்ளுங்கோ. நான் வாறன்"

புறப்பட்ட மாறனது கைக்குள் மாணிக்கவாசகர் சில ஆயிரம் ரூபாத்தாள்களை வைத்து பொத்தினார். கையை உதறினான் மாறன்.

"ஐயா! ஆபத்தில் ஒருவருக்கு உதவுவது மனிதாபிமானம். என்னுடைய மனிதநேய உணர்வுக்கு விலை பேசாதயுங்கோ"

சொல்லிவிட்டு பதிலை எதிர்பார்க்காது மாறன் அவசரசிகிச்சைப் பிரிவிலிருந்து விலகி நீண்ட நடைபாதையில் நடக்கத் தொடங்கினான். அவனது மனத்தில் ஆழமாகப் புதைந்திருந்த ஒரு சம்பவம் மீண்டும் மனதில் நிழலாடியது.

✦✦✦✦✦

சுமார் பத்து வருடங்களின் முன்னர்தான், மாறன் குடும்பத்தினரும் இடைத்தங்கல் முகாமிலிருந்து ஊருக்கு வந்து சேர்ந்தனர். கல்விப் பொதுத்தராதரப் பரிட்சையில் மாறன் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்தான். மேலே அவனைப் படிக்க வைக்க வேண்டும் என்று அம்மா விரும்பினாள். ஆனால் என்ன செய்வது? அவள் தான் சொத்து சுகத்தையெல்லாம் இழந்து வெறும் ஒற்றைக் கையோடு வந்து நிற்கிறாளே. ஊரிலுள்ள சிலர் அவளை ஊரின் செல்வந்தரான மாணிக்கவாசகரிடம் போய் மகனது கல்விக்கு உதவி கேட்கச் சொல்லி அறிவுறுத்தினர். அவளும் தயக்கத்துடன் அவரிடம் போனாள். தன்னுடைய நிலையை விளக்கி அவள் அவரிடம் உதவி கோரியபோது தான் மாணிக்கவாசகரின் உண்மைச் சொரூபம் தெரிய வந்தது.

"உங்களுக்குத்தான் அரசாங்கமும், நிறுவனங்களும் உதவிக்கு மேல உதவியாய்ச் செய்யினம், பிறகென்ன? ஏன் என்னட்ட வந்து தொந்தரவு குடுக்கிறியள்? நான் உழைச்சுக் கொண்டு வந்த காசெல்லாம் மண்டபத்துக்குள்ள கொட்டிப்போட்டு இப்ப ஒண்டுமில்லாமல் நிக்கிறன்"



அவரது அந்த வார்த்தைகளோடு, முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு அம்மா வந்தாள்.

✦✦✦✦✦

அவனது கால்கள் வைத்தியசாலை வளாக வாசல் வரை வந்து விட்டன. ஒரு குரல் அவனைத் தடுத்து நிறுத்தியது.

"அண்ணை! பிள்ளைக்கு எப்பிடி இருக்கு"

நிமிர்ந்து பார்த்தான் மாறன், தன்னையும் காயமுற்ற பிள்ளையையும் தனது உந்துருளியில் ஏற்றி வந்த இளைஞன் அங்கே நின்றிருந்தான்.

"எம்மவரிடையே மனிதம் இன்னும் மரித்துப் போகவில்லை" என்ற திருப்தியுடன் அவனது உந்துருளியில் தொற்றிக் கொண்டான்.

ஏதோ நினைத்துக் கொண்டவானாய், தனது சட்டைப்பையில் இருந்த ஆயிரம் ரூபா நோட்டை எடுத்துப் பார்த்தான். நல்லவேளையாக அதில் இரத்தக்கறை ஏதும் படிந்திருக்கவில்லை.

06 கிராமத்து மனிதர்கள்...

**கிராமத்து மனிதர்கள் என்ற இந்தத் தொடர் தனித்துவமான கிராமத்து மனிதர்களை மீள நினைவுபடுத்துவதன் மூலமாக அருகிப்போன கிராமத்து வாழ்வின் செழுமைகளையும் சிறப் புக்களையும் வெளிக்கொண்டு வருகின்றது.**

# சீட்டுக்காரச் சிந்தாமணி

○ இராகன்

மண்ணால் கட்டப்பட்ட வீடுகளில் தாய றையில் ஆட்களின் கண்பார்வை உட னடியாக விழாத ஒரு மூலையைத் தெரிவுசெய்து, அந்த மூலையில் வட்ட வடி விலே குழிதோண்டி, குழியினுள்ளே ஒரு நெஸ் டமோல்ற் மாப்பேணியைத் தாழ்த்துவைத்து, பேணியின் மூடியின் மையத்திலே நாணயங்கள் நுழையக்கூடியவாறு மெல்லிய உண்டியல் பிளவு ஒன்றினை ஏற்படுத்தி, நிலத்தின் மட்டத் தோடு களிமண்ணை சாணத்துடன் கரைத்து மெழுகி ஒப்புரவாக்கி, பேணி மூடியின் சுற்றள வுக்கு வெளியே அகன்று நிற்குமாறு ஒரு திரிகணை" (தும்பு அல்லது கயிற்றினால் திரிக்கப் பட்ட, பாத்திரங்கள் சரிந்து விழாது வைக்கும் வளைய அணை) வைத்து, திரிகணையின்மீது அரிசி, மா போட்டுவைக்கும் மண்பானை ஒன்றை வைத்து தாழ்க்கப்பட்ட பேணிக்கு மறைப்புவைத்து, தட்டு முட்டுச்சாமான்களை அநாயாசமாகப் போட்டுவைத்து, அந்த இடத்தைக் கவனிப்பா ரற்ற இடமாக மாற்றி இரகசிய சேமிப்புக்கான ஏற்பாடு ஒன்று "சீட்டுக்காரச் சிந்தா மணி" வீட்டில் செய்யப்பட்டிருக்கும். சீட்டுக்காரச் சிந்தாமணியைத்" தாச்சிச் சிந்தாமணி" என்றும் சிலர் சொல்வர். சீட்டுப்போடு வதை பொறுப்பெடுத்துச் செய்பவர்களைத் "தாச்சி" என்பார்கள்.

சிந்தாமணியின் வீடு இரண்டு அறைகள், அவற்றுடன் இணைந்த நீண்ட விறாந்தை" விறாந்தைக்கு முன்னே, நான்கு புறமும் குந்துச்சுவர் வைக்கப் பட்ட, கிடுகினால் வேயப்பட்ட குழு குழு காற்றோட்டமான "சவுக்கண்டி". சவுக்கண்டியின் முன்பக்க வெளிச்செல் லும் வாயிலின் இரண்டு பக்கங்களிலும் உயரமாக அமைக்கப்பட்ட, ஒரு ஆள் நீட்டிப் படுக்கக்கூடிய திண்ணை கள். உள்நிலங்கள் சாணத்தினால் மெழுகப்பட்டு பச்சை விரிப்பாகக் கிடக்கும். திண்ணைகளும் குந்துச்சுவர்களும் செம்மண் கரைத்து மெழுகப்பட்டு, செம்மண் பின்னணியில் வெள்ளைச் சுண்ணாம்பு கரைத்து விதவிதமான வடிவங்களில் தெளித்து அழகுப டுத்தப்பட்டிருக்கும். வாரமொருமுறை வியாழக் கிழமைகளில் வீடு மெழுகுதல் ஒரு சடங் காகவே நடைபெறும். அடுத்த நாள் வரப்போகும் வெள்ளிக்கிழ மைக்காக அதற்கு முதல்நாளே புனிதமாகி விடுவார் சீட்டுக் காரச் சிந்தாமணி. அவரின் அழ குணர்ச்சி அப்படியானது.

சிந்தாமணியின் வீட்டின் பின்வளவில் இயற்கையாகவே "அன்னமுன்னா" பற்றையாய் வளர்ந்திருக்கும் என்பது மாகாண மட்ட பழமரங்களின் கண்காட்சி யில், அன்னமுன்னா நாற்று வாங்கி வீடுகளில் நாட்டி வளர்க்கத் துடிக் கும் நாகரிக மனிதர்களுக்கு எங்கே தெரியும்? சடைத்து வளர்ந்த இலந்தை மரம் ஒன்று, கறிமுருங்கை மரமொன்று, வேர் ஓடும் இடமெல்லாம் பற்றையாய் வளர்ந்த கறி வேப்பிலை மரங்கள் தண்ணீர்க் குடத்தடியில் பெரிதாக வளர்ந்திருக்கும் சண்டி மரமொன்று, முன்முற்றத்தில் மேர்க்குரி பல்ப்புகளாய்" காய்த் துத் தொங்கும் கிளிச்சொண்டு மாமரம், ஊர்க் கொய்யாமரம் ஒன்று, ஒரு மாதுளை, இரண்டு ஊர்ப் பப்பாசி. கிளி கலைத்து அணில் துரத்தி சுற்றிச் சுழன்று திருடத் திரியும் சிறுகுறும்புகளை விரட்டி இவ்வளவையும் பராமரிப்பது சிந்தாம ணிதான்!

சீட்டுக்காரச் சிந்தாமணி மீன் வாங்கச் சந்தைக்குப் போகும் "சாமாச்சாரம்" ஊரில் பல ருக்கும் தெரியாது. மீன் வாங்க காசு கையில் கொண்டு போகாமல் போய், வரும்போது மீனோடு காசும் கொண்டு வரும் நுட்பமான பொருளாதார நிபுணர் அவர். சந்தைக்குப் புறப் படும்போது பப்பாசிப்பழம், முருங்கைக்காய், கறிவேப்பிலைக் கட்டு, சண்டியிலைக் கட்டு, அன்னமுன்னாப் பழம், கிளிச்சொண்டு மாம் பழம், மாதுளம்பழம் இவற்றில் ஒன்றையோ பல வற்றையோ ஒரு உரப்பையில் போட்டு மறைத் துக் கக்கத்தில் அணைத்தபடி கொண்டு போவார். கொண்டு செல்லும் பொருள்களுக்கு சந்தையில் போகும் அன்றைய விலையை ஒரு சுற்றுச் சுற்றி அறிவார். அந்த விலையிலிருந்து சற்றுக் குறைத்து தன் பொருள்களுக்கு விலையை நிர்ணயிப்பார். தான் கொண்டுவந்த பொருள்களின் சந்தை விலையையும் தன் விலையையும் மீன் வியாபா ரிகளுக்குச் சொல்லி பொருளைக் கொடுப்பார். வாங்கவேண்டிய மீனை வாங்கி உமலுக்குள் பனை யோலையால் பின்னப்பட்ட பாக் திணிப் பார்.

தான் கொடுத்த பொருளின் விலையிலி ருந்து மீன் விலையைக் கழித்துக்கொண்டு மீதிப் பணத்தை வாங்கி சேலைத் தொங்கலில் முடிந்து கொள்வார். ஒரு வகை மிதப்போடு வீடு செல் வார். பண்டமாற்றினால் பணம் சேர்க்கும் நுட் பத்தைச் சிந்தாமணி நன்கே அறிந்திருந்தார். வீடு சென்ற கையோடு, முடிந்துவைத்த காசை திரிக ணையில் வைத்த பானையை விலக்கி நெஸ்டமோல்ற் பேணி உண்டியலில் போட்டுத் திருப் திப் பெருமூச்சு விடுவார்.



சிந்தாமணி வீட்டுச் சவுக்கண்டி மாதமொரு முறை வரும் பூரணை நாட்களின் பின்னேர வேளையில் களைகட்டும். ஊர்ப் பெண்கள் சவுக் கண்டித் திண்ணையில் தலைக்குக் கையை முட் டுக்கொடுத்து படுத்துக்கொண்டும், குந்துச் சுவர் களில் இருந்தபடி வெற்றிலை போட்டுக் கொண்டு ஊர்ப் புதினங்கள் பேசிக்கொண்டுமி ருப்பார்கள். சவுக்கண்டி அரட்டையால் நிரம்பி யிருக்கும். பெண்களோடு கூடிவந்த சிறுவர்கள் சிந்தாமணி வீட்டு முற்றத்தில் கூடி விளையாடு வார்கள். அன்று மதியமே சிந்தாமணி மள்ளாக் கொட்டை"(மணிலாக்கொட்டை என்று கச் சானை சொல்வதன் திரிபு) வறுத்துச் சரை கோலி கட்டி வைத்துவிடுவார். இலந்தைப் பழங்களைப் பறித்து அப்பியாசக்கொப்பித் தாள்களில் ஒட் டப்பட்ட சிறு பைகளில் போட்டுவைப்பார். மண்பானையுள் வைத்துப் பழுக்கவைத்த அன்ன முனாவை தயார்நிலையில் வைப்பார். தினமும் பாடசாலைச் சிறுவர்களை இலக்குவைத்து முன் வேலியில் பொட்டுவைத்துச் செய்யப்படும் சிந் தாமணியின் அந்த வியாபாரம் பூரணை நாட்க ளில் சீட்டுக்குலுக்கலுக்கு வரும் பெண்களுடன் சேர்ந்து வரும் சிறுவர்களை இலக்கு வைத்திருக் கும். அது அந்தத் தாய்மாருக்கும் நன்கு தெரியும். ஐந்து பத்துடன் தயாராகத்தான் வருவார்கள்.

சீட்டுக் குலுக்கல் பெரிய வைபவமாக நடக்கும். மூன்று கண்ணாடியாலான போத்தல் கள். இன்று எல்லோரும் சொல்லும் "ரான்ஸ்ப ரன்சி"க்காக கண்ணாடிப்போத்தல். ஒரு போத் தலில் சீட்டுப் போடுபவர்களின் அதிஷ்டப் பெயர் எழுதிச் சுருட்டப்பட்ட துண்டுகள். மற் றொன்றில் வெறுந்துண்டுகளுடன் ஒரே ஒரு வெற்றித் துண்டும் சுருட்டிப் போடப்பட்டிருக் கும். இன்னொரு போத்தல் வெளியே எடுக்கப் பட்ட பெயர்த் துண்டுகளை தவறிப்போகாது போட்டுவைப்பதற்கு. பெயரெழுதி சுருட்டிய துண்டுகளை ஒவ்வொன்றாக எடுத்து ஒரு பெண் சத்தமாக பெயரைச் சொல்ல, மற்றப் போத்தலி லுள்ள சுருட்டிப் போடப்பட்ட துண்டுகளை எடுத்து விரித்து "வெறுந்துண்டு" என்று இன் னொரு பெண் சத்தமிட்டுச் சொல்வாள். ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் "வெற் றித்துண்டு" என்று சொல்லப் படும். அத்துடன் அந்த மாதத் துக்கான சீட்டுத்தொகை யாருக்கொன முடிவாகிவிடும். சீட்டு முடிந்த கையோடு கச் சான், இலந்தைபழம், அன்ன முன்னா விற்ற காசை எண்ணிப் பார்த்தபடி தாயறை மூலை மண்பானையை விலக்குவார் சிந்தாமணி.

சீட்டுத் தொகையைச் சேகரித்து ஒன்றாகத்திரட்டி "சீட்டு விழுந்தவருக்கு" கொடுப் பதே சிந்தாமணியின் பொறுப்பு. சீட் டுவிழுந்து ஐந்தாம் நாள் சீட்டுப் போடும் அனைவரும் சிந்தாமணி யிடம் தங்கள் தங்கள் பணத்தைக் கொடுக்கவேண்டும். தவறினால் ஒரு நாளுக்கு தண்டப்பணம் பத்து ரூபாய். யார் தங்கள் தொகையைத் தராவிட் டாலும் ஐந்தாம் நாள் பின்னேரம் நான்கு மணிக்கு சீட்டு விழுந்தவருக்கு முழுச் சீட்டுத் தொகை யையும் சிந்தா மணி கொடுத்துவிடுவார். தன்மீதுள்ள நம்பிக்கை குலைந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாயிருப்பார். "நாணயம் தவறினால் நாணயம் சேராது" என்று சீட்டுப்போடும் பெண்களிடம் அடிக்கடி சொல் லிக்கொள்வார்.

அனேகமாக பத்து நாட்கள் சென்றும் நாளுக்குப் பத்து ரூபாய் தண்டப்பணத்துடன் தங்கள் தொகையைச் சிந்தாமணி யிடம் முகத் தைத் தொங்கப்போட்டபடி சேர்ப்பிப்பவர்க ளும் உண்டு. தண்டப்பண விசயத்தில் எவருக் கும் தயவோ தாட்சணியமோ சிந்தாமணி யிடம் கிடையாது. அறவிடப்பட்ட தண்டப்பணத்தை எண்ணிப்பார்த்து நெஸ்டமோல்ற் பேணி உண் டியலில் போட்டுவைப்பார்.

சீட்டுக்காரச் சிந்தாமணியை கஞ்சச் சிந் தாமணி" என்று ஊரில் சிலர் "நையாண்டி" பேசு வார்கள். சிந்தாமணிக்கும் அது தெரியும். ஒரு போதும் அதற்காக சிந்தாமணி கவலைகொண் டதில்லை. ஒவ்வொரு மாத முடிவிலும் தாயறை மூலை நெஸ்டமோல்ற் உண்டியலைத் திறந்து எண்ணிப்பார்த்து எடுத்துக்கொண்டு தபால் கந் தோருக்குப் போவார். "மணியோடர்" எடுப்பதற் காக. மகன் பேராதனை "வாசிட்டியிலை" படிப் பதையிட்ட பெருமை கைம்பெண்ணான சிந்தா மணியை மூச்சுமுட்ட வைக்கும். திரும்பி வரும் போது முதியவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் உதவித்தொகையான "பீ.ஏ.எம்.ஏ" என்ற "பிச்சைச் சம்பளத்தை" அதே தபாற்கந்தோரில் எடுத்து சேலைத் தலைப்பில் முடிந்துகொண்டு வருவார். வந்தவுடன் வீட்டின் தாயறை மூலைக்குச் செல் வார்.

வீதிக்குவீதி லீசிங் கம்பனிகள், அடகுக்க டைகள், நுண்நிதிக்கடன் முகவர்கள் வெகுத்துப் போய்கிடக்கும் இந்த நாட்களில் தாச்சி "சிந்தா மணி" ஒரு தாய்ச்சி" சிந்தாமணி அல்லவோ?



# அடகு கடன் ஆபத்தில்லை

○ தங்கன்

கடந்தவாரம் உங்கள் பத்திரிகையில் வெளிவந்த அடகு சம்பந்தமான ஒரு கட்டுரையைப் படித்தேன். கடன் வாங்கிச் சீவிப்பதை ஊக்கப்படுத்தக் கூடாது என்பதை நானறிவேன். இருந்தும் ஒட்டு மொத்தமாக அடகு பிடிக்கும் எல்லா நிறுவனங்களையும் சாடுவதென்பது தவறு. கடன் பெற்றுத் திரும்பவும் கட்ட முடியாது தற்கொலைக்ள் அதிகரித்த நேரம் எனக்கும் எல்லா நிதி நிறுவனங்கள் மீதும் வெறுப்பு வந்ததை நான் மறுக்கவில்லை. ஆனால் அத்தகைய மரணங்கள் பெரும்பாலும் அறா வட்டி அறவிடும் நிதி நிறுவனங்களினால்தான் ஏற்பட்டதென்ற விளக்கம் ஏற்பட்டதும் கடன் கொடுக்கும் நிறுவனங்கள் தொடர்பான ஒரு ஆய்வை எனக்குள் மேற்கொண்டேன். கடனைத் திட்டமிட்டுப் பெற்று, தனக்கு அளவாகப்பெற்று, மீளவும் வருமானத்தைத் தரவல்ல முதலீடுகளில் கடன் பெற்ற பணத்தை உபயோகிப்பதால் அது ஆரோக்கியமான முடிவுகளைத் தரும் என்பது எனது நம்பிக்கை. ஆனால் கடனைப் பெற்றுக் கலியாணவீட்டைச் செய்வதும், மோட்டார் சைக்கிளை வாங்குவதும், 'தண்ணிப் பார்ட்டி' வைப்பதும் அர்த்தமற்றது. கூடவே அழிவையும் தரவல்லது.

எனக்குத் தெரிந்த சராசரிக் குடும்பம் ஒன்றில் - பெண் தலைமைத்துவக் குடும்பம் அது - மகளின் சாமத்திய வீட்டைத் 'தடல்புடலாகக்' கொண்டாடினார்கள். கொண்டாட்டத்துக்கு வரும் உறவுகள் 'என்வலப்' (அதற்குள் தானே மொய்ப்பணம் இருக்கும்) தருவார்கள் என்ற நம்பிக்கையோடு இருந்தவர்களுக்குப் பெருத்த இடி காத்திருந்தது. 'என்வலப்புகள்' அதிகம் வந்தாலும் அவர்கள் எதிர் பார்த்தவர்களிடமிருந்து பச்சை நிறத் தாள்களுக்குப் பதிலாக ( ஆயிரம் ரூபாத் தாள்) வெறும் ஊதாக் கலர் நோட்டுகளே(500 ரூபாத் தாள்) அதிகம் வந்திருந்தன. அதைவிட, திட்டமிட்டதைவிட அதிக செலவை வீடியோக் காரர்கள் ஏற்படுத்தியிருந்தனர். அவர்கள் அவர்களுக்கு ஆசை காட்டி வெளிப்புறப் படப்பிடிப்பைச் செய்து வீடியோவையும், பட அல்பத்தையும் கொடுத்து ஒண்டரை லட்சம் 'பில்லையும்' கொடுத்தனர். தமது மானத்தைக் காப்பாற்ற வேறு வழி இல்லாது தமக்குத் தெரிந்த ஒருவரிடம் 'கந்துவட்டி' முறை யில் கடன் வாங்கினர் அந்தத் தாயார். இப்போது அவர்கள் அந்தக் கடனை அடைக்கமுடியாமல் தாம் இருந்த வீட்டை விற்று நடுத்தெருவுக்கு வந்து விட்டார்கள்.

அதேபோன்று நுண்நிதிக் கடன் என்ற போர்வையில் மக்களிடம் வட்டிக்கு மேல் வட்டியாக அறவிட்டு, நிம்மதியை இல்லாமல் செய்கின்ற சம்பவங்களும் நடந்தேறவே செய்துள்ளன. அதைப் போலவே கந்துவட்டியால் பல குடும்பங்கள் நிம்மதியை மட்டுமல்லாமல் உயிரையும் இழக்கும் சம்பவங்கள் , வடக்கில் அதிகரித்தபடியே உள்ளன. தற்போது வடக்கில் நிகழும் தற்கொலை மரணங்களில் பெரும்பாலானவை , இவ்வாறு கடன் தொல்லையால் ஏற்படுபவையே. ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாக இருக்கும்.

சில காலங்களுக்கு முன்னர் நகைத்தொழில் செய்யும் இளம் குடும்பஸ்தர் ஒருவர், தனது நண்பர் ஒருவருக்கு பணம் தேவைப்பட்டதால்,இன்னொரு நபரிடம் வட்டிக்கு கடன் வாங்கி, அதைக் கொடுத் துள்ளார். தான் வாங்கிய கடனுக்கான வட்டியை விட , ஒருசில வீதங்கள் அதிகரித்த வட்டியிலேயே நண்பருக்கு அவர் அதனைக் கொடுத்திருந்தார். நண்பரும் அதைக் குறிப்பிட்ட தினத்தில் மீளக் கொடுத்தார். இந்த நகைத் தொழிலாளியும் வாங்கிய இடத்தில் பணத்தை வட்டியோடு கொடுத்துவிட்டு, தனக்குரிய இலாபத்தையும் பெற்றுக் கொண்டார். இப்படி ஒரு இடத்தில் வட்டிக்கு கடன் வாங்கி, அதவிட அதிக வட்டிக்கு இன்னொருவருக்கு கடன் கொடுக்கும் 'றோலிங்' பல இடங்களில் நடப்பதுதான். இந்த "றோலிங்' அதிக பணத்தை இருந்த இடத்திலேயே சம்பாதிக்க வைப்பதால், அந்தத் தொழிலையே தொடந்தார். ஆசை மெல்ல மெல்லப் பேராசையானது. இப்போது பல லட்சங்களைக் கடன் வாங்கி வட்டிக்கு விட்டார். ஆனால் பணம் கடன் பெற்ற நண்பர்கள் கம்பி நீட்டி விட, இவருக்கு கடன் கொடுத்தவர்கள் கழுத்தை நெருக்கத் தொடங்கினர். எவ்வளவு நாளைக்குத்தான் அந்த அழுத்தத்தைத் தாங்கமுடியும்? ஒருநாள் நகை செய்யும் அமிலத்தைக் குடித்து தன்னுயிரை மாய்த்துக் கொண்டார். பிரச்சினை அத்தோடு முடிந்து விடவில்லை. அவர் இறந்து சிலநாட்கள் கழியுமுன்னரே , கடன் கொடுத்தவர்கள் அவரது குடும்பத்தினருக்கு தொல்லை கொடுக்கத் தொடங்கினர். மனைவி எங்கு போவார் அத்தனை லட்சங்களையும் திருப்பிக் கொடுக்க? நாளாக நாளாக கடன் கொடுத்தோரின் 'ஆய்க்கினை' அதிகரித்தது. கணவன் வழியிலேயே மனைவியும் உயிரை மாய்க்க முடிவெடுத்தார். ஆனால் தான் இறந்தால் தன்னுடைய பிள்ளைகளின் கதி என்னவென்று, யோசித்தவர், எல்லோருக்குமாக ஐஸ்கிறீமில் நஞ்சைக் கலந்து கொடுத்து , தானும் குடித்து பிள்ளைகளையும் கொன்று, தானும் மாண்டு போனார். கந்துவட்டிக் கடன் குடும்பங்களின் உயிர் குடிக்கும் கதை இப்படித்தான்.

ஆனால் , இங்கேதான் அடகுக் கடன் முக்கியத்துவம் பெறுகின்றது. பொதுவாகவே அடகுக் கடனுக்கான வட்டிவீதம் குறைவு. அதனால் அதனை மீட்பது வெகுசுலபம். அத்தோடு எல்லோருக்கும் தத்தம் நகைகள் தொடர்பில் ஒரு 'செண்டிமெண்ட்' இருக்கும். அதனால் நகைகளை ஒரு அவசர தேவைக்காக அடகு வைத்தால், அதனை எவ்வளவு விரைவில் மீட்க முடியுமோ அவ்வளவு விரைவில் மீட்கவே முயல்வார்கள். லீசிங், கந்து வட்டிக் கடன் என்பவற்றை வாங்கினால், அதற்கான வட்டியை மாதா மாதம் கட்ட வேண்டும். இல்லாவிட்டால் அடுத்த நாளே கடன் கொடுத்த நிறுவனங்களின் பிரதிநிதிகளோ, நபர்களோ உங்கள் வீட்டு வாசல் முன்னால் வந்து நிற்பார்கள். வட்டியைக் கொடுக்காவிட்டால், கடும் வார்த்தைகளால் துளைத்தெடுப்பார்கள். அந்த வார்த்தைகளைக் கேட்பதைவிட செத்துவிடலாம் போன்ற மனோநிலைக்கு உங்களைக் கொண்டுவந்துவிடுவார்கள். இந்த இடத்தில் தான் அடகுக் கடன்கள் 'கனவான் தன்மையோடு' எமது கௌரவத்துக்கு சிறு பங்கமும் ஏற்படாத வகையில் காப்பாற்றுகின்றன. வட்டியை மாதந்தமும் கட்டலாம், அல்லது வசதிக்கேற்ப காலாண்டு, அரையாண்டு,வருடத்துக்கு ஒருமுறை என்று கட்டலாம். அதைவிட சிலவேளைகளில் உங்களால் வட்டியைக் கட்ட முடியாமல் போனாலும், கண்ணியமான வார்த்தைகளோடு அறிவுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டு, அதற்கும் பதில் கொடுக்காமல் போனாலே, அந்த நகையை ஏலத்தில் விட்டு விற்பார்கள். அதிலும் ஏலத்தில் என்ன தொகைக்கு அந்த நகை விலை போகின்றதோ, அதில் கடன் மற்றும் வட்டிக்கான தொகையைக் கழித்துவிட்டு, எஞ்சியதொகையை உரியவர்களுக்கு அனுப்பி வைப்பார்கள். ஆக, உண்மையாகவே ஒரு நல்ல தேவைக்காக கடன் பெற வேண்டுமெனில் அடுத்தவர்களிடம் பல்லைக் காட்டி, வளைந்து குனிந்து, கௌரவத்தை விட்டுக் கொடுத்து, அதிக வட்டி கொடுத்து வாழ்க்கையை இழந்து போவதை விடவும், தன் மானத்தோடு வாழ அடகுக் கடன்கள் வரப்பிரசாதமே.

> அடகுக் கடன்கள் 'கனவான் தன்மையோடு' எமது கௌரவத்துக்கு சிறு பங்கமும் ஏற்படாத வகையில் காப்பாற்றுகின்றன. வட்டியை மாதந்தமும் கட்டலாம், அல்லது வசதிக்கேற்ப காலாண்டு, அரையாண்டு,வருடத்துக்கு ஒரு முறை என்று கட்டலாம். அதிக வட்டி கொடுத்து வாழ்க்கையை இழந்து போவதை விடவும், தன்மானத்தோடு வாழ அடகுக் கடன்கள் வரப்பிரசாதமே.



# கூகுளையே மெர்சலாக்கிய மாதவன்!





யாழ். இந்துவுக்கு இன்னொரு பெருமை!!

**கூகுள் என்றாலே உலகமே சும்மா அதிரும். அந்த அளவுக்கு உலகின் முதல்தர தேடுபொறி நிறுவனமாக இணைய உலகில் தனிக்காட்டு இராச்சியம் நடத்தும் கூகிள் நிறுவனம் நடத்திய. 'கூகுள் கோட் இன்' (google code in) போட்டியில் முதல்நிலை வெற்றியாளர்களில் ஒருவராகத் தேர்வாகியுள்ளார், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உயிரியல் பிரிவில் கல்வி கற்கும் மாணவன் நித்தியானந்தன் மாதவன். எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவுக்காக கலிபோர்னியாவில் அமைந்துள்ள கூகிள் தலைமையகத்துக்கு செல்லத் தயாராகிக் கொண்டிருக்கும் அவருடன் ஒரு நேர்காணல்.**

நேர்காணல்: உ.பவனிதன்

**கே: கூகிள் நிறுவனம் நடத்திய ' கூகுள் கோட் இன்' போட்டி என்றால் என்ன?**

ப: கூகிள் நிறுவனத்தினுடைய open source team அதாவது திறந்த குழுவினால் நடாத்தப்படுகின்ற ஒரு போட்டி தான் ' கூகுள் கோட் இன்'. இது முழுக்க முழுக்க ஒன்லைன் முறையில், சகலரும் பங்குபற்றக் கூடியதாக நடத்தப்படுகிற ஒரு போட்டி. 13 தொடக்கம் 17 வயது வரையிலான உயர்கல்வி மாணவர்களுக்காக கூகிள் இம்முறை பத்தாவது ஆண்டாக இந்தப் போட்டியை நடத்தியது.

**கே: இந்தப் போட்டியைப் பற்றி எவ்வாறு நீங்கள் அறிந்து கொண்டீர்கள்? இதில்பங்குபற்றி வெற்றி பெற வேண்டும் என உங்களை உந்திய விடயம் எது?**

ப: நான் கூகிளில் அடிக்கடி ஏதாவது உந்திய வழமை. அப்படி ஒரு நாள் தேடும் போது தான் இந்தப் போட்டியைப் பற்றி நான் தெரிந்து கொண்டேன். இந்தப் போட்டியில் மூன்று இலக்குகளைச் செய்து முடித்தால் கூகிள் நிறுவனத்தின் பெயர் பதித்த ஒரு 'ரீசேர்ட்' தருவார்கள். அந்த 'ரீசேர்ட்டை' கெத்தாகப் போட்டுக் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் போட்டியிலேயே நான் கலந்து கொண்டேன். முதலில் அதுதான் எனது இலக்காகவும் இருந்தது. பிறகு இன்னும் கொஞ்சம் முயற்சியெடுத்தால், முதல்தர வெற்றியாளர் ஆகலாம் என்பதால் என்னுடைய இலக்கை அதை நோக்கி மாற்றிக் கொண்டேன்.

**கே: இந்தப் போட்டியில் நீங்கள் பங்குபற்றுவதற்காக உங்களை ஏதாவது பிரத்தியேகப் பயிற்சிமுறைக்குள் ஈடுபடுத்தினீர்களா?**

ப: எனக்கு சிறுவயதிலிருந்தே விக்கிபீடியாவில் பங்குபற்றுவது, அதில் மாற்றங்கள் செய்வது குறித்து ஆர்வம் அதிகம். அதில் உள்ள கட்டுரைகளில் வருகின்ற ஒரே மாதிரியான எழுத்துப் பிழைகளைத் திருத்த தானியங்கி என்கிற 'ரோபோட்டுக்கு' நிரலாக்கம் ( புரோக்கிராம்)எழுதிக்கொடுத்தால், அது தானாகவே அந்தக் கட்டுரையில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தும். அது போன்ற விடயங்களில் எனக்கு ஆர்வம் இருந்து வந்தது. அதைப் போன்ற ஒரு போட்டிதான், இந்த' கூகிள் கோட் இன்' என்கிறபடியால் இதற்காக நான் போட்டியிடத் தீர்மானித்த கருப்பொருள், 'அபார்ட்மெண்ட்' என்கிற கருவி. இந்த 'அபார்ட்மென்ட்'என்பது பலராலும் பயன்படுத்தப்படும் கூகிள் மொழிபெயர்ப்பு (*google translate*)முறையைப் போன்றதாகும். எண்ணிக்கையில் குறைந்தோரால் பயன்படுத்தப்படும் தமிழ்மொழி போன்ற மொழிகளில் ஆங்கில மொழிபெயர்ப்பை தவறின்றி சரியாக மேற்கொள்ள இந்த 'அபார்ட்மென்ட்' உதவுகிறது. அதுவே ஏன் வெற்றிக்கு மிக முக்கிய காரணியாக அமைந்தது.

**கே: இந்தப் போட்டியில் எத்தனை நாடுகளில் இருந்து, எத்தனை போட்டியாளர்கள் பங்குபற்றினார்கள்? எவ்வளவு நாட்கள் இந்தப் போட்டிக்காகச் செலவழித்தீர்கள்?**

ப: 76 நாடுகளைச் சேர்ந்த கிட்டத்தட்ட 3566 பேர் 'அப்பார்ட்மெண்ட்' முறைத் தலைப்பின் கீழ் கலந்து கொண்டிருந்தார்கள். கலந்து கொண்ட அனைவருக்குமே 20,840க்கும் மேற்பட்ட இலக்குகளைச் செய்துமுடிக்க கொடுத்திருந்தார்கள். கிட்டத்தட்ட 50 நாட்களுக்கு மேல் இந்த இலக்குகளைச் செய்து முடிக்க நான் செலவழித்தேன்.

**கே: பங்குபற்றியவர்களில் நீங்கள் மட்டும் தான் வெற்றியாளராகக் கூகுளால் தெரிவு செய்யப்பட்டீர்களா, அல்லது வேறு போட்டியாளர்களும் வெற்றி பெற்றார்களா? எதனை அடிப்படையாகக் கொண்டு கூகிள் வெற்றியாளர்களைத் தீர்மானித்தது?**

ப: மொத்தமாக 58 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அதில் நானும் ஒருவன். இந்தப் போட்டியானது சில நிறுவனங்களினுடைய 'ப்ரொகிராம் கோடிங்குகளில்' (programme coding) உள்ள சில பிழைகளைத் திருத்துவதற்காக அவற்றை சின்னச் சின்ன இலக்குகளாக மாற்றி மாணவர்களிடையே போட்டியாக நடத்தி, பரிசுகள் வழங்குதலை மையமாகக் கொண்டது. ஆதலால் அந்தந்த நிறுவனத்துக்கு தரமாகவும் நம்பிக்கையாகவும் நாம் செய்து கொடுக்கும் இலக்குகளை அடிப்படையாக வைத்தே கூகிள் வெற்றியாளர்களைத் தீர்மானிக்கிறது. அந்த வகையிலேயே ' கூகிள் கோட் இன் 2019' இல் நான் வெற்றியாளராகியுள்ளேன்.

**கே: இந்தப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற முதல் இலங்கைத் தமிழனாகியுள்ளீர்கள். இது எப்படிச் சாத்தியமாகியது?**

ப: இந்த வெற்றியை நான் அடைவதற்கு உறுதுணையாக இருந்த என்னுடைய பெற்றோருக்குத் தான் முதலில் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பு நான் வெற்றி பெற ஊக்கமாக அமைந்தது. அடுத்ததாக என்னுடைய பாடசாலையான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் என்னுடைய பொறுப்பாசிரியர்களும், நண்பர்களும் என்னை ஊக்குவித்தார்கள்.

இந்தப் போட்டியை நடத்தும் அந்தந்த நிறுவனங்களின் சார்பில் இந்தப் போட்டிக்கு உதவி புரிய மெண்டர்ஸ்(*mentors*) எனச் சிலர் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பும் எனக்கு மிக்க பலமாக அமைந்தது.

இது போன்ற போட்டிகளில் எதிர்காலத்தில் என்னைப்போல ஏனையோரும் பங்குபற்றுவதற்கு என்னால் முடிந்த எல்லாவற்றையும் எனது பாடசாலை மூலம் செய்வதற்கு ஆவலாக உள்ளேன். அது மட்டுமன்றி, நிறைய பயிற்சிப்பட்டறைகளை வைத்து, மாணவர்களைத் தயார்படுத்த நான் சில முயற்சிகளும் எடுத்து வருகிறேன்.




முழுநிலவின் அருகிருந்து
மூன்றாம் பிறையை
ரசிக்க வேண்டும்!

நண்பகல் வேளை
நட்சத்திரங்களை நான்
கண்டு களிக்க வேண்டும்!

ஒற்றை ரோஜா
ஒரு நந்தவனமாய் மாறி....
உவகையளிக்க வேண்டும்!

சோர்வான வேளைகளில்
தெய்வக் குரலொன்று - என்னை
சந்தோஷ மிகுதியால்
துள்ளியெழச் செய்ய வேண்டும்!

இவையெல்லாம் நடக்க
என் அன்புமகளே
நீ என் அருகில் வேண்டும்!

*விஜயகண்ணன்*
*யாழ்ப்பாணம்*



# நம்புங்கள் தமிழீழம் நாளை கிடைக்கும்

ந.பரமேஸ்வரன்

ஈழத்தமிழர் பிரச்சினையை முதல் முதலில் ஐ.நா சபைக்கு எடுத்துச்சென்றவர் திருநெல்வேலியைச் சேர்ந்த வைத்திலிங்கம். 1962ம் ஆண்டு தனது சொந்தப்பணத்தில் இந்தியா சென்று, அங்கு அப்போதைய தமிழகத்தலைவர்களான காமராஜர், ம.பொ.சி. போன்றவர்களை, சந்தித்து, ஈழத்தமிழர் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி அவர்களுக்கு எடுத்துரைத்தார். பின்னர் பலத்த சிரமத்தின் மத்தியில் (சாப்பாட்டிற்கே கஷ்டமான நிலையில்) பிரிட்டன் சென்று அங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அணிசேராநாடுகளின் உறுப்பினர்களையும் சந்தித்து ஈழத்தமிழர் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி அவர்களுக்கும் எடுத்துக்கூறினார். அதன் பின்னர் ஐ.நா. செயலரை சந்திக்க முயன்றார். ஆனால் சந்திக்க முடியவில்லை. பின்னர் ஐ.நா. செயலாளருக்கு கடிதம் மூலம் பிரச்சினை பற்றி எழுதி அனுப்பி விட்டு நாடு திரும்பினார்.

இதன் பின்னர் ஐ.நா.சபையை ஒரு கலக்குக் கலக்கி உலகத்தலைவர்களைத் திரும்பிப்பார்க்கச் செய்தவர் கிருஷ்ணா வைகுந்தவாசன். 1978ஆம் ஆண்டு ஒக்டோபர் ஐந்தாம் திகதி ஐ.நா.சபை அதிர்ந்தது. அன்றைய தினம் ஐ.நா.சபையின் அமர்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. உலகத்தலைவர்கள் அனைவரும் கூடியிருந்தனர்; 150 நாடுகளின் பிரதிநிதிகள் அன்றைய தினம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். இலங்கைப் பிரதிநிதி உரையாற்ற வேண்டிய, சந்தர்ப்பத்தில் இப்போது இலங்கை பிரதிநிதி உரையாற்றுவார் என அறிவிக்கப்பட்டது. இலங்கையின் பிரதிநிதியாக அப்போதைய வெளிநாட்டமைச்சர் A.C.S ஹமீத் கலந்து கொண்டிருந்தார். வெளிநாட்டமைச்சர் A.C.S ஹமீத் பேசுவதற்காக எழுந்தார் . அவர் எழுந்து ஒலிவாங்கிக்கு முன்பாக வருவதற்கிடையில் வைகுந்தவாசன், மேடைக்குச் சென்று உரையாற்றினார். இரண்டரை நிமிடங்கள்தான், வைகுந்தவாசனால் பேச முடிந்தது. ஆனால் அந்த இரண்டரை நிமிடங்களுக்குள் பணியாளர் ஒலிவாங்கியை நிறுத்துவதற்கிடையில் சொல்ல வேண்டியதை ஆங்கிலத்தில் சொல்லி விட்டார் வைகுந்தவாசன்.

**வைகுந்தவாசனின் உரையின் தமிழாக்கம்**

*“பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தலைவர்களே!*

ஸ்ரீலங்காவில் தமிழ் ஈழம் போன்ற ஒடுக்கப்படும் சிறுபான்மை மக்களை கொண்ட நாடுகள், இங்கே பிரதி நிதித்துவம் வகிக்க முடியாது . உலக நாடுகளின் உச்சப் பேரவையான இங்கே எங்கள் இன்னல்களைக் கூறாமல் வேறு எங்கே போய் எடுத்துக் கூறுவது?

என் பெயர் கிருஷ்ணா. இந்தியாவுக்கும் ஸ்ரீலங்காவுக்கும் இடையே உள்ள 25 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட “தமிழீழம்” என்ற நாட்டில் இருந்து பிரதிநிதியாக வந்திருக்கின்றேன்.

ஸ்ரீலங்கா அரசு சிறுபான்மை இனத்தை துன்புறுத்தி ஒடுக்கும் கொள்கையைத் தொடர்ந்து கடைபிடித்து வருகிறது. தனிநாடாக வாழ்வதற்கு சுய நிர்ணய உரிமையுண்டு.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியில் சிங்களர் உருவாக்கும் வன்முறைப் போராட்டங்கள் மிகுந்த இன்னல்களை எங்களுக்கு உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. தமிழர்களுக்கு எதிரான அச்சறுத்தல்கள் இந்து சமுத்திர பிராந்தியத்தின் சமாதானத்துக்கு அச்சுறுத்தலாக அமையும். உலகத் தலைவர்களாகிய நீங்கள் இதில் தலையிட்டுத் தீர்வு காணாவிட்டால், நாளை எங்கள் பிரச்சினையும் பலஸ்தீன விடுதலை இயக்கம்போல் சைப்ரஸ் போராட்டம் போல, உருவாகும். உருவெடுக்கும். நாங்கள் உங்களது உதவியை எதிர்பார்க்கிறோம். நன்றி. அனுமதியின்றி உரையாற்றியமைக்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். வாழ்க தமிழ் ஈழம்”

ஆங்கிலத்தில் மடமடவென்று தெள்ளத் தெளிவாக இர்த்னச்சுருக்கமாக, மிக விரைவாக அவர் உரையாற்றி முடித்தபோது மிகப் பெரிய நிசப்தமும் தொடர்ந்து சலசலப்பும்.

நிமிடத்துக்குள் உரையாற்றிய வேகமும், தெளிந்த ஆங்கில வார்த்தைகளும் சபையைப் புரட்டிப்போட்டது. வைகுந்தவாசனின் உரை சகல சர்வதேச ஊடகங்களினதும் கவனத்தை ஈர்த்தது. வைகுந்தவாசன் உரையாற்றியது ஐ.நா.சபையில். வைகுந்தவாசனுக்கு முன்னரோ அல்லது பின்னரோ ஐ.நா.சபையில் இலங்கைத் தமிழர்களுக்குச் சார்பாக எவரும் உரையாற்றவில்லை.

2009ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடைந்த பின்னர் புலம்பெயர்ந்த ஈழத்தமிழ் செயற்பாட்டாளர்களும் ‘லோக்கல்’ தமிழ் ஈழவாதிகளும், வருடந்தோறும் ஜெனீவாவுக்கு படையெடுக்கின்றனர். இவர்கள் அனைவரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் வருடாந்த கூட்டத்தொடரில் கலந்து கொள்ள வரும் பிரதிநிதிகளுக்கு கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி எடுத்துக்கூறுகின்றனர். விளக்கமாக சொல்வதென்றால், சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் வழக்காட முன்னர் தமது கட்சிக்காரர்களிடம் பிரச்சினைய்யை கேட்டுத் தெரிந்து கொள்வது போல். ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஐ.நா சபையின் ஓர் உப அங்கம்; இந்த உப அங்கத்தில் கூட ஒரு நாட்டின் பிரதிநிதி தான் கலந்து கொள்ள முடியும். ஜெனிவா செல்லும் அதிதீவிர ஈழவாதிகளுக்கு விமான பயணச்சீட்டு மற்றும் தங்குமிடம், உணவு என்பவை புலம்பெயர் தமிழ் அமைப்புகளால் வழங்கப்படுகின்றன. அனந்தி, சிவாஜிலிங்கம் போன்றவர்கள் தமது சொந்தப்பணத்திலேயே ஜெனிவா சென்று வந்ததாக ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர். இவர்களது நாட்டுப்பற்றைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை. யாராவது தமது சொந்தப்பணத்தை செலவு செய்து தமது இனத்துக்காக குரல் கொடுப்பார்களா? இவர்கள் தமது சொந்தப் பணத்திலோ, ஊர்ப்பணத்திலோ ஜெனிவா சென்று அங்கு வரும் பிரதிநிதிகளுக்குக்கு விளக்கமளித்து விட்டு வருவதை இங்குள்ள சில தமிழ் ஊடகங்கள் ஐ.நா.சபையில் தமிழில் உரையாற்றினார் என்று செய்தி வெளியிடுகின்றன. நாங்கள் யூதருக்கு நிகரான அறிவாளிகள் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

கடந்த பத்து வருடங்களாக இவர்கள் ஜெனிவா சென்று வருகின்றனர். புலிகளின் தலைவர் பிரபாகரன் முடியாததைக் கூட இவர்கள் நிச்சயம் செய்வார்கள். நம்புங்கள் தமிழ் ஈழம் நாளை பிறக்கும்.

# போர்க்காலம் நீடிக்கப்படுமா?



ஆர்.பிரகாஷ்

சர்வதேச கிரிக்கெட் விதிகளின்படி டெஸ்ட் ஆட்டமென்பது 5 நாள்களைக் கொண்டது. அவ்வாறு ஐந்து நாள்களைக் கொண்ட ஆட்டங்களிலேயே பெரும்பாலானவை நேரம் போதாமையால் வெற்றி -தோல்வியின்றி முடிவதுண்டு. ஆனால் வடமாகாணத்தில் பாடசாலைகளுக்கு இடையே நடைபெறும் ‘டெஸ்ட்’ ஆட்டங்கள் வெறுமனே இரண்டு நாள்களைக் கொண்டதாகவே நடைபெறுகின்றன. வடக்கில் பாடசாலைகளுக்கு இடையிலான பெரும்போர்களில் (டெஸ்ட் ஆட்டங்களில்) பெரும்பாலானவை சமநிலையில் முடிவதற்கு இதுவே காரணம். இதை மூன்று நாள்களாக மாற்றவேண்டும் என்பதே பலரினதும் எதிர்பார்ப்பு. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான வடக்கின் போர் மூன்று நாள்களைக் கொண்டதாக நடைபெறுவது வரவேற்கத்தக்கது. ஆனால் மற்றொரு பழைமையான ஆட்டமான யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான பொன் அணிகளின் போர் அன்றுபோல் இன்று வரையும் இரண்டு நாள்களைக் கொண்டதாகவே நடத்தப்படுகின்றது. அதேபோன்று வீரர்கள் போர், நீலங்களின் போர், இந்துக்களின் போர் போன்ற முக்கிய ஆட்டங்களும் இரண்டு நாள்கள் கொண்டதாகவே அமைந்துள்ளன. இவற்றை விட பாடசாலைகளின் அணிகளுக்கு இடையே நடைபெறும் நட்பு ரீதியிலான ஆட்டங்களும் இரண்டு நாள்கள் கொண்டதாகவே நடைபெறுகின்றன.

**90 பந்துப்பரிமாற்றங்களில் இரண்டு இன்னிங்ஸ்களா?**

சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிகளின் மற்றும் நடைமுறைகளின் அடிப்படையில் ஐந்து நாள்களைக் கொண்ட டெஸ்ட் ஆட்டமென்பது ஓர் நாளுக்கு 90 பந்துப்பரிமாற்றங்கள் என்ற அடிப்படையில் 450 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்டதாக அமைகிறது. அவற்றில் இரு இன்னிங்ஸ்கள் உள்ளடங்குகின்றன. அந்த வகையில் ஓர் இன்னிங்ஸ் சராசரியாக 200 முதல் 230 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்டதாகக் காணப்படுகிறது. ஆனால், பாடசாலை அணிகளின் டெஸ்ட் ஆட்டமென்பது ஒரு நாளுக்கு 90 பந்துப் பரிமாற்றங்கள் என்ற அடிப்படையில் ஒட்டுமொத்தமாகவே 180 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாகத்தான் அமைகிறது. ஆக, சர்வதேச அணிகளின் ஓர் இன்னிங்ஸ் அளவுக்கேனும், பாடசாலை அணிகளின் முழு டெஸ்ட் ஆட்டம் அமையவில்லை. இந்த 180 பந்துப்பரிமாற்றங்கள் ஓர் டெஸ்ட் அந்தஸ்துக்குரிய போதிய அவகாசம் என்று ஒருபோதும் குறிப்பிட இயலாது. இதனாலேயே அதிகப்படியான ஆட்டங்கள் இங்கு சமநிலையில் முடிவடைகின்றன. இதுவரை 102 பொன் அணிகளின் போர்கள் நடைபெற்றுள்ளன. அவற்றில் 48 ஆட்டங்களே வெற்றி அல்லது தோல்வியுடன் என்ற முடிவை எட்டியவை. ஏனையவை சமநிலையும் கைவிடப்பட்ட ஆட்டங்களும்தான்.

**சமநிலையால் பயனில்லை**

பாடசாலை அணிகளின் பக்கம் ரசிகர்களை இழுக்க வேண்டுமாயின் வெற்றி, தோல்வி என்ற இந்த இரு முடிவுகளை மட்டும் இயலுமான வரையில் கொடுக்கக்கூடிய வகையில் ஏற்பாடுகள் அமையவேண்டும். மூன்றாவது முடிவான சமநிலை என்பது, விறுவிறுப்புக்கும் பரபரப்புக்கும் உரிய ஒன்று அல்ல . இந்த நடைமுறையைச் செயற்படுத்துவதற்கு பரீட்சைகள், கல்வி நடவடிக்கைகள் போன்றவற்றைக் காரணமாகக் காட்டுவது ஏற்கப்பட முயாததொன்றே. டெஸ்ட் ஆட்டங்களைப் பரபரப்பாக்குவதற்கும் அதன்பால் ரசிகர்களைக் கொண்டுவருவதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை சர்வதேச கிரிக்கெட் சபை கொண்டுவந்துள்ளது. பகலிரவு டெஸ்ட் ஆட்டம், நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறை, இலக்கம் பொறிக்கப்பட்ட ஜெர்சிகள் என்பவை அவற்றில் சில. அந்த அளவுக்கு பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் தரமுயர்த்தப்பட வாய்ப்பில்லாத ஒன்றாக உள்ளபோதிலும், குறைந்த பட்சம் சமநிலை முடிவு என்பதையா வது தவிர்த்து வெற்றி, தோல்வி என்பவற்றை மட்டும் முடிவு களாகக் கொடுப்பது தொடர்பில் பரிசீலிக்கலாம் அல்லவா?

## நாடாளுமன்றத் தேர்தலின் பின்

# அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர்!

சமகால அரசியல் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் 'உதயன் - சஞ்சீவி' வாசகர்களுக்காக வழங்கிய பிரத்தியேக நேர்காணல்.

○ சந்திப்பு ஏ.ஏ.

**கேள்வி: எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடப் போகின்றதா? சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்து போட்டியிடவுள்ளதா?**

பதில் : இங்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அணி, அரசுடன் இணக்கத்துடன் செல்வதன் ஊடாகத்தான் இலக்கை அடைய முடியும் என்று நம்பும் அனைவருடனும் ஒரு குடையில் செல்வதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

**கே: அப்படியானால் இந்தக் கூட்டுக்குள் ஈ.பி.டி.பி., வரதராஜப் பெருமாள் அணி, சந்திரகுமார் அணி என்பனவும் உள்ளடங்குகின்றனவா?**

ப: (இடைமறித்து) நான் யார், யார் என்று சொல்லவில்லை.

**கே: ஆனால் இந்தத் தரப்புக்கள் நீங்கள் கூறும் அரசுடன் இணக்கத்துடன் சென்று இலக்கை எட்டலாம் என்று கூறுபவைதானே?**

ப: நாடாளுமன்றம் இன்னமும் கலைக்கப்படவில்லை. கலைக்கப்பட்ட பின்னர்தான் கூட்டணிகள் பற்றிப் பேசப்படும். சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்போது மிகப் பெரிய கூட்டணியில் இருக்கின்றது. அரசுடன் பேசி இலக்கை அடைய முடியும் என்று சிந்திக்கின்ற யார் வேண்டுமானாலும் இதற்குள் வரமுடியும்.

**கே: ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்ஷவின் வெற்றிக்காகச் செயற்பட்ட தரப்புக்கள், நாடாளுமன்றத் தேர்தலில் ஓரணிக்குள் வராமல் செல்வதற்கான சாத்தியங்கள் உண்டா?**

ப: அதைப் பற்றிச் சொல்லத் தெரியவில்லை. ஒரு அணியாகச் செல்வதுதானே எல்லோருக்கும் நல்லது. தமிழ் மக்கள் பிரிந்திருப்பதை விடவும், ஒரு நல்ல விடயத்துக்காக எல்லோரும் ஒன்றிணைவது நல்லதுதானே.

**கே: 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்த ராஜபக்ஷவை நீங்கள் ஆதரித்திருந்தீர்கள். மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதும், உடனடியாகவே அவரை ஆதரித்திருந்தீர்கள். இந்த மாற்றத்துக்கான காரணம் என்ன?**

ப: பாடசாலை ஒன்றில் நீங்கள் படிக்கின்றீர்கள். அதிபர் ஓய்வு பெற்றாலோ, இடம்மாற்றம் பெற்றாலோ அவர் செல்லும் பாடசாலைக்கு நீங்கள் மாற்றலாகிச் செல்வீர்களா? இல்லையே. நான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில்தான் தொடர்ச்சியாக இருந்திருக்கின்றேன். எமது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தித்தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கின்றேன். நான் ஓரிடத்தில்தான் இருந்தேன். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைதான் மாறியது.

**கே: அப்படியானால் இப்போது உங்கள் தலைவர் மஹிந்தவா? மைத்திரியா?**

ப: நாட்டின் தலைவர் கோத்தாபய. பிரதமர் மஹிந்த. சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவராக இருப்பது மைத்திரிபால. கூட்டணியின் தலைவராக இருப்பது மஹிந்த.

**கே: நீங்கள் யாரைத் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ளீர்கள்?**

ப: அங்கஜனுக்குத் 'தலைவர்' என்று நான் யாரையும் பார்க்கவில்லை. 'தலைவ'ர் என்று ஒருசிலரைத்தான் ஏற்றுக் கொண்டுள்ளோம். தலைவர் யார் என்பதை அடிக்கடி மாற்றக் கூடாது. உங்களுக்கு அந்தத் 'தலைவர்' யாரென்று விளங்கும் என்று நினைக்கின்றேன்.

**கே: புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியிலிருந்து, கூட்டு அரசிலிருந்து வெளியேறியது சிறிலங்கா சுதந்திரக் கட்சியே. அந்த முயற்சிக்கான தோல்வியின் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா?**

ப: 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புதிய அரசமைப்புக்கான முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. கூட்டு அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறியது, 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம். மூன்றரை வருடங்கள் காலம் கொடுத்து, கடைசி ஒன்றரை வருடங்களில் செய்து முடிக்கப்படும் சாத்தியம் என்பது பொய்யான விடயம். அரசமைப்பு மாற்றம் என்பதில், 225 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள், அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் கருத்துக்கள் என்பவையும் தங்கியுள்ளன. அரசமைப்பு மாற்றம் கடைசி ஒரு வருடத்தில் நடந்து விடக் கூடிய விடயமல்ல.

**கே: அப்படியானால் புதிய அரசமைப்பு முயற்சியின் தோல்விக்கு யார் காரணம்?**

ப: அரசமைப்புத் தேவை என்பவர்களுக்கு நேர்மையான நோக்கம் கிடையாது. அதே நேரம் அதைச் செய்து தருவோம் என்று சொன்னவர்களுக்கும் நேர்மையான நோக்கம் கிடையாது. அதனுடன் இணைந்தவர்களுக்கும் நேர்மையான நோக்கம் இல்லை. பொதுவாக எந்தவொரு தேசியக் கட்சிக்கும் இந்த விடயத்தில் நேர்மையான நோக்கம் இல்லை. தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவதற்கு மிக முக்கிய இலக்காக இருந்தது புதிய அரசமைப்பு. புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சொல்லிக் கொண்டிருந்தது. ஆனால் அதை எட்டவேண்டுமாயிருந்தால் மூன்றரை வருடங்களுக்குள் அதைச் செய்திருக்க முடியும். புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை. பொது வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டியிருக்கும். இது இலகுவான விடயமல்ல. எனவே நல்லாட்சி அரசு அமைந்த உடனேயே இதனைச் செய்திருக்க வேண்டும். புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதில் தொடர்புடைய எந்தத் தரப்புக்களும் அந்த விடயத்தைச் செய்து முடிக்கவேண்டும் என்பதில் நேர்

> தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் எனக்கு மறுப்புக் கிடையாது. ஆனால் அதற்கான பேச்சு, சம்பந்தப்பட்ட தரப்பினருடனானதாக இருக்க வேண்டும். வீட்டுக்குள் கணவன், மனைவி சண்டையிட்டால் வெளி நபரையா அழைத்து பிரச்சினையைத் தீர்க்கச் சொல்வோம்?



மையாக இருக்கவில்லை.

**கே: ஐக்கிய தேசியக் கட்சி இந்த முயற்சிக்கு இறுதிவரை ஒத்துழைப்பு வழங்கியது. சிறிலங்கா சுதந்திரக் கட்சிதான் இடையில் குழப்பியடித்தது. இப்படியொரு குற்றச்சாட்டு கூட்டமைப்பால் முன்வைக்கப்படுகின்றதே?**

ப: புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான இடைக்கால அறிக்கை முன்வைக்கப்பட்டபோது, சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது நிலைப்பாட்டைச் சமர்ப்பித்தது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி சமர்ப்பிக்கவில்லை. அவர்கள் இடைக்கால அறிக்கைதான் தமது நிலைப்பாடு என்று கூறினர். ஒரு தேசியக் கட்சி புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் இடைக்கால அறிக்கைக்கு தனது நிலைப்பாட்டை ஏன் தெரிவிக்காமல் விடவேண்டும். இந்த முயற்சி நிறைவேறாது என்று அவர்களுக்குத் தெரிந்தமையால்தான், தமது நிலைப்பாட்டை முன்வைக்கவில்லை.

**கே: ஆனால், 52 நாள் ஆட்சி மாற்றக் குழப்பத்தின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசு அமைந்த பின்னர் புதிய அரசமைப்புக்கான இறுதி வரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட் டதே?**

ப: 52 நாள் குழப்பத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஒருவகையில் காரணம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு புதிய அரசமைப்பு உருவாக்கம் முக்கியமாக இருந்திருந்தால், 52 நாள் குழப்பத்தின்போது அவர்கள் நடுநிலைமை வகித்திருக்கலாம். புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை என்றபோது, இரண்டு கட்சிகளுடனும் பேச்சு நடத்த வேண்டியிருக்கும். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தே கூட்டமைப்பினர் செயற்பட்டார்கள்.

**கே: இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நோக்கம் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இருந்திருந்தால், அவர்கள் ஒத்துழைத்திருக்கலாம்தானே?**

ப: யாருக்கு நோக்கம் அதிகம் இருந்திருக்க வேண்டும்? எங்களுடைய பிரதிநிதிகளுக்குத்தான் நோக்கம் அதிகம் இருந்திருக்கவேண்டும். எங்கள் பிரதிநிதிகளின் தவறால்தான் புதிய அரசமைப்பு முயற்சி கைகூடாமல் போனது.

**கே: ஐ.நா. மனித உரிமைகள் சபையிலிருந்து விலகும் தீர்மானத்தை, நீங்கள் ஆதரவு வழங்குகின்ற அரசு எடுத்துள்ளது. அப்படியானால், போரினால் பாதிக்கப்பட்ட, போர்குற்றங்கள் மற்றும் மனிதாபிமான சட்டமீறல்களுக்கு உட்பட்ட தமிழர்களுக்கான பரிகாரம் – நீதி என்ன?**

ப: தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் எனக்கு மறுப்புக் கிடையாது. ஆனால் அதற்கான பேச்சு, சம்பந்தப்பட்ட தரப்பினருடனானதாக இருக்கவேண்டும். வீட்டுக்குள் கணவன், மனைவி சண்டையிட்டால் வெளி நபரையா அழைத்து பிரச்சினையைத் தீர்க்கச் சொல்வோம்? நல்லாட்சி அரசில் இணைந்திருந்தபோது ஐ.நாவுக்குச் சென்று நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு நாங்கள் அவகாசம் கொடுத்திருந்தோம். ஆனால் எந்த விதத்திலும் அதனைச் செய்ய முடியவில்லையே? இந்த நல்லாட்சியைக் கொண்டு வந்தது யார்? சர்வதேசம்தான் என்று எல்லோருக்கும் தெரியும். அப்படி அவர்கள் கொண்டு வந்த அரசை வைத்து, நான்கரை ஆண்டுகளில் தமிழர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுத்திருக்க முடியாதா?

நான்கரை வருடங்களில் ஐ.நா. ஊடாக நீதியைப் பெற்றுத் தராதவர்கள், இனியும் ஐ.நா. நீதியைப் பெற்றுத் தரும் என்று சொல்வது பொய்யான அரசியல். 2009ஆம் ஆண்டிலிருந்து ஐ.நாவை வைத்துத்தான் படம் காட்டிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த ஐ.நாவால் தமிழ் மக்களுக்கு ஏதாவது ஒரு விடயத்தைப் பெற்றுத் தர முடிந்ததா? ஐ.நாவில் இருப்பதாலேயோ அல்லது விலகுவதாலேயோ தமிழ் மக்களுக்கு கிடைத்ததுதான் என்ன?

இதற்கான பரிகாரம், சம்பந்தப்பட்ட தரப்புடன் உள்நாட்டுக்குள்ளேயே பேசி, அதற்கான நீதியைப் பற வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்தி இதற்கு எப்படித் தீர்வை எட்ட முயற்சித்தார்களோ அதையேதான் இந்த அரசுடனும் செய்யவேண்டும்.

**கே: நீங்கள் கூட்டமைப்பு ஒரு தரப்புடன் (ஐக்கிய தேசியக் கட்சி) மாத்திரம் பேசியது. மற்றைய தரப்புடன் பேசவே இல்லை என்று கூறுகின்றீர்கள். கோத்தாபய ஜனாதிபதியாகப் பதவியேற்றதும், அவருடன் பேச்சு நடத்தத் தயார் என்று கூட்டமைப்பு அறிவித்ததே? சாதகமான சமிக்ஞை அரசிடமிருந்து கிடைக்கவில்லையே. போர்க்குற்றமே நடக்கவில்லை, மனித உரிமை மீறலே இடம்பெறவில்லை என்று சொல்லும் தரப்புடன் எப்படிப் பேசுவது?**

ப: போர்க்குற்றம் நடக்கவில்லை என்று கோத்தாபய அரசு மட்டுமா சொல்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சி அரசிலிருந்து ஒருவரும் சொல்லவில்லையா?

**கே: ஐக்கிய தேசியக் கட்சி அரசில் யாராவது அப்படிச் சொல்லியிருந்தாலும், விசாரணை நடத்துவதற்கு அவர்கள் இணங்கியிருந்தார்களே?**

ப: நடக்காது என்ற விடயத்துக்கு யாரும் ஆதரவு கொடுக்கலாம். நான்கரை வருடத்தில், புதிய அரசமைப்பு உருவாக்கம் நடக்காது என்று தெரிந்துதான் ஐக்கிய தேசியக் கட்சி தனது நிலைப் பாட்டைக் தெரிவிக்கவில்லை. ஒன்றுமே நடக்காத விடயத்துக்கு ஐ.நாவில் வைத்துப் படத்தைக் காட்டி தமிழ் மக்களை ஏமாற்றும் நாடகத்துக்கு தமிழ் மக்கள் பிரதிநிதிகளே துணைபோயிருக்கின்றார்கள்.

**கே: ஜனாதிபதித் தேர்தல் முடிந்து 100 நாள்கள் கடந்து விட்டன. கோத்தாபய ஜனாதிபதித் தேர்தலில் வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக தமிழ் அரசியல் கைதிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லையே?**

ப: அரசியல் கைதிகள் விடுதலை கண்டிப்பாக நடக்கும். நான்கரை ஆண்டுகளுக்குள் நடக்காதது, நூறு நாள்களுக்குள் நடக்கவில்லையே என்று குற்றம் சுமத்த முடியாது. அரசியல் கைதிகளின் விடுதலைக்கென ஒரு பொறிமுறை உருவாக்கப்பட்டதன் பின்னரே அவர்களை விடுவிக்கக்கூடியதாக இருக்கும். இந்த விடயத்தில் ஜனாதிபதி கோத்தாபய மற்றும் பிரதமர் மஹிந்த இருவரும் உறுதியாக இருக்கின்றார்கள். இரண்டு மாதங்களுக்குள் அது செய்ய முடியும் என்பது பொய்யான விடயம். அதனால்தான் தேர்தல் அறிக்கையில், தமிழ் அரசியல் கைதிகள் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்ற கால வரம்பை தெரிவிக்கவில்லை. நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பின்னர் தமிழ் அரசியல் கைதிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுவார்கள்.

**கே: தமிழர்களுக்கு அபிவிருத்தி போதும். அரசியல் தீர்வு தேவையில்லை என்றே ஜனாதிபதி கூறிவருகின்றாரே?**

ப: வடக்கு- கிழக்குக்கு நீண்ட காலப் பிரச்சினைகள் பல இருக்கின்றன. பேச்சு ஊடாக அவற்றுக்குத் தீர்வு எட்டப்பட வேண்டும். அதற்கு முன்னர் முழுமையாக சமமான அபிவிருத்தி கிடைக்காமை யால், பல விடயங்களை நாங்கள் எங்கள் உரிமைப் பிரச்சினையாகவும் யோசிக்கின்றோம். அபிவிருத்தி என்பது கம்பரெலிய அல்ல. கம்பரெலிய என்பது தமிழ் மக்களுக்கும் ,தமிழர்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கும் கொடுக்கப்பட்ட ஆறுதல் பரிசு. கம்பரெலிய, வாக்கை வாங்கும் விடயமாக இருக்கின்றதே தவிர நிலைபேறான அபிவிருத்தி அங்கு இல்லை.

**கே: கோத்தாபயவும், மஹிந்தவும் பெரும்பான்மை சிங்கள மக்கள் விரும்பாத தீர்வை, தமிழர்களுக்கு வழங்க மாட்டோம் என்று சொல்கின்றார்கள். பெரும்பான்மை மக்களின் விருப்பில்தான் எங்களின் உரிமை தங்கியிருக்கின்றதா?**

ப: நாங்கள் ஒரு கோடு கீறும்போது எண்ணிக்கையில் அதிகமாக இருப்பவர்கள் அதைவிடப் பெரிய கோடு கீறத்தான் செய்வார்கள். நாங்கள் அவர்களுடன் இணக்கம் தெரிவித்துதான் ஒரு பேச்சுக்குச் செல்ல முடியும்.

**கே: கம்பரெலிய ஆறுதல் பரிசு என்றால் சப்ரிகம என்ன பரிசு?**

ப: சப்ரிகம என்பது சமமான உட்கட்டமைப்பு அபிவிருத்தி. நிலைபேறானஅபிவிருத்தி என்பது ஏ-9 வீதி நிர்மாணம், துறைமுகங்கள் அமைப்பு, ரயில் பாதைகள் அமைத்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம். சப்ரிகம வேலைத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்துக்கும் 50 லட்சம் ரூபா. 435 கிராமங்களுக்கும் ஒரேயளவு நிதி. முதல் கட்டமாக ஒவ்வொரு கிராமத்துக்கும் 20 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதுவும் நிலைபேறான அபிவிருத்தி இல்லை. சமமான கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி. இதனைவிட மிகப் பெரிய அபிவிருத்திகள் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

**கே: சப்ரிகம திட்டம் தொடர்பான சுற்றறிக்கைக்கு முரணாக நீங்கள் செயற்படுவதாக குற்றம் சுமத்தப்படுகின்றதே?**

ப: மக்கள் ஓரிடத்தில் கூடி தங்களுடைய தேவைப்பாடுகளை பட்டியலிடுவார்கள். அதனை மாவட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் அனுமதிக்க வேண்டும் என்றுதான் சுற்றறிக்கை கூறுகின்றது.

**கே: மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்ட அனுமதிதானே பெறப்பட வேண்டும் என்று சுற்றறிக்கை கூறுகின்றது?**

ப: இல்லை. மாவட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நான். ஆனால் கூட்டத்தின் பெயர் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம். நிரல் அமைச்சுக்களினதும், மாகாண சபைகளினதும் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கும் கூட்டம்தான் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம். ஒருங்கிணைப்புக் குழுவின் ஒப்புதல் என்றால் அதற்கு ஒப்பமிடுவது யார்? கடைசியாக நான்தான் கையெழுத்திட வேண்டும். அதைத்தான் நான் செய்தேன். பொருளாதாரத்தை முன்னேற்றக் கூடிய விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்குமாறு அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிராமங்களில் இருக்கும் மக்கள் பிரதிநிதிகள், ஒரு சில கட்சிகளைச் சார்ந்தவர்கள், அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோர் இணைந்து சொல்லும் போது மற்றவர்கள் கேட்கத்தான் வேண்டும். ஏனெனில் அதிகாரம் உள்ளவர் சொல்வதை மற்றவர்களும் ஏற்றுக் கொள்ளவேண்டும். பின்னர், மாவட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் என்ற அடிப்படையில் எனக்கு அறிவிக்கப்பட்டபோது அந்தப் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு நான் முன்னுரிமை கொடுத்தேன். கடந்த காலங்களில் அபிவிருத்தியே காணாத இடங்களுக்கு அபிவிருத்தியை முன்னெடுப்பதைவிடுத்து, அபிவிருத்தி முன்னெடுக்கப்பட்ட இடங்களுக்கே அபிவிருத்திகளை வழங்குவது நியாயமா?

பல கட்சிகளைச் சார்ந்தவர்கள்தான் இவ்வாறு குற்றம் சுமத்திக் கொண்டிருக்கின்றார்கள். மக்களும், பொது அமைப்புக்களும் எங்களுடன்தான் பேசுகின்றார்கள்.

எனக்கு மக்களிடமிருந்து பிரச்சினை வரவில்லை. கட்சி சார்ந்த பிரதேச சபை உறுப்பினர்கள்தான் பிரச்சினை எழுப்புகின்றனர். அதனைக் கட்சியின் தலைமைப் பீடத்தில் உள்ளவர்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். என்மீது எதிர்மறையான விம்பத்தை உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றார்கள்.

**கே: மாவட்டச் செயலகத்தில் மக்கள் சந்திப்பு நடத்தி வருகின்றீர்கள். மாவட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராகத்தான் அந்தச் சந்திப்பை நடத்தி வருகின்றீர்களா?**

ப: நிச்சயமாக. கட்சி வேறுபாடின்றி பல தரப்பினரும் பல்வேறு கோரிக்கைகளுடன் வருகின்றார்கள்.

**கே: மாவட்ட அபிவிருத்தி அதிகார சபை எப்படி இயங்கவேண்டும் என்பது தொடர்பில் ஏதாவது சுற்றறிக்கை இருக்கின்றதா?**

ப: அப்படியொரு சுற்றறிக்கையும் இல்லை.

**கே: அப்படியொரு சுற்றறிக்கையே இல்லாத நிலையில் மாவட்டச் செயலகத்தில் நீங்கள் எப்படி அலுவலகத்தை இயக்குவீர்கள்?**

ப: மாவட்ட அபிவிருத்தி அதிகார சபைக்கு அலுவலகம் வழங்கலாம் என்பது நடைமுறையில் உள்ளது. மற்றைய மாவட்டங்களில் அவ்வாறு அலுவலகம் வழங்கியுள்ளார்கள். யாழ்ப்பாணத்துக்கு ஆட்சி மாற்றத்தின் பின்னர் இரண்டு மாவட்டச் செயலர்கள் பதவி வகித்துள்ளனர். அவர்கள் இதனை அறியாமலா எனக்கு அலுவலகத்தை வழங்கியுள்ளார்கள்? அவர்கள் அரச பணியாளர்கள். அரசில் என்ன செய்யலாம் என்று சொல்லப்பட்டுள்ளதோ அதனைத்தான் அவர்கள் செய்கின்றார்கள்.

**கே: ஆளும் தரப்புச் சொல்வதைக் கேட்பவர்களாகத்தானே அரச அதிகாரிகள் இருக்கின்றார்கள்?**

ப: அப்படியில்லை. எந்தக் காலத்திலும் அப்படியில்லை. நேர்மையாகச் செயற்பட்டவர் என்றுதானே மாவட்டத்தின் முன்னாள் மாவட்டச் செயலர் வேதநாயகனை மதித்துள்ளோம். சட்ட ரீதியாக என்ன செய்ய முடியுமோ அதனைத்தான் அரச அதிகாரிகள் செய்கின்றனர். தங்களின் வேலைக்கு ஆபத்து வரக்கூடிய எந்தவொரு வேலையையும் அரச அதிகாரிகள் செய்வார்கள் என்று நினைக்கின்றீர்களா?

**கே: அரசியல் அழுத்தம் இருந்தால் செய்வார்கள்தானே?**

ப: அரசியல் அழுத்தம் இருந்தாலும், அப்படிச் செய்தால் அவர்களுக்குத்தானே பிரச்சினை.

(14ஆம் பக்கம் பார்க்க)

(12-13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது எப்.சி.ஐ.டி. உள்ளிட்ட பல விசாரணைகளுக்கு அரச அதிகாரிகள் முகம் கொடுத்தமை தெரியும்தானே. மாவட்ட அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் என்ற பதவியில் பிழையான ஒருவர் இருந்து பிழையான வற்றைக் கேட்டால் எல்லாம் பிழையாகத்தான் போகும். நான் அப்படிப்பட்டவன் அல்ல. மக்கள் கோரிக்கைகளை அதிகாரிகளுக்கு வேண்டுகோளாக அனுப்பி வைத்துள்ளேனே தவிர, இதனைச் செய்யுங்கள், இப்படித்தான் செய்யுங்கள் என்று அவர்களுக்கு வலியுறுத்தவில்லை.

**கே: மாவட்ட, பிரதேச நிர்வாக விட யங்களில் உங்க ளின் தலையீடு அதிகமாக இருப்பதாக அரச அதி கா!ிகள் மட்டத்தில் பொதுவான கருத்து இருக்கின்றதே?**

ப: இப்படி இருக்கிறது என்று சொல்பவர்கள் யார்? நான் எனது வரையறைக்கு அப்பாற்பட்டு எதனையும் செய்யவில்லை. எந்தவொரு அரச அதிகாரியையும் அவரது மதிப்புக்குக் குறைவாக நான் நடத்தியதில்லை. அதிகாரம் வரும் போது அதனைப் பிழையாகச் செய்தவர்களை கடந்த காலத்தில் நான் கண்டுள்ளேன்.

**கே: யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் செயலர் நா.வேதநாயகனின் அரசியல் பழிவாங்கல் இடமாற்றத்தின் பின்னால், நீங்கள் இருப்பதாக பரவலான குற்றச்சாட்டு முன்வைக்கப் படு கின்றதே?**

ப: நானும் இதனைக் கேள்விப்பட்டுள்ளேன். என்மீது ஏன் இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்படு கின்றது என்பது தெரியவில்லை. சமூக ஊடகங்களிலும், கட்சிப் பத்திரிகைகளிலும் இந்தச் செய்தி வெளியிடப்பட்டது. எனது தலையீடு இதில் எங்கு இருந்தது? அரசல் புரசலாக, எனக்கு எதிராக எதிர்மறையான சிந்தனையை உருவாக்கவேண்டும் என்பது பலரின் நோக்கம். ஆளும் தரப்பிலும், எதிர் தரப்பிலும் இருக்கின்றனர். என்மீது அந்தப் பழியைப் போட்டுவிட்டு தாங்கள் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள். 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசு உருவானது. முதல் வேலையாக என்ன செய் தார்கள்? யாழ்ப்பாண மாவட்டச் செயலராக இருந்த சுந்தரம் அருமைநாயகத்தை இடமாற்றி, வேதநாயகனைக் கொண்டு வந்தார்கள். அரசின் கொள்கை வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துபவர்தான் மாவட்டச் செயலர். நல்லாட்சி அரசு வந்த பின்னர் எப்படி புதியதொரு மாவட்டச் செயலரைக் கொண்டு வந்தார்களோ அதனடிப்படையிலேயே தற்போது நடக்கின்ற மாவட்டச் செயலர் மாற்றங்களும். யாழ்ப்பாண மாவட்டத் துக்கு மாத்திரம் மாவட்டச் செயலர் மாற்றப்பட்டிருந்தால் என்னை மட்டும் குற்றம் சுமத்தலாம். ஆனால் மாற்றம் வடக்கின் 5 மாவட்டங்களிலும் நடக்கின்றது. வடக்கு அப்பாலும் நடக்கின்றது.

**கே: நீங்கள் சொல்வதன் அடிப்படையில், சுந்தரம் அருமைநாயகம் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக் குத்தான் மாற்றப்பட்டார். அவர் அங்கு அரசின் கொள்கையை நடைமுறைப்படுத்த தேவையில்லையா?**

ப: தேவை.

**கே: அப்படியென்றால் யாழ்ப்பாணத்தில் அரசின் கொள்கைளை நடைமுறைப்படுத்தமாட்டார் என்று அந்த மாவட்டத்திலிருந்து நீக்கப்படுபவரை ஏன் கிளிநொச்சிக்கு மாவட்டச் செயலராக நியமிக்க வேண் டும். அவரை மாவட்டச் செயலர் பதவியிலிருந்து அல்லவா நீக்கியிருக்கவேண் டும். ஆனால் அவர் இன்னொரு மாவட்டச் செயலராகத்தான் நியமிக்கப்பட் டாரே?**

ப: ஆம் இன்னொரு மாவட்டம் வழங்கப்பட்டது. வேதநாயகனுக்கும் இன்னொரு மாவட்டம் வழங்கப்பட மாட்டாது என்று சொல்லப்படவில்லையே?

**கே: அவர் அமைச்சுக்குத்தானே இடமாற்றப்பட்டார்?**

ப: அமைச்சுக்கு அழைக்கப்பட்டார். அவருக்கு வேறு ஒரு பதவி கிடைத்திருக்கும். 2009ஆம் ஆண்டு போர் முடிந்த பின்னர் அவர் அமைச்சிலிருந்துதான் மாவட்டச் செயலர் பதவிக்கு நியமிக்கப்பட்டி ருந்தார். இப்போதும் அப்படி நடந்திருக்கும். அவர் மீண்டும் மாவட்டச் செயலராகப் போகவேண்டியதில்லை. அவர் அமைச்சுச் செயலர் பதவி வரைக்கும் சென்றிருக்கலாம்.

**கே: 57 வயதுக்கு மேற்பட்ட அரச அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதில்லை என்ற பொதுவான கொள்கை நடைமுறை இருக்கும் போது, ஓய்வு பெறுவதற்கு இன்னமும் 3 மாதங்களே உள்ள நிலையில் வேதநாயகன் எப்படி இடமாற்றப்பட்டார்?**

ப: நல்லாட்சி அரசு கொண்டு வந்த சுயாதீன பொதுச் சேவை ஆணைக்குழு இருக்கின்றது. அவர்கள் பிழையானதொரு கொள்கைத் திட்டத்தை முன்னெடுத்தி ருப்பார்களா? இதனை நீங்கள் எவ்வளவுதான் பிழையென்று சொன்னாலும், எல்லாம் சட்ட நடைமுறைக்கு ஊடாகவே முன்னெடுக்கப்பட்டன. வேதநாயகனை மதிக்கின்றேன். மாவட்டச் செயலராக யாழ்ப்பாணத்துக்கு நல்ல சேவையைச் செய்துள்ளார். முன்னைய மாவட்டச் செயலர்களும் செய்துள்ளார்கள். இவர் யாழ்ப்பாணத்தவர் என்ற அடிப்படையில், கடந்த காலங்களில் மாவட்டத்துக்கு வந்த நிதி எதனையும் திருப்பி அனுப்பவில்லை. நல்ல பெயரை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வந்துள்ளார். உண்மையைச் சொன்னால், முன்னாள் மாவட்டச் செயலர் வேதநாயகன் எனது தாயின் ஊரான அளவெட்டியைச் சேர்ந்தவர். எனது உறவினர். அவருக்கு எதிராகச் செயற்பட வேண் டும் என்று நான் ஒருபோதும் சிந்தித்ததும் இல்லை. அப்படிச் செய்யவேண்டிய தேவையும் எனக்கு இல்லை.

**கே: கடந்த அரசின் அபிவிருத்தித் திட்டங்களுக்குரிய நிதிகள் ஒப்பந்தகாரர்களுக்கு இன்னமும் வழங்கப்படவில்லை. அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?**

ப: கடந்த அரசு பணம் இல்லாமல் அவசரமாகப் பணிகளை முடிக்கக் கூறியது. பணம் வழங்கப்படவில்லை. ஒப்பந்தகாரர்கள் பணியை முடித்து விட்டார் கள். புதிய அரசு நல்லாட்சியின் கடன்களை அடைக்க 367 பில்லியன் ரூபாவுக்கு அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்தது. அந்தக் கணக்கறிக்கை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இதனை தோற்கடிப்போம் என்ற மாயையை எதிர்க்கட்சி தோற்றுவித்திருந்தது. அரசுக்கு நாடாளுமன்றத்தில் பெரும் பான்மை இல்லாத சூழலில் அரசு அதனை மீளப் பெற்று விட்டது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதியிடம் நிதி அதிகாரம் செல்லும். நிதி அதிகாரத்தை வைத்து அவர் இந்தப் பிரச்சினை யைத் தீர்ப்பார் என்று நம்புகின்றேன்.

**கே: கணக்கறிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கவில்லையே. அந்தக் கணக்கறிக்கையில் கடன் பெறும் எல்லை அதிகரிக்கப்பட்டதைத்தானே எதிர்த்தார்கள்?**

ப:கடன் பெற்றுக் கொள்ளாமல் எப்படி பணத்தை வழங்குவது?

**கே: அரசிடம் பணம் இல்லையா?**

ப: இல்லை.

**கே: அப்படியானால் சப்ரிகம திட்டமும் பணமில்லாமல்தான் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா?**

ப: நிதிக் கொள்கை பிழையாக இருந்தபடியால்தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது. 2015 முன்னர் நல்ல நிலைமை இருந்தது. அதன் பின்னர்தான் நிதி நிலைமை சரியத் தொடங்கியது. புதிய அரசு வந்ததும், புதிய நிதிக் கொள்கை.பழைய கடனைத் தீர்க்க கடன் வாங்கத்தான் வேண்டும். கம்பரெலிய வேலைத் திட்டமும் வெளிநாட்டுக் கடனில் தான் நடைமுறைப்படுத்தப்பட்டது. சப்ரி கமவும் செய்யப்படுகின்றது. இனி என்ன வேலைத் திட்டமும் அவ்வாறுதான் செய்யப்படும். ஆனால் வருமானத்தைக் கூட்டும் வேலைத் திட்டங்கள் இனி நடைமுறைப்படுத்தப்படும்.



## திருக்கேதீஸ்வரத்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயத்தில் யார் பிழை? என்பதை விடவும் இந்த விவகாரத்தை எந்த நோக்குநிலையிலிருந்து அணுகவேண்டும் என்பதே முக்கியமானது. இந்த விவகாரத்தை தமிழ்த் தேசியநோக்கு நிலையிலிருந்தே அணுகவேண்டும். மேற்படி பத்திரிகை, கூட்டமைப்புக்கு எதிரான கருத்துக்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்த ஒரு பத்திரிகை. கூட்டமைப்புக்கு எதிரான குரல்களை அது ஒலிக்கச் செய்தது. குறிப்பாக விக்னேஸ்வரனின் எழுச்சி, தமிழ் மக்கள் பேரவையின் எழுச்சி என்பனவற்றுக்கு அந்தப் பத்திரிகை முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் தமிழ் மக்கள் பேரவையில் ஒரு பிரதானி. எல்லா எழுக தமிழ் ஆர்ப்பாட்டங்களின் போதும் அவரை முன்னணியில் காணலாம். தமிழ் மக்கள் பேரவையில் விக்னேஸ்வரனின்

முதன்மையை தொடர்ச்சியாக வலியுறுத்தும் ஒருவர் அவர். விக்னேஸ்வரன் தனது புதிய கூட்டை அண்மையில் அறிவித்தபொழுது அவரும் அங்கே இருந்தார். அந்தப் பத்திரிகை இந்து மதச்சாய்வுடன் செய்திகளை எழுதுவதாக ஓர் அவதானிப்பு உண்டு. சில ஆண்டுகளுக்கு முன்பு வடமாகாணசபையின் முஸ்லிம் உறுப்பினர் தொடர்பிலும் அந்தப் பத்திரிகை வெளியிட்ட செய்தி சர்ச்சையாகியது. குறிப்பாக மதவிவகாரங்களில் அப்பத்திரிகையின் நிலைப்பாடு இந்துமதத்துக்கு அதிகம் சாய்வோடிருப்பதாக ஏனைய மதப்பிரிவினரால் பார்க்கப்படுகிறது.

இது மாற்று அரசியலுக்கும் கூடாது. விக்னேஸ்வர னுக்கும் கூடாது. மதமுரண்பாடுகளை மதநோக்கு நிலையிலிருந்து அணுகாமல், ஆகக் கூடிய பட்சம் தமிழ்த் தேசியநோக்கு நிலையிலிருந்து அணுகினால் சில சமயங்களில் அகத்தணிக்கையும், சில சமயங்களில் மதப் பொறையும் தேவைப்படலாம். தமிழ்த் தேசியப் பரப்பில் இந்துக்களே அதிகம். எனவே இந்துக்கள் தாம் பெரும்பான்மை மதப் பிரிவினர் என்ற அடிப்படையில் ஏனைய சிறுபான்மை மதப்பிரிவினரைச் சமமாகப் பார்க்கவேண்டும். அதாவது தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலிருந்து மதப் பிணக்கு களை அணுக வேண்டும். அதுதான் தமிழ் மக்களை ஒரு பெரும் திரளாகத் திரட்டும். இல்லையென்றால் மதத்தின் பெயரால் தமிழ் மக்களை அது பிரித்து விடும்.

இது விடயத்தில் தமிழர்களுக்கென்று ஒரு செழிப்பான பாரம்பரியம் உண்டு. இலங்கைத் தீவில் முதலில் தோன்றிய இளையோர் இயக்கமாகிய ஜப்னாயூத் கொங்கிரஸ் யாழ்ப்பாணத்தில் தான் தோன்றியது. அந்த அமைப்பை ஒருங்கிணைத்தவர் ஒரு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவரான ஹண்டி பேரின்பநாயகம். அவருக்குப்பின் தமிழ் மக்களின் சாத்வீகப் போராட்டங்கள் என்று அழைக்கப்பட்ட வன்முறையற்ற போராட்டங்களை முன்னெடுத்தவர் எஸ். ஜே.வி.செல்வநாயகம். அவர் ஒரு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர். அதிகம் இந்துக்களை கொண்ட ஒரு சமூகம் ஒரு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவரைத் தந்தை என்று அழைத்தது. காந்தி என்றும் அழைத்தது. இது காரணமாகவே தனது இறுதிக் காலகட்டத்தில் தந்தை செல்வா தனது பூதவுடலை இந்துமுறைப்படி வேட்டி அணிவித்துத் தகனம் செய்யுமாறு இறுதி விருப்பம் தெரிவித்திருந்தார். அதாவது தமிழர்கள் மதம் பார்த்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கவில்லை. அதுமட்டுமல்ல கடந்த வருடம் குண்டு வெடிப்பில் அதிகம் பாதிக்கப்பட்டது தமிழ்க் கிறீஸ்தவர்களே. ஆனால் அதற்காக குறிப்பாக மட்டக்களப்பில் தமிழ் மக்கள் முஸ்லிம்களுக்கு எதிராக ரத்தம் சிந்தும் பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடவேயில்லை. ஈஸ்டர் குண்டுவெடிப்பிற்குப் பின் ஒப்பீட்டளவில் தமிழ்ப் பகுதிகள்தான் முஸ்லீம் மக்களுக்கு அதிகம் பாதுகாப்பானவைகளாகக் காணப்பட்டன என்றும் கூறலாம். இப்படிப்பட்டதோர் மிகச் செழிப்பான மதப் பல்வகைமைப் பாரம்பரியத்தைக் கொண்ட ஒருமக்கள் கூட்டம் அண்மைக் காலங்களில் மதமுரண்பாடுகளால் பிளவுபடும் ஒரு நிலைமை மேலும் வளரக்கூடாது.

இப்படிப்பட்ட முரண்பாடுகளைத் தமிழ்த் தேசியநோக்கு நிலையிலிருந்து அணுகிக் கையாண்டு தீர்க்கத்தக்க முதிர்ச்சியை , பக்குவத்தை, ஏற்புடைமையை ஜனவசியத்தை தமிழ் கட்சிகளின் தலைவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் பேரவை போன்ற மக்கள் இயக்கங்கள் அப்படி ஒரு வளர்ச்சியை அடையவேண்டும். இல்லையென்றால் சாதியின் பேராலும் சமயத்தின் பேராலும் பிரதேசவாதத்தின் பெயராலும் தமிழ் மக்கள் பிரிக்கப்பட்டு விடுவார்கள்.

○ தில்லைநாதன் கோபிநாத்


# இந்துக் கல்லூரியின் தோற்றத்துக்குக் காரணம்

## சைவமா? தமிழர் தேசியமா?

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நிறுவுனராகச் சிதம்பரப்பிள்ளை 1910இல் தெளிவாகக் குறிப்பிடப்படுகின்ற போதும் அதன் முன்னரும் பின்னரும் நாகலிங்கத்தையே பாடசாலையின் நிறுவுனராகக் குறிப்பிடுவது பெருவழக்காக உள்ளது. இதற்கு முக்கிய காரணங்கள் நாகலிங்கம் பாடசாலையைச் சைவ பரிபாலன சபையிடம் ஒப்படைத்தார் என்பதுவும் சைவ பரிபாலன சபை தொடங்கியோரில் நாகலிங்கம் முக்கியமானவர் என்பதுவும் ஆகும்.



நாகலிங்கத்தின் மறைவின் பிறகு "இந்தக் கல்வியகத்தின் நிறுவுநரும், முதலாவது முகாமையாளருமான அப்புக்காத்து சின்னத்தம்பி நாகலிங்கம் நினைவாக" எனும் வசனம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முதலாவது கட்டிடமான பிரார்த்தனை மண்டபத்தில் பொறிக்கப்பட்டு இப்பொழுதும் காணப்படுகிறது.




நாகலிங்கம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை எந்த நோக்கங்களுக்காக வளர்த்தெடுக்க முயன்றார் என அறிவதற்கு நாம் நாகலிங்கத்தின் வாழ்வும் பணிகளும் தொடர்பாக ஆராய வேண்டும்.

வரலாற்றுப் படை 5

நாகலிங்கம் 1855 ஒக்ரோபரில் பிறவுண் சின்னத்தம்பி என அறியப்படும் அம்பிகைபாகர் சின்னத்தம்பியின் மூன்றாவது மகனாகப் பிறந்தார். பிறவுண் சின்னத்தம்பி யாழ்ப்பாணத்தில் அரச சட்டத்தரணியாக இருந்தவர். அதற்கு முன்னர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முதலாவது உள்ளூர் தலைமை ஆசிரியரார்கவும் இருந்தவர். இவரது பெயராலேயே யாழ்ப்பாண பிறவுண் வீதி இப்பொழுதும் அழைக்கப்படுகிறது.

நாகலிங்கம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி கற்றார். அக்காலத்தில் மத்திய கல்லூரியின் தலைமை ஆசிரியராக இருந்த. சிதம்பரப்பிள்ளை இருந்தார். 1868இல் மெற்றிக்குலேசன் சோதனையில் முதல் வகுப்பில் தேறிய நாகலிங்கம் கணிதத்துக்கான பரிசையும் பெற்றார்.

அதன் பின்னர் இந்தியாவின் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பினைப் பெற நாகலிங்கம் அனுப்பப்பட்டார். அக்காலத்தில் இந்தியாவில் தேசிய எழுச்சி தொடங்கியிருந்தது. இந்திய தேசிய காங்கிரசின் ஆரம்பச் செயற்பாட்டாளர்களில் ஒருவரான சுரேந்திரநாத் பனர்ஜீயின் செயற்பாடுகளால் நாகலிங்கம் கவரப்பட்டார். இந்தியத் தேசிய எழுச்சிச் செயற்பாடுகளில் ஈடுபடலானார். இந்தச் செய்திகள் பிறவுண் சின்னத்தம்பியை வந்தடைந்தன. நாகலிங்கத்தின் இந்தியக் கல்வி இடைநிறுத்தப்பட்டு அவர் மீண்டும் இலங்கைக்கு அழைக்கப்பட்டார். கொழும்புக்கு அனுப்பப்பட்டுச் சட்டக் கல்லூரியில் சேர்க்கப்பட்டார். சட்டம் கற்றுச் சட்டத்தரணி ஆனார்.

யாழ்ப்பாணத்தில் குற்றவியல் சட்டத்தரணியாகப் பணியாற்றிய நாகலிங்கம் பல்வேறு சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டார். குறிப்பாக ஆங்கிலேய அரச அதிகாரிகளுக்கு எதிரான பல்வேறு செயற்பாடுகளை அவர் முன்னெடுத்தார். 1884ஆம் ஆண்டு முதல் அரச அதிபருக்கு எதிராகப் பல்வேறு வழிகளில் செயற்பட்டார்.

யாழ்ப்பாண வைத்தியசாலைக்குத் தகுதியான வைத்தியரை நியமிப்பதற்கான முயற்சிகள், யாழ்ப்பாணத்துக்குப் புகைவண்டியைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள், விக்ரோறியா வாசிகசாலை எனும் நூலகமும், அதனுடன் இணைந்த கூட்டங்களும் எனப் பல்வேறு சமூகச் செயற்பாடுகளில் நாகலிங்கம் ஈடுபட்டார். இடையில் இந்திய தேசிய காங்கிரசின் கூட்டங்களுக்கும் இந்தியா சென்று வந்தார்.

சைவ பரிபாலன சபையின் தோற்றத்திலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சைவ சமயத்தினைக் குறிப்பிட்டுச் செயற்படத் தொடங்கியதிலும் நாகலிங்கத்துக்கு முக்கிய பங்கு இருந்தது உண்மையே. ஆனால் நாகலிங்கத்தின் ஈடுபாடு சைவ சமயத்தின் அடிப்படையிலானதாக மட்டும் இருக்கவில்லை. பல கிறித்தவச் செயற்பாடுகளுக்கும் அவர் பங்களித்தார். நாகலிங்கத்தின் மனைவி றொக்வூட் குடும்பத்தைச் சேர்ந்த கிறித்தவரான அமெலியா பொன்னம்மா என்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டும். இதனைக் குறிப்பிட்டுச் சமயக் காழ்ப்புணர்வுடன் எழுதப்பட்ட சில கட்டுரைகள் உள்ளன. அந்தச் சமயக் காழ்ப்புணர்வில் தம்மை அறியாமல் நாகலிங்கம் சமயத்தை முன்னிலைப்படுத்தி இந்துக் கல்லூரிக்குப் பங்களிக்கவில்லை என்ற உண்மையையும் பதிவுசெய்துவிட்டனர்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி தேசிய எழுச்சிகளின் வழி வந்ததாகவே நாகலிங்கத்தின் செயற்பாடுகள் அமைந்தன. கல்வி கற்பதற்காக மதம் மாறுவது போன்ற நிலைமைகளை மாற்றியமைக்க அவர் உழைத்தமை, தமிழர்தம் தேசியம் சார்ந்து நின்றமையினால் ஆகும். மத வேறுபாடுகள் அவருக்கு முக்கியமானவையாக இருக்கவில்லை.

நாகலிங்கத்தின் மறைவின் பின்னர் அவரைப் பற்றி எழுதப்பட்ட குறிப்புக்கள் இதனை வலியுறுத்துவதாக அமைகின்றன. 1896-1897 ஆம் ஆண்டுக்குரிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அறிக்கை நாகலிங்கம் ஒரு தேசியக் கல்லூரிக்கான யோசனையைக் கொண்டிருந்தார் என்றும், யாழ்ப்பாணத்தின் தமிழ்ச் சமுதாயத்தின் தேவைகளுக்கேற்ப ஒரு தேசியக் கல்வி முறைமையை உருவாக்க உழைத்தார் என்றும் குறிப்பிடுகிறது. "நாகலிங்கத்தின் இழப்பு ஒரு தேசிய இழப்பு" என்றும் "தமிழர்கள் ஒரு தேசாபிமானியை இழந்து விட்டனர்" என்றும், குறித்த அறிக்கை மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறது. தமிழரையும் தேசியத்தையும் வலியுறுத்தியே நாகலிங்கம் செயற்பட்டார் என்பது இதன் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

நாகலிங்கத்தின் மறைவின் பின்னர் 1897.09.11 ஆம் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் நாகலிங்கத்தின் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி "எவ்வித சாதி, சமய வேறுபாடுகளும் இன்றி அனைத்துத் தமிழரும் பெருமை கொள்ள வேண்டிய நிறுவனம்" என்றும் "சைவச் சமூகத்தின் கல்வித் தேவைகளை நிறைவு செய்வதாக அமைந்தாலும் எவ்வித குறுங்குழுவாத அடிப்படையிலும் இயங்கவில்லை" என்றும் குறிப்பிடப்படுவது முக்கியமானது.

வெறுமனே சைவத்தை முன்னிறுத்தி அல்லாமல் தமிழர் தம் தேசியக் கல்லூரியாகவே யாழ் இந்துக் கல்லூரி முன்னெடுக்கப்பட்டமையை இக் கூற்றுக்கள் உறுதிப்படுத்துகின்றன.

## அவளுக்கான இரண்டாம் சிலுவை....

அவள் நடுநிசி
நாய்களைப் போன்று
கூரிய பற்களுடையவள்

அழுக்கு மேனியும்
துர்நாற்றங்களும்
எந்நேரமும்
விசிறிக்கொண்டிருக்கும்
விகாரக்காரியும் கூட

அவள் பிடறியெங்கும்
சொறிச் சிரங்குகளும்

கொல்லிப் பேன்களும்
உதிரங்களை
உறிஞ்சிக்கொள்ளும்

நாட்டியமே தோற்றுப்போய்
அறுந்து விழும் அளவிற்கு
அவள் நடையும் உடையும்
ஏர் பூட்டி நாடகமாடும்

அவளின் பாதப்
பித்தவெடிப்பெங்கும்
ஊனம் வடிந்து
உருகி ஒழுகிக்கொண்டிருக்கும்

கிழிபட்ட தசைக்குள்ளும்
ஆசைகள் அத்தனையும்
கக்கிப் பிழிந்து கசக்கி
எழுதும் பைத்தியக்காரி

தலையை விரித்து
உதட்டைக் கடித்து
விழியை சுருட்டி
இமையால் செருகி

வசியம் செய்திழுத்து
பாடையில் ஏற்றி உலா வரும்
அடங்காப்பிடாரியின் தோற்றம்

ஆசைகளை
அடக்கத்தெரியாதபடி
அவிழ்த்து விட்ட காளை
அமிர்தத்தை
முடக்கத்தெரியாதபடி
கொட்டித் தீர்க்கும் சாலை

போதும் உனக்கான
என் வர்ணிப்பு
என் கனவில் இடைபடாதே
நீ அந்நியக்காரி!

- வன்னியூர் கிறுக்கன்



6

# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி

## கவனத்துடன் அணுக வேண்டியது காலக் கடமை

இந்தக் கட்டுரைத் தொடர் உயர்தரத்துக்குப் பின்னரான உயர்கல்வி தொடர்பில் சில அடிப்படையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் வாராந்தம் வெளி வருகின்றது. எமது பிரதேச இளையவர்களைப் பொருத்தமான தடத்தில் வழிப்படுத்துவதற்கான சிந்தனைக் கிளறல்களைப் பல மட்டங்களிலும் ஏற்படுத்துவதே இந்தக் கட்டுரையாளரின் நோக்கமாகும்.



இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்,கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

உலகின் போக்குக்கு ஏற்பவும், தொழில் சந்தையின் நிலவரங்களுக்கு ஏற்பவும், உயர்கல்வித் துறையைத் தெரிவு செய்ய வேண்டியது அவசியமானது. நான்கு வருடங்கள் பட்டக்கற்கையை நிறைவு செய்துவிட்டு, முதல் வகுப்பு சித்தியுடன் பட்டத்தைப் பெற்று விட்டு, நிரந்தர வேலையொன்றைப் பெறுவதற்காகப் பல ஆண்டுகள் காத்திருக்கும் பல பட்டதாரிகள் எமது பிரதேசத்தில் உள்ளனர். அரசிடம் வேலைவாய்ப்புக் கேட்டு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் உணவொறுப்புப் போராட்டங்கள் என பல நாள்களாக பட்டதாரிகள் நடத்திய போராட்டங்கள் குறித்து, நிறைந்த அனுபவத்தரிசிப்பு நமது சமூகத்தவரிடம் நிறைய உண்டு.

பட்டதாரிகள் நடத்தும் வேலை தேடும் போராட்டம் என சமூக மட்டத்தில் அறியப்பட்ட இந்தப் போராட்டங்களினால், பட்டக் கல்வி குறித்த பிழையானதொரு விம்பமும் எமது சமூகத்தில் உருவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் கலைத்துறை மாணவர்களை, வேலைதேடும் பட்டதாரிகளின் போராட்டத்தைக் காரணம் காட்டி கல்வியியல் கல்லூரிக்ளை நோக்கி வழிப்படுத்தும் நிலையும் எமது பிரதேசத்தில் உண்டு. இது ஆரோக்கியமான ஒரு சமூகக் கட்டமைப்புக்கு ஆபத்தானது. காரணம் கல்வியியல் கல்லூரிகளை நோக்கி வழிநடத்தப்படும் அத்தகைய மாணவர்கள், ஆசிரியத் தொழிலுக்குள்ளேயே தம்மை வலிந்து உட்செலுத்த வேண்டியவர்களாகவுள்ளனர். அவர்களுள் சிலர் தனிப்பட்ட இயல்புகள் சார்ந்து, ஆசிரியத் தொழிலுக்குப் பொருத்தமற்றவர்களாகவும் இருக்கலாம். அதேவேளை திறமையான மாணவர்கள் பட்டதாரித் தகமையற்று ஆசிரியத் தொர்ழில் எனும் வகுதிக்குள் மாட்டிக் கொள்வதனால், அந்தத் தொழிலில் நீடிக்க வேண்டியவர்களாகவும் காலம் பிந்திய நிலையில் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைகளின் மூலம் உயர் பதவிகளுக்குச் செல்ல வேண்டியவர்களாகவும் உள்ள நிலைமையும் பாதகமானதே. திறமைமிக்க மாணவர்கள் எவ்வளவு காலச் சீக்கிரமத்தில் பட்டத் தகைமையைப் பெற்றுக்கொள்ள முடியுமோ, அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் வழியாக பல்வேறு உயர் பதவிநிலைப்பட்ட வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள அவர்களுக்கு வாய்ப்புண்டு. வளர்ச்சியடைந்த மற்றும் எமது பிராந்தியத்தின் வளர்முக நாடுகள் சிலவற்றுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் ஒருவர் பட்டக் கல்வியை நிறைவு செய்யும் வயதெல்லை அதிகமாகவேயுள்ளது. இந்த நிலையினை மாற்றியமைக்க பல்வேறு கொள்கை வகுப்புக்களை காலத்துக்கு காலம் ஆட்சியிலுள்ள அரசாங்கங்கள் மேற்கொண்டு வந்த போதிலும், வினைத்திறன் மிக்க பொறிமுறையொன்று இதுவரை தாபிக்கப்படவில்லை. அண்மித்த எதிர்காலத்திலும் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் இல்லை.

இந்த நிலையில், பட்டத் தகைமையொன்றைப் பெற்றுக் கொள்ள வாய்ப் புள்ள பல மாணவர்கள் அதனை மறுதலித்து, பட்டத் தகைமைக்கு கீழான உயர்கல்வி வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதும்; அந்த வாய்ப்புக்கள் பட்டத்தைவிட சிறப்பா னவையெனக் கருதுவதும், ஆரோக்கியமானதொரு சமூகத்துக்கு ஏற்புடையதல்ல. விரைவில் நிரந்தர அரச வேலைகிடைக்கும் எனும் ஒற்றைக் காரணத்தை நம்பி திசை திரும்பும் பலர், தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த பின்னர் சலிப்படைவதும், குறைந்த மாத ஊதியத்தை பின்னணியாகக் கொண்ட பொருளாதார நிலமைகளி னால் குறித்த தொழில் துறையிலிருந்து விலக விரும்பினாலும் விலக முடியாத சூழ்நிலைக் கைதிகளாக அவதிப்படுவதும், பரவலாக அவதானிக்கப்படும் சமூக யதார்த்த நிலையாகும்.

பட்டம் என்பது உயர்கல்விக்கான அத்திவாரம். அந்த அத்திவாரத்தின் மேலே அழகான கட்டடங்களை கட்டியெழுப்ப முடியும். பட்டக் கற்கையைத் தொடரும்போது சமாந்தரமாக தமது ஆற்றல் மற்றும் திறன்களைப் பல்வேறு துறைகளி லும், பல்வேறு மட்டநிலைகளில் வளர்த்துக் கொண்டவர்கள் பட்டமளிப்பு விழாவை நிறைவுசெய்ய முன்னரே தகுதியான பல வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதும் தொடருறு உயர்கல்வி வாய்ப்புக்களுக்கான புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொள்வதும் துறைசார் வேறுபாடின்றி எமது பிரதேசத்தில் நிகழும் முன்னுதாரணமான சம்பவங்கள் ஆகும்.

பட்டக்கற்கையை மறுதலித்து வேலைவாய்ப்பை மையப்படுத்தி நகர்ந்த ஒருவர், சில காலங்களின் பின்னர் தன்னோடு சமாந்தரமாக பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து பட்டத்தைப் பெற்றுக்கொண்டமையினால் உயர்பதவிநிலையை மிகச் சீக்கிரமாகப் பெற்றுக்கொண்ட தனது பாடசாலைச் சகபாடியின் கீழ் பணியாளராகப் பணிபுரியும் நிலையும் உண்டு. அரசாங்க பொது நிர்வாகக் கட்டமைப்புக்கள் தொடக்கம் வங்கிகள் வரை, இந்த நிலமையை நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

பட்டக்கல்வியைக் கற்பதற்கான வாய்ப்புள்ளவர்கள் அந்த வாய்ப்பைத் தவறாது பயன்படுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பாக கலைத்துறை மாணவர்கள் வெளிவாரியாகப் பட்டம் பெறலாம் எனும் சிந்தனையை மையப்படுத்தி உயர்தரச் சித்தியுடன் கிடைக்கும் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதும், பல்கலைக்கழக அனுமதியை மறுதலித்து கல்வியியல் கல்லூரி அனுமதிகளைப் பெறு வதுமான நிலமையை மாற்றவேண்டும்.

இதற்கான பிரதான பின்னணியாகவுள்ள வேலையற்ற பட்டதாரிகள் எனும் மாயவிம்பம் உடைக்கப்படவேண்டும். வேலையற்ற பட்டதாரிகளுக்குள் பலர் கலைத்துறைப் பட்டதாரிகளாக குறிப்பாக, அழகியல் துறைப் பட்டதாரிகளாக இருப்பதும் இந்த அச்சநிலை அகலப் பரவக் காரணமாகவிருக்கலாம். பட்டதாரிகள் வேலையற்றிருக்கும் நிலமைகளும் அவற்றுக்குப் பின்னான காரணங்களும் மிக நுணுக்கமாக அணுகப்படவேண்டியவை. அதனை ஆராய்வது இந்தக் கட்டுரைத் தொடரின் பிரதான நோக்கங்களுக்குள் அகப்படாது என்பதால், அதனைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது.

வேலைவாய்ப்புக்களை மட்டும் மையப்படுத்தியதாக ஒருவர் தனது உயர்கல்வி குறித்துச் சிந்திக்க முடியாது. காரணம், தொழில் உலகின் தேவை நாளுக்கு நாள் விரைவாக மாறிய வண்ணமுள்ளது. மாறும் தொழில் உலகுக்கு ஏற்ப தன்னைத் தகவமைக்கும் அடிப்படைத் தகமையைப் பெற்றுக்கொள்வதே பட்டக்கல்வியின் முதன்மை நோக்கு. இந்த அடிப்படையிலேயே கட்டுரையாளர் உயர்கல்விக்கான முதல் படியாகவும், முக்கிய படியாகவும், பட்டக்கல்வியை முதன்மைப்படுத் துகின்றார் என்பதை இந்தக் கட்டுரையின் பயனாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.


இந்த நிலையில், க.பொ.த உயர்தரத்தில் எத்தகைய் துறைகளைத் தெரிவுசெய்வதன் மூலமாக வேலைவாய்ப்புக் குறித்த அச்சத்தை நீக்கிக்கொள்வதுடன், உயர்கல்வி வாய்ப்புக்களையும் அதிகமாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது தொடர்பாக அடுத்த வாரம் சில ஆதாரபூர்வமான புள்ளி விபரங்க ளுடன் அணுகலாம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உயர்கல்விக்கான அத்திபாரம்

# பல்கலைக்கழக பட்டங்களே!



சமூக விழிப்புணர்வை மையப்படுத்தி எழுதப்படும் இந்தக் கட்டுரைத் தொடர் குறித்து கட்டுரையாளரின் சிந்தனைகளுடன் வேறு கல்வியிலாளர்கள் மற்றும் துறைசார் விற்பன்னர்களுக்கு உடன்பாடில்லாமலிருக்கலாம். ஒரு குறித்த துறைசார் கற்கையை முன்னிலைப்படுத்துவதும், இன்னொரு துறையை தரம் தாழ்த்துவதும் கட்டுரையாளரின் நோக்கம் கிடையாது. சமூக யதார்த்தங்களை மையப்படுத்தியும் தற்போது கிடைக்கப்பெறும் வாய்ப்புநிலைகளை மையப்படுத்தியுமே இந்தக் கட்டுரை அமைக்கப்படுகின்றது. கட்டுரையாளரின் கருத்துநிலைகளுக்கு முரணான கருத்துநிலைகொண்ட ஆற்றலாளர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.





பாகம் 6

# யாழ் .மாநகர சபையின் வரலாறு

ந.பரமேஸ்வரன்

**1922**.10.18 ஆம் திகதியன்று உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்கப்பட்டன. பதினைந்து பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர். முதலாம் வட்டாரத்திற்கு ஆர்.ஆர்.நல்லையா போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். இரண்டாம் வட்டாரத்துக்கு சட்டத்தரணி ஏ.ஜே.திசைவீரசிங்கம், ஜே.மனுவேல்பிள்ளை, ஏ.ஜி.தம்பிநாயகம் ஆகியோர் போட்டியிட்டனர். மனுவேல்பிள்ளையின் மனு ஒழுங்காகப் பூர்த்தி செய்யப்படவில்லை என திசைவீரசிங்கம் முறைப்பாடு செய்தார்.



முறைப்பாட்டை விசாரித்த அரசாங்க அதிபர், தகுதியான வாக்காளர்கள் இவர்களை ஆதரிக்கலாம் என்றார். திசைவீர சிங்கம் உறுப்பினராக தெரிவு செய்யப் பட்டார்.

புனித சம்பத்தரிசியார் கல்லூரி ஆசிரியர் டி.சவிரிமுத்து வட்டாரங்கள் பிரிக்கப்பட்டதில் பிழை உள்ளது என்றார்.

இரண்டாம் வட்டாரத்துக்குரிய தேர்தல் பரியோவான் கல்லூரியில் நடைபெற்றது. 1.11.1922 அன்று மூன்றாம் வட்டாரத்துக்கு வி.எம்.கனகரத்தினம், சி.ரி.சொலமன் ஆகியோர் போட்டியிட்டனர். தேர்தல் உள்ளூராட்சி சபை அலுவலகத்தில் நடைபெற்றது. வி.எம்.கனகரத்தினம் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். நான்காம் வட்டாரத்திற்கு Patriot பத்திரிகை ஆசிரியர் ஏ. கனகரத்தினம் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். ஐந்தாம் வட்டாரத்துக்குச் சோமசுந்தரம் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆறாம் வட்டாரத்துக்கு V.S.S. குமாரசாமி, சட்டத்தரணி S. கதிரேசு ஆகியோர் போட்டியிட்டனர். ஆறாம் வட்டாரத்திற்குரிய தேர்தல் சேணியதெரு சன்மார்க்க வித்தியாலயத்தில் நடைபெற்றது. V.S.S. குமாரசாமி உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். ஏழாம் வட்டாரத்திற்கு சட்டத்தரணி R. சிவகுருநாதர், சட்டத்தரணி இளையதம்பி ஆகியோர் போட்டியிட்டனர். 2.11.1922 அன்று யாழ் இந்துக்கல்லூரியில் ஏழாம் வட்டாரத்துக்குரிய தேர்தல் நடைபெற்றது.

R. சிவகுருநாதர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். எட்டாம் வட்டாரத்துக்கு A.M.M. அப்துல் காதர், சட்டத்தரணி K.அருளம்பலம் ஆகியோர் போட்டியிட்டனர். எட்டாம் வட்டாரத்துக்குரிய தேர்தல் சோனகத்தெரு மஸ்ரதின் மத்ரஸா பாடசாலையில் நடைபெற்றது. A.M.M. அப்துல்காதர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

**யாழ்ப்பாண உள்ளூராட்சி சபையில் அங்கத்தவர்களாக இருந்தவர்களின் புகைப்படங்களை வைத்திருப்போர் அவற்றை மின்னஞ்சல் மூலம் parames35@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தால் இந்த ஆவணம் பூரணமான ஒன்றாக அமையும்.**



# அன்பளிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படும்!

தொல்புரம் சி.கதிர்காமநாதன்

இந்த வருடம் நெல் நல்ல விளைச்சலைத் தந்துள்ளதாகக் கதை அடிபடுகின்றது. சந்தோஷமான விடயமே. அதேபோல அறுவடைகளும் அமோகம் தான். ஒரே கல்யாணம் தான் போங்கள். விதம்வித மான திருமண அழைப்பிதழ்கள் சிறிதும் பெரிதுமான வண்ண வடிவங்களில் பரவசப்படுத்தின. அவற்றின் அச்சடிப்பு விலையோ பல ரூபாய் பெறுமதியாகத் தான் இருக்கும். எல்லாமே பிரமாண்டம்தான். கல்யாண நாட்களைக் கலண்டரில் குறித்து வைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

முதலாம் திகதி, பிரான்பற்று
10ம் திகதி நீர்வேலி
20ம் திகதி கோப்பாய்

என்ன சொல்ல ,ஓட்டமோ ஓட்டம்.......!

எனது ஊரிலுள்ள கல்யாண மண்டபங்களில் இல்லாமல்எல்லாமேதொலைவிலுள்ள "பெரீய்ய......" மண்டபங்களில் தான் கல்யாணங்கள். எல்லாமே ஒன்றை ஒன்று முந்தும் வகையில் போட்டிபோட்டுக் கொண்டு இருந்தன. அதிமானோருக்குச் சொல்லிப் போட்டு, வீட்டில் வைத்துக் கொண்டாட முடியாது. ஆயிரம் பேரை எப்படிச் சமாளிப்பது? பந்தி போட்டு எப்படிப் பரிமாறுவது? கல்யாண மண்டபம் என்றால் பிரச்சினை இல்லை. நோட்டுக்களைக் கொடுத்தால் ஆரம்பம் முதல் இறுதி வரை எல்லாமே பூர்த்தியாகிவிடும்.

விதம்விதமான பந்தல்கள், மின்னிடும் விளக்குகள், அலங்கார வளைவுகள், வாகனங்கள் நிறுத்த விசாலமான இடம், சொகுசான இருக்கைகள், இதமான குளிர் காற்று , நாவுக்கு ருசியான உணவு வகைகள் (எல்லா விதமான நோயாளிகளும் நோய்களை உணவருந்தும் இடம் தானே. இரவு போய் இரண்டு சலரோகக் குளிசைகள் போடுவது அடுத்த விஷயம்).

காமெராக்கள், வீடியோ, தலைக்கு மேலே சுற்றித் திரியும் கமெரா...

சிலமணி நேரம் என்றாலும் எல்லாம் ஆனந்தமயமே.......!

ஆனாலும், இவ்வளவு பிரமாண்டம் இருந்தும் சில நேரம் நாம் கவனிப்பின்றி இருப்போம். கொஞ்சநேரம் வாசலில் சந்தனம், குங்குமம் கொடுத்து வரவேற்றுக் கொண்டு இருப்பவர்கள் இடையில் காணாமல் போய் கல்யாண மேடைக்கு ஓடிப் போய்விடுவார்கள். அவ்வேளை, நாமே போய்ச் சந்தனம் எடுத்துப் போட்டு இருக்கையைத் தேடிப்பிடித்து உட்காருவோம்.

மணமேடையில் பாதிப்பேருக்கு மேல் இடம்பிடித்து இருப்பார்கள். பல்வேறு வண்ணங்களில் அலங்கரித்துத் திரியும் பெண்கள் கூட்டம். இப்போது ஆண்களும், பெண்களும் இணைந்து வளர்ந்து விட்டார்களே. வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டையில் பார்த்த ஆண்கள் இப்போது காதில் கடுக்கனுடன் சரிகை வேட்டிக்கு நீலம், சிவப்பு, நாவல் என விதம் விதமான கலரில் மண்டபத்தைச் சுற்றி வருவார்கள். நாதஸ்வரக் கோஷ்டியோ.. அவர்களும் இளவட்டங்கள் தான். எல்லோரும் சிரித்து கண்ஜாடை செய்தபடி வாசித்துக் கொண்டு இருப்பார்கள்.

"ஒட்டகத்தைக் கட்டிக்கோ கெட்டியாக ஒட்டிக்கோ....
வட்ட வட்ட பொட்டுக்காரி....."

இந்த உடை அலங்காரப் போட்டியில் ஆணோ. பெண்ணோ, சாதாரணமாக உடுத்திக்கொண்டு நின்றால் மனதளவில் சங்கடப்படவேண்டியதுதான்.

அடுத்து, காரியங்கள் விரைவாக நடக்கின்றன. இதோ பெண் மணமேடைக்கு அழைத்து வரப்படுகிறாள். பெண்கள் கூட்டம் ஒரே நிறப் புடவையில், கையில் விளக்குகளுடன் அசைந்து அசைந்து வருகிறார்கள். அடுத்து வீடியோக்காரரின் ஆசைப்படி எல்லாமே நடக்கின்றன.



இதோ தாலி கட்டியாகிவிட்டது. பூந்திலட்டு தட்டில் வந்தாகிவிட்டது. தம்பதிகள் தோழன், தோழியுடன் மேடை விளிம்பில் வந்து மக்களுக்கு வணக்கத்துடன் நன்றி தெரிவிக்கிறார்கள். அடுத்து மண்டபத்தில் சலசப்பு. அன்பளிப்பு, ஆசீர்வாதம், உணவருந்துதல். நான் யோசித்து எழுவதற்குள் கூட்டம் வரிசையில் நின்றது. நான் விரைந்து ஒருவரோடு ஒட்டியபடி நின்றேன்.

கூட்டம் நகரவில்லை. இடையில் வரிசை கிளைகளாகி விட்டது. இடையில் ஆக்கள் செருகினார்கள். பெண்கள் கூட்டம் தனிக்கட்சி அமைத்தது. மாப்பிள்ளையின் அரச வேலை நண்பர்கள் அடுத்துக் குழுவாக நின்றார்கள். அடுத்து இன்னொரு கூட்டம் தயாராக இருந்தது. அது 'லயன்களும்', 'சமாதான நீதிவான்களும்' என யாரோ சொன்னார்கள். வரிசை மெல்ல மெல்ல நகர்ந்தது. மேடையில் படப்பிடிப்பும் வாழ்த்துமாலையும் நடக்க கூட்டம் தள்ளுமுள்ளுப்பட்டது.

"எல்லாம் நன்றாகத்தானே தொடங்கியது. இந்த விடயத்தில் புதிய "ஐடியா" பண்ணாமல் இருக்கிறார்கள். எவ்வளவு விடயங்களை மாற்றி மாற்றி அமைத்து விட்டோம். இந்தக் கதையின் முடிவை, இந்த அன்பளிப்புக் கொடுக்கும் முடிவுக்கு....... இலகுவான வழியைக் கண்டுபிடித்தால் என்ன?" என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

அப்போது ஒரு குரல்........!

"சொந்தபந்தங்களுக்கு ஓர் அறிவித்தல். மணமக்களை வாழ்த்தும் நிகழ்வில் இடநெருக்கடி ஏற்பட்டிருப்பதால் அனைவரும் இருக்கையில் இருக்க, மணமக்களே நேரில் வந்து ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். அன்பளிப்புகளையும் அவர்களிடம் வழங்கலாம்"

பார்த்தீங்களோ.........
செய்திட்டோமல்லோ.............!

# ஈழத்துக்குப் பெருமை சேர்த்த ஈழத்தின் முதற்புலவர்

# ஈழத்துப் பூதன் தேவனார்

ம.பா.மகாலிங்கசிவம்

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு, ஈழத்து பூதன்தேவனாருடன் தொடங்குகிறது. ஈழத்தில் வாழ்ந்த பூதன்தேவனார் என்ற புலவர் தமிழகத்திற்குச் சென்று மதுரையிலே தங்கியிருந்து செய்யுட்களை இயற்றினார். இதனால் இவர் ஈழத்து பூதன்தேவனார் என்றும் ,மதுரை ஈழத்து பூதன்தேவனார் என்றும் அழைக்கப்பட்டார். இவர் இயற்றிய பாடல்களாக அகநானூறு (88, 231, 307) குறுந்தொகை (189, 343, 360) ஆகிய நூல்களிலே மும்மூன்று பாடல்களும் நற்றிணையில் (366) ஒரு பாடலுமாக ஏழு பாடல்கள் இன்று கிடைக்கின்றன.

சங்க காலத்தோடு தொடங்குகின்ற தமிழக இலக்கிய வரலாற்றுக்குச் சமமாக, ஈழத்து இலக்கிய வரலாறும், அதே சங்க காலத்துடன் தொடங்கக்கூடிய பெருமையை ஏற்படுத்தித் தந்தவர் ஈழத்து பூதன்தேவனார். அவரது பாடல்களில் ஒன்றான அகநானூறு 88ஆவது பாடல் குறிஞ்சித் திணைக்குரிய பாடலாக அமைந்துள்ளது.

குறித்த பாடலானது தலைவியை சந்திப்பதற்காக இரவுப் பொழுதிலே வந்த தலைவன் புறப்படுவதற்காக வேலியின் மறுபுறத்திலே நிற்க, அவன் நிற்பதை அறியாதவள்போல தலைவிக்குத் தோழி கூறும் கூற்றாக உள்ளது. பாடல் இதுதான்;

முடைச்சுவற் களித்த மூரிச் செந்தினை
ஒன்குவணர்ப் பெருங்குரல் உணீஇய, பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லி பாடுஓர்த்துக் குறுகும்
புருவைப்பன்றி வருதிறம் நோக்கி,
கடுங்கைக் கானவன் கழுதுமிசைக் கொளீஇய
நெடுஞ்சுடர் விளக்கம் நோக்கி வந்து, நம்
நடுங்குதுயர் களைந்த நன்ன ராளன்
சென்றனன் கொல்லோ தானே குன்றத்து
இரும்புலி தொலைத்த பெருங்கை யானைக்
கவுள்மலிபு இழிதரும் காமர் கடாஅம்
இருஞ்சிறைத் தொழுதி ஆர்ப்ப, யாழ்செத்து,
இருங்கல் விடர் அலை அசுணம் ஓர்க்கும்
காம்புஅமல் இறும்பில் பாம்புபடத் துவன்றிக்
கொடுவிரல் உளியம் கெண்டும்
வடுஆழ் புற்றின வழக்குஅரு நெறியே?



காதல் வயப்பட்ட தலைவன், திருமணம் செய்யாது களவு ஒழுக்கத்திலேயே தலைவியோடு காலம் கடத்த நினைக்கிறான். அவனை திருமணத்திற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு மனம் நோகாமற் கூற வேண்டும்.

இத்தகைய சூழலில் தனது கருத்துக்களை மிகவும் நுட்பமாகக் கூறி தலைவனை நல்வழிப்படுத்தும் தோழியை இந்தப்பாடலில் ஈழத்து பூதன்தேவனார் காட்டுகின்றார்.

பாடலின் பொருள் இதுதான்,

காட்டு மரங்களை வெட்டி விழுத்தி எரித்து பயிர்ச்செய்கைக்காகத் தயாரிக்கப்பட்ட மேட்டுநிலத்திலே, தினைப்பயிர் செழித்து வளர்ந்துள்ளது. அந்தப் பயிரை உண்பதற்காகப் பன்றி வருகின்றது. அந்தப் பன்றி, பல்லி சொல்லும் சத்தத்தை கேட்டு அதன் பயன்களை ஆராய்ந்து பார்த்துவிட்டே வருகிறது. பன்றி வருவதை அறிந்துகொள்வதற்காகத் தினைப்புனம் காக்கும் வேடுவன் பரணின் மீது தீப்பந்தத்தை ஏற்றி வைத்திருக்கின்றான்.

அந்த ஒளியை அடையாளமாகக்கொண்டு வந்த நல்லவரான எமது தலைவர் எமது நடுக்கத்தைத் தரும் தனிமைத் துயரை நீக்கினார். பின்னர் அவர் திரும்பிச் சென்றுவிட்டார். மலையிலே வாழ்ந்த பெரிய புலியைக் கொன்ற ஆண் யானையானது, பெண் யானை மேல் கொண்ட ஆசையால் அதன் கன்னங்களில் இருந்து மதநீர் சொரிகின்றது. அந்த மதநீரில் மொய்த்த வண்டினங்கள் சிறகடிக்கும் ஓசை யாழிசை போலக் கேட்கிறது. அந்த ஓசையை மலைக்குகைகளிலுள்ள அசுணம் என்னும் பறவைகள் உற்றுக் கேட்கின்றன.

மூங்கில் நிறைந்த அந்த சிறிய காட்டில் கறையான் புற்றுகளுக்குள் பாம்புகள் இருக்கும். புற்றுகளிலுள்ள கறையானை உண்ணமுயலும் கரடிகள், புற்றிலுள்ள பாம்புகள் இறக்கும்படி தமது வளைந்த விரல்களால் புற்றினைத் தோண்டும். இத்தகைய அபாயம் நிறைந்த பாதைகளினூடாக எமது தலைவர் சென்றுவிட்டாரே! என ஈழத்துப் பூதந்தேவனாரின் பாடல் குறிப்பிடு கின்றது. தலைவன் வந்து தலைவியுடன் புணர்ச்சியில் ஈடுபட்டு விட்டுச் செல்லும் நிலையில் தலைவியின் மனநிலையை இரு வேறுபட்ட முரண்நிலைகளிற் பூதந்தேவனார் சித்தரிக்கின்றார். இதற்கு வெவ்வேறுபட்ட கருப்பொருள்கள் அவருக்குத் துணை செய்கின்றன.

செழித்து வளர்ந்ததினைக்கதிர்கள், அதனை உண்ண வரும் பன்றி, அதற்கு உதவும் பல்லி, பரணில் ஒளியுடன் காத்திருக்கும் வேடுவன் முதலிய மகிழ்ச்சிகரமான இயற்கைச் செயற்பாடுகள் இங்கு சித்தரிக்கப்படுகின்றன. தலைவியின் தனிமைத்துயரைப் போக்கும் புணர்ச்சியும் (உடலுறவு) இங்கு இடம்பெறுகின்றது.

இவை முடித்து தலைவன் திரும்பிச் செல்லும் சூழலில் அவன் பாதுகாப்பாகச் செல்வானோ? என்ற அச்சம் தலைவியை ஆட்கொள்கின்றது. இத்தகைய அச்சம் நிறைந்த தலைவியின் பய உணர்வை வெளிப்படுத்த கொடுமையான உரிப்பொருள்களை, இயற்கை நிகழ்வுகளை புலவர் சித்தரிக்கின்றார்.

யானையாற் கொல்லப்பட்ட புலி, பெண் யானையைத் தேடி மதம் பிடித்த நிலையில் நிற்கும் தனியன் யானை, வண்டுகளின் ஓசையை யாழிசை என ஏமாந்து கேட்கும் அசுணப்பறவை, மூங்கிற் புதர் நிறைந்த புற்றுக்குள் இருக்கும்பாம்பு அதனைக்கொல்லும் கரடி என எல்லாக் காட்சிகளுமே அச்சத்தைத் தருவனவாக உள்ளன.

சங்கப்புலவர்கள் இயற்கையிலே அதீத ஆர்வம் கொண்டு இயற்கை வர்ணனைகளை, அதிகளவிற் சித்தரித்ததால், சங்ககாலத்தை இயற்கை நெறிக்காலம் என ஈழத்தவரான பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை பெயரிட்டு அழைக்கின்றார்.

ஈழத்தின் முதற்புலவரான ஈழத்துப் பூதன் தேவனாரும் ஈழத்திலிருந்து தமிழகத்திற்கு சென்று தமது கால தமிழக இலக்கிய வரலாற்றுச் சூழலைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப இயற்கை வர்ணனைகளை அதிகம் பயன்படுத்திச் செய்யுள் இயற்றியுள்ளார்.

பாத்திரங்களின் மன உணர்வுக்கேற்ப இயற்கை நிகழ்வுகளை நுட்பமாக சித்தரிப்பதில் தன்னிகர் அற்றவராக அவர் திகழ்கிறார்.



# ஊசிலி கார்

பொக்கிசன்

சந்தியில் நின்று வெள்ளையப்பன், ஜெகன், நான் மூவரும் கதைத்தோம். ராஜநாயகியிலை 'நாளை நமதே' ஓடுது போவமே, ராசா அண்ணையைக் கேட்டுப்பார்ப்பம். அவரின்ர காரிலை போவம். ராசா அண்ணையைக் கூட்டிக் கொண்டு போறதெண்டா அவருக்கும் நாங்கள் தானே டிக்கெட் எடுக்க வேண்டும். சரியில்லைத் தானே.

"ஓமோம்; நாங்கள் மூண்டு பேரும் காசு போட்டு ராசா அண்ணைக்கும் சேர்த்து டிக்கெட் எடுப்பம். ராசா அண்ணை சந்தியில் சைக்கிள் கடை வைத்திருக்கிறார். அவரிட்டை ஒரு ஊசிலி கார் (woolsley) நிக்குது. நான் என்ரை சைக்கிளை அவரிட்டைத் தான் குடுத்து கழுவிப்பூட்டினனான். ராசா அண்ணை கடை வைச்சிருக்கிற இடத்தில சின்னையா முந்தி பெரிய சோத்துக்கடை வச்சிருந்தவர், சின்னையா செத்த பிறகு சின்னம்மா நடத்தினவ, வேலைக்கு ஆக்கள் தோதில்லை எண்டு சின்னம்மா கடையை விட்டிட்டா. இப்ப ராசா அண்ணை அதிலை சைக்கிள் கடை வைச்சிருக்கிறார்.

இந்த ஊசிலி கார் ஒரு பழங்கார். எங்கையோ மலிவா அம்பிட்டிட்டுது 2000 ரூவாக்கு. வாங்கிக்கொண்டு வந்திட்டார். பெரியாம்பிட்டை ஒரு ரென் நிக்குது. அதுகும் பழசு தான். இது அதை விட பழசு. இப்ப எல்லாரும் ஏபோர்ட்டி, சோமசெற் தான் அநேகமா வைச்சிருக்கினம். சிலபேர் ஒக்ஸ்போர்ட், கேம்பிறிட்ஜ் எல்லாம் வைச்சிருக்கினம். மணி பிறந்தபோது ஒருத்தரின்ரை காரும் அம்பிடேல்லை பிறகு ராசா அண்ணையின்ரை காரிலை தான் அம்மாவை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனது. அம்மா பயத்தில முதலில் ஏறமாட்டனெண்டிட்டா; ராசா அண்ணை, அக்கா ஒண்டுக்கும் பயப்பிடாதேங்கோ நான் கவனமா கொண்டு போய் விடுறன் எண்டு சொன்னார் நிண்ட ஆக்களும் ஒண்டுக்கும் பயப்பிடாதேங்கோ ஏறுங்கோ எண்டு சொல்லிச்சினம். அதுக்குப் பிறகுதான் அம்மா ஏறினவ; ராசா அண்ணையும் சொன்ன மாதிரி பக்குவமா கொண்டு போய் விட்டிட்டார். ஊசிலி மிசின் (water pump) எல்லாரும் வைச்சிருக்கினம் ஆனா ஊசிலி கார் ராசா அண்ணையிட்டை தான் முதல் முதலா நான் பாத்தனான்.

நாங்கள் கேட்டவுடனை உள்ளுக்கை போய் ஸ்டார்ட் பண்ணுற கம்பியை எடுத்து வந்து லாண்ட்மாஸ்டர் ஸ்டார்ட் பண்ணுற மாதிரி ஸ்டார்ட் பண்ணினார்; உடனை கார் புக்கு புக்கு... எண்ட சத்தத்தோடே ஸ்டார்ட் பண்ணியிட்டுது. ராசா அண்ணை உள்ளுக்கை போய் சேர்ட் போட்டுகொண்டு வந்தார்; எல்லாரும் காரில் புறப்பட்டோம். ஏற்றத்தடியில் (இந்த இடம் தான் உண்மையான கீரிமலை தற்போது மகிந்தவின் seven star bungalow அமைந்துள்ள இடம்) போனவுடனை கார் நிண்டிட்டுது எல்லாருமா இறங்கி தள்ளினம். கார் ஸ்டார்ட் பண்ணியிட்டுது. ஒருமாதிரி போய்ச்சேர்ந்தம்; திரும்பி வரேக்கை ஜெகன் கத வுக்கு பக்கத்தில நிண்டு ஒரு கையை காரிலை பிடிச்சுக்கொண்டு மற்றக்கையால ரோச் பிடிச்சுக்கொண்டு வந்தான். ஏனெண்டா ராசா அண்ணையின்ரை காருக்கு ஹெட் லைற் இல்லை.

# வித்துவான் பதில்கள்



**வித்தூ..., எனக்கும் மனைவிக்கும் இடையில் அடிக் கடி சண்டை வருகிறது. என்ன செய்ய வேண்டும்?**
**வ.நிதர்சன், வட்டக்கச்சி**

எங்கோ தொடங்குவதெல்லாம் அங்கே தான் முடிய வேண்டும்.

## நித்தியானந்தா சுவாமிகள்
## நித்தியம் ஆனந்தமாகவே இருக்கிறாரே?



**டியர் வித்துவான், நித்தியானந்தா சுவாமிகள் நித்தி யம் ஆனந்தமா கவே இருக்கிறாரே?**
**வ. சிவரதி, தொல்புரம்.**

நித்தியானந்தா சுவாமி மட்டுமா? பெயரின் முடிவில் "ஆனந்தா" என்று உள்ள பல சுவாமிகளும் ஆனந்தமாகத் தானே இருக்கிறார்கள்.

**வித்துக்குட்டி, இன்றைய கல்விமுறை ஏட்டுக் கல்வி முறை. ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாதுதானே?**
**எஸ். கவிதா, சாவகச்சேரி.**

அப்படிச் சொல்லிவிட முடியாது. உதாரணமாக கணிதபாடத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஆசிரியர் சொல்லித்தரும் முதலாம் தசமதானத்துக்கு மட்டம் தட்டுதல், இரண்டாம் தசமாதானத்துக்கு மட்டம் தட்டுதல் முதலிய விடயங்கள் மற்றவர்களை மட்டம்தட்ட உதவுகின்றன. கடன் எடுத்துக் கழித்தல் ஒவ்வொரு மாதத்திலும் முதலாம் திகதி தொடக்கம் இருபதாம் திகதி வரை வாழ்க்கையைக் கொண்டு செல்ல உதவுகிறதே!



**வித்தப்பா! தகுதிக்கு மீறிய விடயங்களில் ஆசைப்படக்கூடாது என்று சொல்கிறார்களே. இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**
**ம. நிலா, மன்னார்.**

அது முன்னோர் கருத்து. ஆனால் நல்ல விஷயங்களுக்கு தகுதிக்கு மீறியும் ஆசைப்படலாம். தகுதிக்கு உட்பட்ட விடயங்களுக்கு மட்டுமே ஆசைப்பட்டுக் கொண்டிருந்தால், வாழ்க்கையில் முயற்சி இருக்காது. ஜெயம் ரவி பாணியில் சொன்னால் வாழ்க்கையில் "கிக்கே" இருக்காது. நல்ல விடயங்களுக்குத் தகுதிக்கு மீறியும் ஆசைப்படுங்கள். தோல்வி அடைந்தாலும் முயற்சித்தோம் என்ற திருப்தியாவது கிடைக்கும். இதனைத் தான் திருவள்ளுவர் "கான முயல் எய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது" என்றார். அதாவது முயலுக்கு எய்து முயலிற்பட்ட அம்பினை விட யானைக்கு எய்து தவறிய அம்பே சிறப்பானது என்பது இதன் பொருள்.

**வித்துவானே! இலங்கை கிரிக்கெட் அணியின் தற் போதைய நிலை என்ன?**
**த. டிரோஜன், அரியாலை.**

கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலை தான். எத்தனை காலத்திற்குத் தான் மஹேல, சங்கா, டில்ஷான் என ஓய்வுபெற்ற பழைய புராணத்தைப் பாடிக்கொண்டிருக்கப் போகிறார்கள்? அணி நிர்வாகத்தை மாற்றிப் பார்த்தார்கள், அமைச்சர்களும் மாறிவிட்டார்கள். பயிற்றுநர்களும் மாற்றப்பட்டு விட்டார்கள். இனி நாட்டைத் தான் மாற்றிப் பார்க்க வேண்டுமோ??

நீங்களும் கேள்விகள் கேட்கலாம்...
எழுதி அனுப்புங்கள்
வித்துவான் பதில்கள்
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

## தயிர் வடை



**தேவையான பொருட்கள்**

உழுந்து : 1 கப்
துவரம் பருப்பு : 1 கப்
செத்தல் மிளகாய் : 12
சிறிய வெங்காயம் : 15
பெருஞ்சீரகம் :1 மேசைக்கரண்டி
பெருங்காயம்: சிறிதளவு (பசையாக அரைத்து எடுக்கவும்)
கறிவேப்பிலை : சிறிதளவு
கடுகு : சிறிதளவு
உப்பு : தேவையான அளவு
தயிர் : தேவைக்கேற்ப
தேங்காய் எண்ணெய் : தேவையான அளவு
கொத்தமல்லி இலை : சிறிதளவு

**செய்முறை**

முதலில் உழுந்து மற்றும் துவரம் பருப்பு ஆகியவற்றை நீரில் ஊற வைத்து, ஒரு மணித்தியாலத்துக்குப் பிறகு நன்றாகக் கழுவி இறுக்கமாக அரைத்து எடுக்கவும்.
அவற்றுடன் சிறிதாக அரிந்த செத்தல் மிளகாய் மற்றும் சிறிய வெங்காயம், பெருஞ்சீரகம், நறுக்கிய கறிவேப்பிலை, பெருங்காயப் பசை, உப்பு ஆகியவற்றைச் சேர்க்கவும்.
கலவை தயாராகியதும், நன்கு கொதித்த நிலையிலுள்ள எண்ணெய்க்குள் சிறு சிறு வடைகளாகத் தட்டிப் போட்டு நன்றாக வேக விட்டு எடுத்து, தயிரில் போடவும்.
தாளித்த கடுகு, கொத்தமல்லி இலை என்பவற்றை தயிரில் சேர்க்க வேண்டும்.
சுவையான தயிர் வடை தயார்.

## சுண்டி இழுக்கும் வசீகரமான உதடுகளை பெற!



சுத்தமான வெண்ணெய் அல்லது நெய் ஒரு மேசைக்கரண்டி அளவு எடுத்து தினமும் நான்கு அல்லது ஐந்து தடவைகள் உதடுகளில் பூசி மசாஜ் செய்து 20 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவி வர உதடுகள் சிவப்பதுடன், பளபளப்பாகவும், ஈரலிப்பாகவும் மாறும்.
கொத்தமல்லிச் சாறு எடுத்து, தினமும் இரவு நித்திரைக்குச் செல்ல முன் உதடுகளில் பூசி, காலையில் கழுவி வர உதடுகளில் உள்ள கருமை நிறம் நீங்கும்.
பீற்றூட் அல்லது மாதுளம்பழச்சாறு எடுத்து தினமும் நான்கு அல்லது ஐந்து தடவைகள் உதடுகளில் பூசி, நன்கு காய்ந்ததும் நீரால் கழுவி வர உதடுகள் சிவத்து பளபளப்பாகும்.
முட்டை வெள்ளைக் கருவுடன் தேன் கலந்து உதடுகளில் பூசி வர உதடுகள் மென்மையாகவும் பளபளப்பாகவும் மாறும்.
ஒலிவ் எண்ணெய் மற்றும் தேன் கலந்து உதடுகளில் பூசி வர, உதடு வறட்சி நீங்கி உதடுகள் ஈரலிப்பாகும்.
ஒரு மேசைக்கரண்டி சீனி, ஒரு மேசைக்கரண்டி தேன் என்பவற்றுடன் 1/2 மேசைக்கரண்டி பாதாம் எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் கலந்து உதட்டில் பூசி மசாஜ் பண்ணி 10 - 15 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவி வர உதடுகள் சிவப்பதுடன் மென்மையாகவும் வசீகரமாகவும் தோற்றமளிக்கும்.

உங்கள் மகளிருக்கான குறிப்புக்கள் வரவேற்கப்படுகின்றன
எழுதி அனுப்புங்கள்

மகளிர் பகுதி
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0773165555

# சொற்சிலம்பம் போட்டி

5

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | 9 | | |
| 10 | | 11 | | 12 | | | |
| | | 13 | 14 | | | | |
| | 15 | | | 16 | | 17 | |
| 18 | | | | 19 | | | |
| 20 | | | 21 | | | | |
| 22 | | | | | 23 | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..........................................................

கையொப்பம்:....................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிக்ள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. சிலேடைப் பொருள் பொதிந்த பாடல் யாப்பவன் 5. சுட்டும் சொல் 7. திசையின் சுருக்கம் 8. எங்கும் நிறைந்திருக்கும் தன்மை 10. மாட்சிமை 12. நேர்த்திசைக்கு எதிர்ப்புறம் பார்க்க உத்தரவிடுவது. 13. இணங்க 15. பாட்டின் பதத்தில் ஓர் உறுப்பு 17. வீதம் கணக்கிடுவது இந்த அடிப்படை யில் 18. மேலிருந்து நீர் விழும் இடம் 19. ஆரவாரம் 20. கூட்டல் குறி. 21. இணக்கச் சொல் 22. பரதநாட்டியத்தின் ஒரு உருப்படி 23. சர்ப்பம்

## மேலிருந்து கீழ்

1. கமக்காரன் 2. சமுத்திரம் 3. பாடல் யாக்கும் திறன் கொண்டவன் 4. நோய் 5. உள்புறம் / வீடு 6. கூட்டுவதற்கு உதவும் சாதனம் 9. அருந்து மாறான ஏவல் 11. மகள் 14. ஒன்றுடன் ஒன்றைச் சேர்க்கு மாறான ஏவல் 15. நீர், பான வகைகளை உள்ளெடுத்தல் 16. நஞ்சு 17. நூறு செய்யுள் கொண்ட பிரபந்தம் 18. களைப்பால் வரும் சோர்வு. 21. தமிழ்மொழியில் முதல் எழுத்தை இப்படித்தான் உச்சரிப்பர்.

### சொற்சிலம்பம் போட்டி 03 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.சமர் 3 .சிரமம் 5. பகு 6. தரி 7.தடியன் 9. துப்பு .10 யாப்பு 11 .சனம் 13. ஏரல் 14. அக்கினி. 16. வங்கி 17.வரகு 18. தின்

**மேலிருந்து கீழ்**

1, சபதம் 2.மகுடி 3.சிரி 4.மதிப்பு 6. தன் 8 . யன்னல் 9. துப்பாக்கி 11. சரம் 12.சனியன் 13. ஏதம் 14 .அங்கு 16 .வர

**சொற்சிலம்பம் போட்டி இல.05**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

உதயன் சஞ்சீவி

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு

06.03.2020 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன் களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடி வானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 03இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
மு.குலசிங்கம்
இல.69, ஆனந்தநகர்,
கிளிநொச்சி.

**2 ஆம் பரிசு**
யோகராசா சுதர்சினி
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

**3 ஆம் பரிசு**
இ.குலசிங்கம்
5ஆம் வட்டாரம், நயினாதீவு.

**4 ஆம் பரிசு**
ம.ஹர்ஸன்
தொல்புரம் மேற்கு,சுழிபுரம்.

**5 ஆம் பரிசு**
வ.கதிர்காமநாதன்
அம்பலம் வளவு,கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

சஞ்சீவி

# மாணவர் கழகம்



**பெயர்:** விஜயகுமார் ஆய்ஷன்
**முகவரி:** பொற்றொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.
**பி. திகதி:** 2013.10.19
**பாடசாலை:** யா/ சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை
அங்கத்துவ இல. 24



**பெயர்:** உதயராசா பிரணவிகா
**முகவரி:** 68D கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
**பி. திகதி:** 2006.08.06
**பாடசாலை:** யா/ வேம்படி உயர்தரப் பாடசாலை.
அங்கத்துவ இல. 25



**பெயர்:** கணேசலிங்கம் ஜீவிகா
**முகவரி:** இல. 65/1 அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 2006.12.23
**பாடசாலை:** ஏஞ்சல் இன்ரநெஷனல் பாடசாலை.
அங்கத்துவ இல. 26



**பெயர்:** சுதேஸ்கரன் நிருத்திகன்
**முகவரி:** மீசாலை மேற்கு, மீசாலை.
**பி. திகதி:** 2007.07.21
**பாடசாலை:** யா/ இந்துக் கல்லூரி.
அங்கத்துவ இல. 27



**பெயர்:** கிரிஷன் நிருபன்
**முகவரி:** இல. 41 உடுவில் கிழக்கு, சுன்னாகம்
**பி. திகதி:** 2012.01.10
**பாடசாலை:** உடுவில் மகளிர் கல்லூரி.
அங்கத்துவ இல. 28



**பெயர்:** கமலவாசன் யதுஷன்
**முகவரி:** வெடிய்ரசன் வீதி,காரைநகர்
**பி. திகதி:** 2008.05.23
**பாடசாலை:** வட்டு இந்துக் கல்லூரி
அங்கத்துவ இல. 29

1. சஞ்சீவியில் பிரசுரமாகும் படைப்புகளில், மாணவர் கழகத்தில் அங்கத்துவம் வகிக்கும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. மாணவர்கள் தமது படைப்புக்களை அனுப்பும்போது தமது அங்கத்துவ இலக்கத்தை தவறாது குறிப்பிட்டு அனுப்பவும்.
3. மாணவர் கழக அங்கத்தவர்களுக்கு எதிர்பாராத பரிசுகளும் சிறப்புச் சலுகைகளும் வழங்கப்படவுள்ளன. (இது தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்)

சஞ்சீவி

## மாணவர் கழகம்

1. முழுப்பெயர்:..........................................
2. முகவரி: ..........................................

..........................................

3. பிறந்த திகதி:..........................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..........................................
5. கற்கும் தரம்:..........................................
6. தொலைபேசி இலக்கம்:..........................................

..................... .....................


மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இந்த விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி பாஸ்போட் அளவு புகைப்படத்துடன் அனுப்பி வைப்பதன் மூலம் எமது **உதயன் - சஞ்சீவி** மாணவர் கழகத்தின் அங்கத்தவர்களாக நீங்களும் இணைந்து கொள்ளலாம்.

*அனுப்ப வேண்டிய முகவரி:*

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் முகவரி: *uthayansanjeevi@gmail.com*







# எப்போதும் அவன் பெரியவன்தான்

கணபதி சர்வானந்தா

சில விடயங்களை வெளியே சொல்வதால் தீமை உண்டு. சில விடயங்களை வெளியே சொன்னால்தான் மனது ஆறுதலடையும் என்று எண்ணித் திறந்து "அவிட்டுக் கொட்டிய" பின்னர் , ஏன் சொன்னேன் என எண்ணி மனம் வருந்துபவர்களும் உண்டு. ஒரு விடயத்தைச் சொல்வதால் வெட்கம் ஏற்படும் என எண்ணினால் அதனைப் பலர் வெளியே சொல்லமாட்டார்கள். தமக்குள்ளேயே அதனை அடக்கி வைத்து, மனக் குமையலை ஏற்படுத்தி அதனால் மரணித்தோரும் உண்டு.

தனது துயரத்தை வெளியே சொன்னதால் ஒரு உயிர் காப்பாற்றப்பட்டிருக்கிறது. ஒரு பெண் தனது மகனைப் பற்றிய உண்மையைக் காணொளிச் செய்தியாக வெளியே கொண்டு வந்து வெற்றியும் பெற்றிருக்கிறார். அவரது துயரம் சமூகத்துக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளதோடு மட்டுமல்லாது , அவுஸ்திரேலியாவிலுள்ள பல பிரபலங்களைச் சிந்திக்கவும் செய்திருக்கிறது. அண்மையில், சமூக வலைத்தளங்களினூடாக ஏற்படுத்தப்பட்ட ஒரு மாபெரும் புரட்சி என்றும் இதனைச் சொல்லலாம் . ஒன்பது வயதை உடைய சிறுவன் என்றாலும் மரணத்தைத் தழுவிக் கொள்ளலாம் என்று விரக்தியின் விளிம்பில் நின்றவனுக்கு வாழ்வில் நம்பிக்கையைத் தரவல்ல மாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

அவுஸ்திரேலியா பிரிஸ்பேன் நகரத்தைச் சேர்ந்தவர் யராக்க பேயாலெஸ். அவர் மகன் பிறப்பால் சாதாரணமானவனாக இருந்தாலும் வளர்வதில் தாமதம் ஏற்பட்டு 9 வயதை அடைந்தபோது வளர்ச்சியற்று, குள்ளமாகப் பெரிய தலைவளர்ச்சியுடன் காணப்படுகிறான். இதனால் "குள்ள மனிதன், பெருந் தலையன்" என வர்ணிக்கப்பட்டு, அவனது வகுப்பிலுள்ள சக மாணவர்களால் அவன் கேலிக்குள்ளாக்கப்படுவது வழக்கம். அதனால் அவன் பல சந்தர்பங்களில் மனம் உடைந்து போயிருப்பதை உணர்ந்த அவனது தாயார் அவனைத் தேற்ற முனைந்து தோற்றுப்போனார்.

ஒரு நாள் அவன் பாடசாலையில் இருந்து வீடு திரும்பும்போது மிகவும் மன உழைச்சலோடு காணப்பட்டான். காருக்குள் இருந்தவாறே அழத் தொடங்கிவிட்டான். கார் இருக்கையில் தலையை மோதுவதும், அழுவதும், புலம்புவதுமாக இருந்தவனை அவனது தாயார் தேற்ற முனைந்தார். பயனில்லை. "கயிற்றுத் துண்டொன்றைத் தாருங்கள். நான் தற்கொலை செய்து கொள்ளுகிறேன். என்னால் இதனைப் பொறுக்க முடியவில்லை." என்று அழுத காட்சிகளும், " தயவு செய்து என்னைக் கொன்று விடுங்கள்" என்று தாயையும், சமூகத்தையும் பார்த்துக் கெஞ்சுகின்ற காணொளிகளையும் அவரது தாயார் சமூக வலைத் தளங்களிலே பரவவிட்டுத் தனது மனக் குமையலைப் பகிர்ந்து கொண்டார்.

"என் அருமைப் பெற்றோர்களே! எனது மகனின் வேதனையைப் புரிந்து கொள்ளுங்கள். கேலி செய்வதால் ஏற்படுகின்ற பாதிப்பு, குழந்தைகள் மனதிலே விரக்தியையும் தற்கொலைக்கான எண்ணங்களையும் தான் விதைக்கிறது என்பதைத் தற்போது புரிந்து கொண்டிருப்பீர்கள். அதனால் தான் பல சிறுவர்கள் தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள். பெற்றோர்கள் மட்டுமல்ல, அவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் இந்த விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். கேலி என்பது எத்துணை பாரதூரமானது என்பதை இதன் மூலம் விளங்கிக் கொள்ளுங்கள்" என்று மனமுருக அந்தச் சிறுவனின் தாயார் ஒரு வேண்டுகோளை விடுத்திருந்தார்.

பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் "மெயில் ஒன் லைன்" என்ற பத்திரிகை அது பற்றிக் குறிப்பிட்டு "யார் சொன்னார்கள் பெரியது எப்பொழுதும் நன்றென்று?" என்று ஒரு கேள்வியையும் கேட்டிருக்கிறது. "சக மாணவர்களால் கேலி செய்யப்பட்ட ஒன்பது வயதுச் சிறுவனின் நெஞ்சை நொருக்கும் மன வேதனையை, தன்னைக் கொன்றுவிடும்படி கெஞ்சுகின்ற அவன் பற்றிய காணொளியை சமூகவலைத்தளங்களில் பகிர்ந்து கொண்டதால் தற்பொழுது அவன் பெற்றுள்ள பெறுமதிமிக்க வெகுமதிகளால் அவன் திகைத்துப் போயிருக்கிறான். ஆனந்தப் பெருங்கடலில் அவன் மூழ்கிப்போயிருக்கிறான் என்றும் சொல்லலாம். குவாடன் பெயலாஸ் என்ற அந்தச் சிறுவன் தற்போது மிகவும் பிரசித்தமாகி விட்டதோடு, வளம்மிக்க ஆதரவையும் பெற்றிருக்கிறான்.

சமூக வலைத்தினூடாக அவனது தாயார் வெளியிட்ட அவன் பற்றிய காணொளியைப் பார்த்தவர்களிடமிருந்து அவனைத் தேற்றுவதாகவும், ஊக்கத்தைக் கொடுப்பதாகவுமான வார்த்தைகள் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. அவன் பாரிய நட்பு வட்டத்தைப் பெற்றிருப்பதோடு, பல பிரபலங்களின் அண்மித்த தோழனாகி அவனுக்குப் பரிசு மழை கொட்டத் தொடங்கியிருக்கிறது. அப்படிப் பரிசாகக் கிடைத்த 3.5 கோடி ரூபாவைக் கூட தொண்டு நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிதான் இன்னும் பெரியவன் என்பதை அவன் நிரூபித்திருக்கிறான்.

அவனது தாயார் இது பற்றிச் சொல்லும்போது "நான் அந்தச் சம்பவங்கள் எல்லாம் அடங்கிய காணொளியை மக்களோடு பகிர்வதன் மூலம் இது போன்ற விடயங்கள் பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தப்போகிறேன். எனது மகன் துயரத்தைத் தொடக் காரணமாக இருந்த சம்பவம் தொட்டு, இன்று வரை நடைபெற்ற அத்தனையையும் தொகுத்து மக்களுக்கு வழங்குவதன் மூலம் இது போன்ற சம்பவங்களை இனிமேலும் நடைபெறாது பார்த்துக் கொள்ளுவதே எனது நோக்கம்" என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்தச் செய்தியைப் படித்ததும் ஒன்று தோன்றுகிறது. வளர்ச்சியடைந்த நாடுகள் என்றும், நாகரீகமான சமூகம் என்றும் சொல்லுகிறோம். எமது கிராமத்தில் உள்ளதைப்போல அங்கும் "பட்டம்" வைத்துக் கேலி செய்கின்ற பழக்க வழக்கத்தை அவர்களும் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல ஒரு மனிதனுக்கு இயற்கையிலேயே ஏற்படும் அங்கக் குறைபாடுகளைப் பற்றிய விழிப்புணர்வையும், மனிதாபிமானத்தோடு அவற்றை அணுக வேண்டிய தன் அவசியத்தையும் அவர்கள் இன்னும் கற்க வேண்டி இருப்பதாகவே கொள்ளலாம்.

# பெயர்

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிலருக்கு பயிற்சி முகாம்களில் வைத்துச் சூட்டப்படும். சில பயிற்சி முகாம்களில் நமக்கு நாமே பெயரை வைத்துக் கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைக்கும்.
அது பயிற்சி ஆசிரியரையும் (ட்ரெயினிங் மாஸ்டரையும்) பொறுத்தது. எனக்கும் அப்படியொரு வாய்ப்புக் கிடைத்தது. "உங்களுக்கு விருப்பமான பெயரை வைச்சுக் கொள்ளுங்கோ" என்றார் மாஸ்ரர். உடனே அவரவர் தங்களுக்கு விருப்பமான பெயர்களை வைத்துக் கொண்டார்கள். சக போராளி ஒருத்தன் மாதவன் என்றான்.

அடுத்தவன், கஸ்ரோ என்றான். இன்னொருத்தன் கடாபி என்றான். மற்றவன், அறபாத் என்றான். பக்கத்தில் நின்றவன் சலீம் என்றான். இடையில் நின்றவன், பெர்னாண்டோ என்றான். இவ்வளவுக்கும் அவன் ஒரு சைவப் பழம். தந்தையார் ஒரு கோயில் அர்ச்சகர். அதனாலென்ன, இயக்கம் என்று வந்து விட்டால் முற்றும் துறந்து புத்தம் புதிய வாழ்க்கையில் நுழைதல் அல்லவா. அதற்கான பயிற்சி முகாமுக்கு வந்து நின்று கொண்டு பழைய கதையை எல்லாம் பேச முடியுமா? குறைந்த பட்சம் பெயர்களிலாவது புரட்சியும் புதுமையும் வேண்டாமா? விருப்பமான மாதிரி பெயர்களைத்தான் வைத்தாயிற்று. அதைப்பற்றி விளக்கம் சொல்ல வேண்டும் என்றார் ட்ரெயினிங் மாஸ்ரர். அப்பொழுதுதான் பலருக்கும் பிரச்சினை வந்தது. சிலர் உண்மையிலேயே ஏன்தான் இப்படியொரு பெயரை வைத்து மாட்டினோம் என்று திக்கு முக்காடினார்கள். நல்லவேளை மாக்ஸ், மாவோ, லெனின், சேகுவேரா, சோக்கிரட்டீஸ், அரிஸ்டோட்டில், திருவள்ளுவர், கம்பன் என்று யாரும் வைத்துக் கொள்ளவில்லை. மாதவன் என்று வைத்துக் கொண்டவனுடைய காதலிக்குப் பெயர் மாதவி. அவளுடைய ஞாபகமாக அந்தப் பெயரை வைத்தான். பயிற்சி முடிந்து ஊருக்குத் திரும்பிப் போகும்போது தன்னுடைய இயக்கப்பெயரை அறிந்து சந்தோசப்படுவாள் அவள் என்ற ஆசையின் விளைவது. இப்படித்தான் கலைவாணியின் காதலன் கலைவாணன் ஆனான். நான் "றெஜினோல்ட்" என்றேன். எல்லோரும் திரும்பி என்னைப் பார்த்தார்கள். எனக்கும் ஒரு றெஜி இருக்கக் கூடும். அவள் கறுப்பியாகவோ சிவப்பியாகவோ இருப்பாள் என்று அனுமானித்திருப்பார்கள். ஆனால், நான் வைத்துக் கொண்டது என்னுடைய ஆசிரியரின் பெயரை. ஓ.லெவலில் எங்களுக்குக் கணிதம் படிப்பித்தவர் றெஜினோல்ட். ஆசிரியர் என்று சொல்லவே முடியாத அளவுக்கு ஒரு பெடியனைப்போலவே இருப்பார். அநேகமாக அப்பொழுது அவருக்கு 23 அல்லது 24 வயதிருக்கலாம். அப்போதெல்லாம் அவர் பெரிய புரட்சிக்காரரைப் போலவே வகுப்பில் கதைப்பார். 1977 தேர்தலின்போது களமிறங்கிய வேட்பாளர்களுக்கு நெற்றியில் இரத்தப் பொட்டு வைப்பார்கள். இதற்காகத் தங்களுடைய கைகளில் பிளேட்டினால் கீறி இரத்தத்தை எடுப்பார்கள். நம்முடைய றெஜினோல்டும் அப்படித்தான். அவருடைய கையின் உட்பக்கம் பிளேட் கீறல்களால் நிறைந்திருக்கும். திலகமிடுவதால் அவரை நாங்கள் திலகர் என்று வகுப்பில் சொல்லிக் கொள்வோம். ஆனால், அவர் படிப்பிப்பதில் குறை வைத்ததில்லை. அருமையாகப் படிப்பிப்பார். எளிமையாக - இனிமையாக விளக்குவார். எந்தக் கணக்கையும் சிம்பிளாகப் போடுவார். அதை விட எல்லோரோடும் அன்பாகப் பழகுவார். அப்படி நெருக்கமாகப் பழகும்போது ஒரு நாள் சொன்னார், "என்னுடைய அப்பா தமிழாராய்ச்சி மாநாட்டின்போது கொல்லப்பட்டு விட்டார்" என்று. கவலையோடு "பெயர் என்ன?" என்று கேட்டோம். "சிக்மலிங்கம்" என்றார்.
அதற்குப் பிறகு யாழ்ப்பாணத்துக்குச் சென்றபோது தமிழாராய்ச்சி மாநாட்டின்போது பலியானவர்களின் நினைவிடத்துக்குப் போய் சிக்மலிங்கம் என்ற பெயரைத் தேடிப் பார்த்தேன். இதற்குள் றெஜினோல்ட் மாஸ்ரர் எங்களை விட்டு, இந்த நாட்டை விட்டுப் போய் விட்டார். முதலில் பிரான்சுக்குப் போனார். பிறகு கனடாவுக்கோ, அமெரிக்காவுக்கோ போனதாக அறிந்தேன். ஆனாலும் அவருடன் பழகிய, பேசிய எதுவும் மறக்கவில்லை. அந்த நினைவாக அவருடைய பெயரை எனக்கு வைத்துக் கொண்டேன். என்ன கொடுமை என்றால் பயிற்சி முடியும் வரையில்தான் அந்தப் பெயரைச்சொல்லி என்னைக் கூப்பிட்டார்கள். பிறகு யாரும் அதைச் சொன்ன மாதிரியில்லை. எல்லோரும் வேறொரு பெயரில்தான் அழைத்தார்கள்.
என்றாலும் அந்தப் பெயரை நான் என்றும் கைவிட்டதில்லை. அதுவே சிக்மலிங்கம் றெஜினோல்ட் என இன்னும் உங்கள் வாயிலும் மனசிலும் உள்ளது.




# ஆறப் பொறுக்கக் கூடாதா சஜித்?

ராஜ்குமார்

"ஆக்கப் பொறுத்த சஜித் ஆறப்பொறுக்கக் கூடாதா?" என்ற கருத்து தற்போது தெற்கில் பலராலும் பேசப்பட்டு வருகிறது. சஜித் பிரேமதாசவைப் பொறுத்தமட்டில் வயதிலே இளையவர். எனவே அவருக்கு நாட்டின் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ வருவதற்கு போதிய காலஅவகாசம் தாராளமாகவே இருக்கிறது. இந்த நிலையில், "சுடுகுது மடியைப் பிடி" என்ற தோரணையில் இப்போதே தான் ஜனாதிபதியாகிவிட வேண்டும் அல்லது பிரதமராகி விட வேண்டும் என்ற செயற்பாடு பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில் கோத்தா அலை பலமாக வீசியது அனைவருக்கும் தெரியும். அவரது வெற்றி என்பது உறுதிப்படுத்தப்பட்டதாக தேர்தலுக்கு முன்பே பேசப்பட்டது. அந்த நிலையிலும், ஏதோவொரு அசாத்தியத் துணிவுடன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார் சஜித் பிரேமதாச. அதிலும் சாம, தான, பேத தண்டங்களை எல்லாம் பயன்படுத்தித்தான் ரணிலிடமிருந்து ஜனாதிபதி வேட்பாளர் பதவியைப் பெற்றுக் கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியை ரணிலிடமிருந்து மீட்டெடுத்து தலைமையை மாற்றிவிட்டால் ஐ.தே.க வெற்றிக் கனியை அள்ளிச் செல்லும் என்றும், சிறுபான்மையினரின் ஆதரவும் கிடைத்தால் அமோக அறுவடை தான் என்றும் கணக்குப் போட்ட சஜித், எதிரியின் பலத்தை கணக்கெடுக்காமல் போனமை ஆச்சரியமான விடயம்தான். அதிலும் சிறுபான்மைக் கட்சியினரின் கால்களில் விழுந்தால் அது தென்பகுதிச் சிங்கள மக்கள் மத்தியில் தனது ஆதரவை குறைத்துவிடும் என்று கருதியவர் கல்யாண வீட்டுக்கு வந்த காதலியை களவாக ரசிக்கும் கல்யாண மாப்பிள்ளையைப் போல் கடைக்கண்ணாலேயே தான் சிறுபான்மையின ரின் ஆதரவை ரசித்தார்.

ஆனால் சிங்களப் பேரினவாத அலையின் மத்தியில் சஜித்தினால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. "நானும் ரவுடிதான், நானும் சிங்களவன்தான், நானும் பௌத்தன் தான்" என்று அவர் துண்டைப் போட்டு தாண்டிய போதிலும் பாய்ச்சல் பலிக்கவில்லை. மண் கவ்வ வேண்டியதாயிற்று. 600 கோடி ரூபா கடனாளியானார். கிராமங்கள் பலவற்றை உருவாக்கிக் கொடுத்து கிராம மக்களின் நாயகன் சஜித் என்ற நம்பிக்கை எல்லாம் தவிடுபொடியானது. முதல் பாய்ச்சலே தோல்வியில் முடிந்தது. அதிர்ந்து போன சஜித் கொஞ்சநாள் அஞ்ஞாத வாசம்- அரசிலிலிருந்து ஓய்வு என்று சொல்லிக் கொண்டவர் பொதுத் தேர்தல் என்ற பேச்சு எழுந்ததும் மீண்டும் மேடைக்கு வந்தார்.

இப்போது கட்சித் தலைவர் பதவி வேண்டும், யானைச் சின்னம் வேண்டும், தனது ஆட்களுக்குப் பதவி வேண்டும், பிரதம வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்றெல்லாம் கேட்டு தொடர்ந்து கடந்த சில நாள்களாக ரணிலுடன் கட்டிப் புரளாத குறையாக சண்டை பிடித்து வருகிறார். ரணிலோ கொடாக் கண்டனாக இருக்க சஜித்தோ விடாக்கண்டனாக தனது பிடியில் உறுதியாக இருக்கிறார். இப்போ அன்னச் சின்னம் புதிய கூட்டணித் தலைவர், பிரதம வேட்பாளர் என்று முடிவு செய்யப்பட்டாலும் கூட, இழுபறி தொடர்வதாகவே தெரிகிறது.

தற்போதைய அரசைப் பொறுத்தமட்டில் தாங்கள் வெல்வோமா என்பதற்கு அப்பால், மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் வெல்ல வேண்டும் என்பதில் உறுதியாக நிற்கிறது. ஆனால் சஜித் தரப்பு நிலைமை அப்படியல்ல. சஜித்தே வழக்கமாகத் தான் போட்டியிடும் அம்பாந்தோட்டைத் தொகுதி இம்முறை தன்னை காலை வாரிவிடும் என்ற பயத்தில்., தனது தந்தையார் போட்டியிட்டதுபோல் கொழும்பு மாவட்டத்திலேயே போட்டியிட தீர்மானித்தி ருக்கிறா ராம். இந்தநிலையில் ஐ.தே.கவில் ஏனையவர்களின் நிலையும் 'டப்பா டான்ஸ்' ஆடுகிறது. களநிலவரங்களின்படி பார்த்தால், சஜித்தின் கூட்டணி வெல்லுமா என்பதைவிட, தற்போதுள்ள எதிர்க்கட்சித் தலைவர் பதவியாகிலும் எதிர்காலத்தில் கிடைக்குமா என்பதே சந்தேகமாக உள்ளது.

அரசைப் பொறுத்தமட்டில் புதிய வேலைவாய்ப்பு, அமெரிக்காவுடன் முட்டல், ஐ.நாவுடன் மோதல் என்று தேர்தல் பிரசாரத்துக்கு என ஏகப்பட்ட ஆயுதங்களைக் கையில் வைத்திருக்க சஜித் தரப்போ வெற்றுக் கைகளுடன் நிற்கிறது. தவிர பிணைமுறி மோசடி ஊழல், ரஞ்சன் லீக்ஸ் என்று ஏகப்பட்ட கெட்ட பெயர்கள் வேறு.

' தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை. எதிரிக்குச் சகுனம் பிழைத்தால் சரி' என்ற ரீதியில் தனது கட்சி தோற்றாலும் பரவாயில்லை சஜித் தரப்பு வெல்லக்கூடாது என்பதில் குறியாக இருக்கிறார் ரணில்.

தேர்தல் செலவுகளுக்கு பில்லியன் கணக்கில் பணம் தேவை. ஆனால் அந்த வருமான வழிகளெல்லாம் ரணிலிடமும் ரவி கருணாநாயக்காவிடமும் தான் இருக்கின்றன. எனவே தேர்தல் நிதி தொடர்பில் சிக்கல் தொடர்கிறது. சஜித்தோ தூய்மையான கை கொண்டவர் என்று பெயர் பெற்றவர். தனக்கென எதுவும் சேர்த்து வைக்காதவர். எனவே பணத்தைத் தண்ணீராக வாரியிறைக்கும் ராஜபக்சக்களுக்கு முன் சஜித் என்ன செய்யப் போகிறார்? எப்படி வெல்லப் போகிறார்?

ஏற்கனவே எரான் விக்ரமரத்ன, மங்கள சமரவீர சஜித் பக்கம் நின்று அவரை ஜனாதிபதியாக்கியே தீருவோம் என்று செயற்பட்டவர்கள். இனி இவர் வேலைக்கு ஆக மாட்டார் என்று நினைத்தோ என்னவோ, இப்போது ரணில் பக்கம் மீண்டும் ஒட்டிக் கொண்டுவிட்டார்கள். ரணில் ஐ.தே.கவின் தலைவரான பின் அந்தக் கட்சி தேர்தல்களில் பெற்ற வெற்றிகளைவிட, தோல்விகளே அதிகம் என்ற குற்றச்சாட்டு உண்டு. இந்த நிலையில், இனிவரப்போகும் தேர்தல்களில் வெற்றிகளைப் பெற்றுக் கொடுக்காமல் போனால் அதே தோல்விகளின் தலைவர் என்ற பட்டம் சஜித்துக்கும் கிடைக்கும் அல்லவா? என்ற கேள்விகள் முன்வைக்கப்படு கின்றன.

இந்தமுறை ஏதோ நடப்பது நடக்கட்டும் என்று ஓரமாக இருந்து வேடிக்கை பார்த்து விட்டு இன்னும் சில காலங்கள் செல்ல - அரசின் மீது மக்கள் வெறுத்துப் போக- ராஜபக்ச அலை கொஞ்சம் ஓயத் தொடங்க முழுவீச்சிலே சஜித் களத்தில் குதித்தால் சுலபமாக வெற்றியைப் பறித்துக் கொள்ளலாம். அப்படியல்லாமல் அவரசப்பட்டால் அவதி சஜித்துக்குத்தான்.



# தேர்தல் கூட்டுக்கள் இழுபறியில்...!

ம.ச.வன்னமணி

இது தேர்தலுக்கான கூட்டுக்களின் காலம். அதற்காக கிழக்கில் நீண்டகாலமாக ஒரு கூட்டினை உருவாக்கும் முயற்சியில் ஈழத்தமிழர் பேரவை,கிழக்குத் தமிழர் ஒன்றியம்,கிழக்குத் தமிழ் கூட்டமைப்பு எனும் பெயர்களில் மூன்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு கானல் நீராகிப் போன நிலையில் அண்மையில் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் தலைமையில் ஓர் கூட்டமைப்பு உருவாகியது. ரி.சிவநாதனின் கிழக்குத் தமிழர் ஒன்றியம், வீ.ஆனந்த சங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணி, வியாழேந்திரனின் முற்போக்கு தமிழர் அமைப்பு, சோ.கணேசமூர்த்தியின் இலங்கைத் தமிழர் முற்போக்கு முன்னணி, வி.முரளிதரனின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவை இணைந்து உதயசூரியன் சின்னத்தில் 'ஐக்கிய மக்கள் முன்னணி' எனும் முன்னணி உதயமாகியது. கூட்டு முன்னணி பற்றி ஊடக மகாநாட்டில் அறிவிப்பு வெளிவந்த கையுடன் பல விமர்சனங்க ளும் முன்வைக்கப்பட்டு அதன் உறுதித் தன்மையும் கேள்விக்குரியதாகியது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அன்னத்தை ஆதரித்த இரண்டு கட்சிகளும் மொட்டை ஆதரித்த மூன்று கட்சிகளும் எவ்வாறு ஒரு கூட்டில் வந்தன? கிழக்கின் தனித்துவம் பேசிய மூன்று கட்சிகளும் தமிழ் தேசியம் பேசிய ஒரு கட்சியும் இலங்கைத் தேசியம் பேசிய ஒரு கட்சியுமாக இவை ஐந்தும் ஒரு கூட்டில் எப்படி இணைந்தன?

தமிழர் பிரதி நிதித்துவத்தை அதிகரிப்பதாகக் கூறும் இவர்கள் வாக்கு வங்கியைக் கொண்ட இரண்டு முக்கிய கட்சிகளை விட்டுவிட்டு தங்கள் வசக்குப் பலத்தை தாங்களே அறிய முடியாத இவர்களின் கூட்டு யாருக்கானது? என்ற சந்தேகங்களை உருவாக்கியுள்ளன. இந்தச் சந்தேகங்களை உறுதி செய்வது போன்று, அந்தக் கூட்டிலிருந்து சில கட்சிகள் உதிரத் தொடங்கியுமுள்ளன.

உண்மையில் கூட்டுக்களில் ஈடுபடுவோர் யதார்த்தத்தை,நடைமுறை அரசியலை விளங்கிக் கொண்டுள்ளவர்களாகத் தெரியவில்லை. தேர்தல் கூட்டு என்பது , வாக்கு வங்கியை மையங்கொண்டே அமைய வாய்ப்புண்டு.அவ்வாறு அமைந்தால் மாத்திரமே வெற்றிபெறும். அவ்வகையில் கிழக்கைப் பொறுத்தவரை ஒன்று தமிழரசுக் கட்சியை மையம் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்,தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை மையப்படுத்தியே இன்னொரு கூட்டுமே சாத்தியம் . அதுவே வெற்றியளிக்கும். இதனை தவிர்த்து அமையும் கூட்டுக்கள் வெறும் சந்தர்ப்பவாதக் கூட்டுக்களாகவே அமையும். ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கூட்டைப் பூரணப்படுத்தி ஆசனப்பங்கீட்டையும் அறிவித்து விட்டது.அது தமிழரசுக் கட்சி,ரெலோ,புளொட் ஆகிய மூன்றையும் தவிர வேறு எந்தக் கட்சியையும் ஏற்றுக் கொள் ளத் தயாரில்லை.சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியில் இருந்து விலகி துரைரெத்தினம் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் சேர முயன்ற போதும் அது கைகூடவில்லை.அவர்கள் வேறு யாரையும் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என்பதன் முடிவே அது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தனது கூட்டு முன்னணியை அமைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களின் தலைமையகம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது.பல தரப்பட்டோரும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.மகிந்த அணியுடன் இணக்கப் போக்குடையவர்களே பெரும்பாலும் இவ்வணியில் இணையக்கூடும். உதய சூரியனில் ஐக்கிய முன்னணியில் இணைந்த வியாழேந்திரனின் தமிழர் முற்போக்கு அமைப்பு அதிலிருந்து விலகி, கடைசி நேரத்தில் இவ்வணியிலேயே பெரும்பாலும் இணையக்கூடும்.அதற்கான பேச்சுக்கள் முடிவடைந்து விட்டன. கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு,சிவில் சமூக அமைப்புக்கள்,தனிநபர்கள் எனப் பல்வேறு தரப்புக்களும் பேச்சுக்களில் ஈடு பட்டுக் கொண்டிருக்கின்றனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பெரும் அதிருப்தியையும்,அதன் வாக்கு வங்கிச் சரிவையும் பயன்படுத்தவே கூட்டுக்களில் ஈடுபடுவோர் முனைகின்றனர்.அதற்கான மாற்றீடாக தங்களை நிறுவவே முற்படுகின்றனர். தற்போது கிழக்கில் மூன்று கூட்டுக்கள் உருவாகினாலும் இன்னும் சில உருவாகவும் உதிர்ந்து போகவும் வாய்ப்புண்டு.அடுத்த வாரத்தில் இன்னும் சில மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.



- மின்னல்

## திரடி அரங்கு

## என்னம்மா, இப்பிடி பண்றிங்களேம்மா??

வடக்கில் பணிபுரியும் உயர்மட்ட அரச அதிகாரிகளுக்கு இப்போது வருடாந்த இடமாற்ற 'சீசன்'. மேல்மட்ட தலைகளைப் பந்தாடி முடிந்ததால், இப்போது இரண்டாம் மட்ட அதிகாரிகளை அங்குமிங்கும் மாற்றி விளையாடத் தொடங்கியுள்ளனர். உள்ளூராட்சித் திணைக்களத்தில் நிர்வாகத்திறனோடு செயற்பட்ட ஓர் அதிகாரி அவர். அப்போதிருந்த ஆளுநர் ஒருவரையே நீதிமன்றத்துக்கு இழுக்குமளவுக்கு துணிச்சலும் கொண்டவர். ஆளுமையும், துணிச்சலும் கொண்டவர் என்பதாலோ என்னவோ 60 கிராம அலுவலர்களைக் கொண்ட பகுதிக்கான பிரதேச செயலராக அவர் நியமிக்கப்பட்டார்.

இந்தச் சமயத்தில் இன்னொரு பெண் அதிகாரி, 6 கிராம சேவகர்களைக் கொண்ட பகுதிக்கு பிரதேச செயலராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்த இருவரும் புதிய பிரதேசங்களில் கடமையைப் பொறுப்பேற்று 2 வாரங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் இருவரும் அங்கிருந்தவர் இங்கும், இங்கிருந்தவர் அங்குமாக மாற்றப்பட்டிருக்கின்றனர். அதாவது ஆளுமையுள்ள ஒருவர் 60 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பகுதிக்கான பிரதேச செயலராக இருந்தவர் வெறும் 6 கிராம சேவகர்கள் கொண்ட பகுதிக்கு பிரதேச செயலராக மாற்றப்பட்டிருப்பதன் மர்மம் எவருக்கும் புரியவில்லை. உயர்தரப் பாடசாலை ஒன்றின் அதிபரை முன்பள்ளி ஒன்றுக்கு ஆசியராக நியமிப்பதற்கு ஒப்பானதே இந்த இடமாற்றமும். இப்படி அதிகாரிகளின் திறனை மழுங்கடிக்கும் 'பெரிய ஐயாக்களுக்கு' இந்தக் குறளைச் சமர்ப்பிக்கிறோம்.

*'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்'*



## கொலையுண்டவர் பற்றி....!

ஜெயாண்ணை என்கிற பால்ராஜா ஜெகதீஸ்வரன் கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதியில் 1972.11.22 இல் பிறந்தவர். கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் 7 ம் வகுப்புவரை கல்விகற்று கல்வியை இடைநிறுத்திவிட்டு பெற்றோர் வசித்துவந்த பாலைப்பாணிக்கு சென்றுள்ளார். தந்தையாரோடு வயல் வேலைகளுக்கு சென்று வந்தவர் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்துகொண்டார். 1995ஆம் ஆண்டு இயக்கத்தில் இருந்து விலகி , காதலில் திருமணம் செய்துகொண்டார்.

1998.11.23 அன்று இலங்கை இராணுவத்தால் அவரது தந்தை வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டார். அதனால் குடும்பத்தைக் காப்பாற்ற வியாபாரம் செய்ய ஆரம்பித்தார். வியாபார நிமித்தமாக அவர் வவுனியா சென்ற போது இலங்கை இராணுவத்தால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். இரண்டு வருட தடுப்புக் காவல் விசாரணைகளைத் தொடர்ந்து விடுதலைசெய்யப்பட்டவர், சிறிது காலத்தின் பின்னர் மீள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்துகொண்டார். பின்னர் 2009 ஆம் ஆண்டு சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்பட்டதாகக் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு, பின்னர் விடுதலையானார். கிளிநொச்சி, உதயநகரில் மனைவி, பிள்ளைகளோடு வசித்து வந்த ஜெயாண்ணை, மீண்டும் பாலைப்பாணிக்குச் சென்று விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

### கொலைக்குறிப்பு 01

ஜெயாண்ணை பாலைப்பாணியில் தங்கி நிற்கும் வீட்டிலிருந்து காலை 6 மணிக்கு அந்த வீட்டு இளைஞன் ஒருவருடனேயே வயலுக்குச் செல்வது வழக்கம். ஆனால் அன்றைய தினம் குறித்த இளைஞர் வந்து சேரத் தாமதமானதால் செல்லவில்லை. சிலவேளைகளில் அவரும் கூடச் சென்றிருந்தால் அந்தக் கொலை நடக்கும் வாய்ப்பு இல்லாமல் போயிருக்கும்.

### கொலைக்குறிப்பு 02

பனிக் குளிர் காரணமாக தலைக்கவசம் , நீண்ட சப்பாத்து அணிந்து செல்லும் ஜெயாண்ணை, சம்பவம் நடந்த அன்று மட்டும் தலைக்கவசம் அணியாமல் சென்றுள்ளார். துப்பாக்கிச்சூட்டுக்கு துல்லியமான இலக்கை அடையாளப்படுத்தும் நோக்கில் யாராவது அவரது தலைக்கவசத்தை மறைத்து வைத்தார்களா...அல்லது உண்மையிலேயே வேலைப்பளுவால் மறந்து சென்றாரா?

### கொலைக்குறிப்பு 03

ஜெயாண்ணை தங்கிநிற்கும் வீட்டுக்கு நேரெதிரே உள்ள வீட்டில், சம்பவ தினத்துக்கு முதல் நாளிரவு கண்ணாவின் மனைவி வந்து தங்கி நின்றுள்ளார். அது அவரது உறவினரின் வீடு. “அவர் எங்கையோ துவக்கைத் தூக்கிக்கொண்டு போட்டார்” என்று தங்கிநின்ற வீட்டு உறவுக் காரரிடம் கண்ணாவின் மனைவி பதற்றமாகக் கூறியுள்ளார். இத் தகவல் தொடர்பாக எமது புலனாய்வுக்குழு அந்தப் பெண்ணிடம் வினவிய போது தான் எங்கும் தங்கவில்லை என தெரிவித்தார். எனினும் குறித்த வீட்டார் , கண்ணாவின் மனைவி தங்கள் வீட்டில் அன்று தங்கியதை உறுதி செய்தனர். ஏன் அவர் அங்கு தங்கவில்லை என்று பொய் சொல்ல வேண்டும்?

# கொழும்பும் டெல்லியும்

சோமீதரன்

தலைநகர் பற்றியெரியத் தொடங்கியது. குற்றுயிராகக் கிடந்த ஒரு மனிதன் அம்மணமாக மன்றாடுவதைக் கொலைவெறி கொண்ட கும்பல் கோசம் போட்டு ரசித்தது. இனவாதமும் மதவாதமும் தலைக்கேறி மதியிழந்த கும்பல் கொலை வெறியோடு சிறுபான்மை இந்து மற்றும் கிறிஸ்தவ தமிழர்களின் வீடுகள் கடைகளைத் தேடித்தேடி சூறையாடியது.

இந்துக் கோயில்களுக்குள் புகுந்த கும்பல் கடவுளர்களின் சிலைகளை உடைத்தது. கடவுளரின் சிலைகளின் தலையற்ற உடலை வீதியில் தூக்கி எறிந்தது. அவர்கள் பௌத்த சிங்கள கொடிகளை ஏந்தியிருந்தார்கள்.

தமிழர்களே ... இது பௌத்த சிங்கள தேசம். எங்களுக்கு கட்டுப்பட்டு இருப்பதென்றால் இருங்கள். இல்லையேல் நீங்கள் இந்தியாவுக்கு ஓடிவிடுங்கள்" என்று சொல்லிச் சொல்லி அடித்தார்கள். இரண்டு நாட்களைத் தாண்டி கலவரம் தொடர்ந்தது. பெரும்பான்மை பௌத்த சிங்களவர்களை கொண்டிருந்த காவல்துறை கலவரத்தை வேடிக்கை பார்த்தது. பல இடங்களில் கலவரக்காரர்களுக்கு துணை போனது. பல இடங்களில் பௌத்த துறவிகளும் கலவரக்காரர்களை வழி நடத்தினர். இராணுவம் வரவழைக்கப்பட்டது ஆனாலும் கலவரத்தை அடக்க முடியவில்லை.

சக மனிதன் மீது திட்டமிட்டு தாக்குதல் நிகழ்வதைப் பார்த்து மனம் கலங்கிய சிங்களவர்கள் தமிழரைக் காப்பாற்ற எத்தனித்தனர். ஆனால் இனவெறிக் கும்பல் அவர்களை இனத் துரோகி என்றது. பல சிங்களபௌத்தர்கள் இந்த இனவெறித் தாக்குதலில் உடன்பாடு இல்லாவிட்டாலும், பெரும் இனவாதத் தாக்குதலுக்குப் பயந்து கண்முன்னே நிகழும் ஒடுக்குமுறையை நமக்கேன் பொல்லாப்பு என மௌனமாக பார்த்திருந்தனர்.

அப்போதெல்லாம் சிங்களவர்களும் தமிழர்களும் ஒரே கட்டடத்தில் ஒன்றாக குடியிருந்தார்கள். வர்த்தகத்தில் ஒன்றுக்குள் ஒன்றாக இருந்தார்கள். ஆனால் எல்லாவற்றையும் இனவாத நெருப்பில் போட்டுப் பொசுக்கி எரித்தார்கள். கொழும்பில் தமிழருக்கு சொந்தமான திரைப்பட தாயாரிப்பு வளாகத்தைக் கொளுத்தி எரித்தார்கள். அந்த வளாகக் கட்டடத்தில்தான் ஏராளமான சிங்களத் திரைப்படங்களின் பிரதிகள் இருந்தன. அவை மீட்கமுடியாதபடி சாம்பலாகின. இப்படியாக மதவாத இன்வாதக் கும்பல் தங்கள் தேசத்திற்குரியதையும், நாட்டின் புகழையும் ,மக்களின் அமைதியையும் ,நிம்மதியையும், பொருளாதாரத்தையும் கலவரத்தீயில் எரித்தது.

இந்துக் கோயில்களை அழித்து தமிழர்களை இந்தியாவுக்கு விரட்டிவிடலாம் என்று அந்த கும்பல் கனவு கண்டது. ஆனால் இனவாதமும் மதவாதமும் மேலும் மேலும் அழிவுகளையே வழங்கியிப்பதற்கு இலங்கைத் தேசமே சாட்சி 1983 ஜீலையில் இந்த கலவரங்கள் தொடங்கியது. தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தேன். எனக்கு டெல்லித் தெருக்களெல்லாம் கொழும்பின் தெருக்களாயின.



# பிஞ்சு தூரிகைகள்

**பிரதீப் சஞ்ஜேய்**
தரம்– 1
யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.





**ம.பிரதீப்**
74/1 பத்திரகாளி கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

**க.ஜெஸ்மன்**
தரம்– 9
புனித ஹென்றியரசர் கல்லூரி,
இளவாலை அறைவீடு.





**சிவகுகன் பிருத்வி**
தரம்– 5
யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.




# நீங்களும் எழுதலாம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

- சிறுகதை
- கவிதை
- கட்டுரை
- பத்தி எழுத்து
- ஓவியம்
- மருத்துவம் தொடர்பான சந்தேகங்கள்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள். தரமானவற்றை பிரசுரிக்க

சஞ்சீவி காத்திருக்கிறது.

தொடர்புகளுக்கு 0773165555

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.